# உதயன்

சுடர்: 30 கதிர்: 072 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 23, வெள்ளிக்கிழமை 06.02.2015


வானிலை
மழையுடன் கூடிய வானிலை காணப்படும். இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## வடக்கில் புதிதாய் முகாம்கள் முளைக்காது

### இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் விவரமும் திரட்டப்படுகிறது.

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



கொழும்பு, பெப். 6
எதிர்காலத்தில் வடக்கில் புதிதாக இராணுவ முகாம்கள் எதுவும் அமைக்கப்படாது. வடக்கு மாகாணத்தில் இராணுவத் தேவைகள் தவிர்த்து ஏனைய தேவைகளுக்காக இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பிலான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.
இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன.
"வடக்கில் இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள தனியார் காணிகள் தொடர்பில் அரசு முக்கிய கவனம் செலுத்தியுள்ளது"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன் போது ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். பக்.24

## பொலிஸார் மீது வவுனியாவில் துப்பாக்கிச் சூடு

வவுனியா உளுக்குளம் காட்டுப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.
வவுனியா சூடுவெந்தபுலவு பெரிய உளுக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்ற இதில் எஸ்.பிரியந்த என்ற கான்ஸ்டபிளே காயமடைந்து வவுனியா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பக்.27

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கையெழுத்துப் போராட்டம்

கொழும்பு, பெப்.6
அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தி நேற்று 5ஆம் திகதி முதல் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை 7 நாள்களுக்கு பதாகையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை முன்னிலை சோஷலிஸக் கட்சியால் நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இந்தக் கையெ முத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. பக்.24

## அரச அதிபர்களுக்கு விரைவில் இடமாற்றம்

கொழும்பு, பெப். 6
நாட்டின் சகல மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இதற்கான அங்கீகாரம் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கிடைத்துள்ளது என்று, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
மைத்திரி அரசின் மூன்றாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. அமைச்சரவைக் கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் நேற்று எடுக்கப்பட்டுள்ளன.
தேசிய ஔடத சட்ட மூலத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும் நாட்டின் சகல மாவட்டங்களினதும் அரச அதிபர்களை இடமாற்றம் செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இருப்பினும் இந்த இடமாற்றம் எப்போது நடைமுறைப் படுத்தப்படும் என்று அமைச்சர் குறிப்பிடவில்லை. (ற-5)

## நஸீர் அகமட் கிழக்கு முதலமைச்சர்



மட்டக்களப்பு, பெப், 6
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் மாகாண அமைச்சருமான ஹாபீஸ் நஸீர் அஹமட் கிழக்கு மாகாண பக்.24



## கழிவு ஒயில் பிரச்சினைக்கு தீர்வு வேண்டி ஆர்ப்பாட்டம்

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ள பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வு, நிரந்தரத் தீர்வு என்பன உடனடியாக ஏற்படுத்தவேண்டும் என்று வலியுறுத்திச் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலுக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இலங்கை ஆசிரிய சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் 50 இற்கும் மேற்பட்டடோர் கலந்து கொண்டிருந்தனர். பக்.27

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் யாழ்.வருகை

### பலாலியில் இன்று முக்கிய கலந்துரையாடலில் பங்கேற்பார்

கொழும்பு, பெப். 06
வடக்கு - கிழக்குக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு இன்று வரவுள்ளதுடன், பலாலி இராணுவப் படைத் தளத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்றிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.
வடக்கு - கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக மூன்று நாள் பயணமாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன வடக்கு - கிழக்குக்கு வருகை தரவுள்ளார். இன்று மதியம் அவரது இந்தப் பயணம் ஆரம்பமாகின்றது. முதலாவதாக யாழ்ப்பாணத்துக்கு இன்று மாலை வருகை தரவுள்ளார்.
பலாலி இராணுவ கட்டளைத் தலைமையகத்தில் முக்கிய கலந்துரையாடலில் அவர் பங்கேற்கவுள்ளார். அதன் பின்னர் நாளை சனிக்கிழமை கிளிநொச்சிக்கு செல்லவுள்ளார். மறு நாள் ஞாயிற்றுக் கிழமை கிழக்கு மாகாணத்துக்குச் செல்லவுள்ளார்.
இந்தப் பயணங்களின் போது, படைக்குறைப்பு, மீள்குடியமர்வுக்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயவுள்ளார். இது தொடர்பில் ஆராய்ந்து பெறப்படும் அறிக்கைகள், ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு கையளிக்கப்படவுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், "வடக்கு - கிழக்குக்கான பயணத்தை முடித்துக் கொண்ட பக்.24

## ரவிகரனின் வீட்டுக்குள் இராணுவ தளபாடமாம்

### தேடுதல் நடத்த முயன்றது கடற்படை

யாழ்ப்பாணம், பெப். 6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனது வீட்டில் இராணுவத் தளபாடங்கள் இருப்பதாகத் தெரிவித்து கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.
ரெட்பானா பாரதி வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. மாகாணசபை உறுப்பினர் ரவிகரனால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. பாட சாலை மாணவர்களுக்கு அவற்றை வழங்கி விட்டு வாகனத்தில் ரவிகரன், கள்ளப்பாட்டிலுள்ள தனது வீட்டிற்கு திரும்பியுள்ளார். அப்போது வீட்டு வாசலில் வாகனத்தை நிறுத்தும் போது, அங்கே ஆட்டோ ஒன்று நின்றுள்ளது.
ஆட்டோவிலிருந்து சிவில்உடையில் இறங்கி வந்த ஒருவர், ரவிகரனிடம் வாகனத்தினுள் வைத்தே விசாரணை நடத்தியுள்ளார். இதன் பின்னர், வாகனத்தில் கொண்டு வந்த எஞ்சிய பொருள்களை வீட் டுக்குள் கொண்டு சென்றுள்ளனர். இதன் போது பக்.24

## நிலைக்குமா நல்லாட்சி?

பக்கம் 17

## தேசியக் கொடி ஏற்றவில்லை என விசாரணை

யாழ்ப்பாணம், பெப்.6
சுதந்திரதினமான நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபையில் தேசியக் கொடி ஏற்றப்படாமை தொடர்பில் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தொலைபேசியில் காரணம் கேட்டுள்ளனர் என்று அதன் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். பக்.24

## ஓமந்தை சோதனைச் சாவடியில் சோதனைகள் நிறுத்தப்படவில்லை

### திட்டவட்டமாகக் கூறுகின்றார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், பெப். 6
ஓமந்தை சோதனைச் சாவடியின் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை. அவை வழமைபோன்றே செயற்படும். அதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.
இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கே.ஜே.ஜெயவீர, 'உதயனுக்குத்' தெரிவித்தார்.
ஓமந்தை சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்டு வந்த சோதனை நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை முதல் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கமைய ஓமந்தை சோதனைச் சாவடியில் கடந்த இரண்டுதினங்களாக சோதனை நடவடிக்கைகளில் தளர்வு காணப்பட்டது. அத்துடன் ஏ-9 பாதையினூடாகச் சென்று ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு பிரதான பாதையிலிருந்து விலகிச் செல்ல வேண்டும். ஆனால் கடந்த இரண்டு தினங்களாக ஏ-9 பிரதான வீதியில், ஓமந்தை சோதனைச் சாவடியில் போடப்பட்டிருந்த பிரதான தடைகள் பக்.24

# சுதந்திர தினத்தில் பங்கேற்றது ஏன்?

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விளக்கம்



யாழ்ப்பாணம், பெப். 6
அரசியல் தீர்வு திட்ட முயற்சிகளில் நாங்கள் பங்காளிகளாக இருக்கத் தயார் என்பதைக் காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. விசேடமாக நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களுக்கு அந்த விதமான செய்தியைத் தெரிவிக்கவேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. அதனடிப்படையில் சுதந்திர தினத்தில்– புதிய சூழலில் நான் பங்குபற்றினேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய சுதந்திர தின வைபவம் நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது. இதில் 43 வருடங்களின் பின்னர் தமிழரசுக் கட்சி கலந்து கொண்டது. அந்தக்கட்சியின்சார்பில் இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கெடுத்திருந் தனர். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.


இந்த நிலையில் இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுதந்திர தினத்தில் பங்கு பற்றியமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆட்சி மாற்றத்தின் மூலமாக அதிகாரத்தை தற்போது கைப்பற்றியிருக்கின்றார்கள். நாட்டில் ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டும். சமத்துவத்தின் அடிப்படையில், வடக்கு மக்களுக்கும்– தெற்கு மக்களுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கம் ஏற்படவேண்டும்.

போரின் போதும்–போரின் பின்னரும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் நீங்க வேண்டும். ஓர் அரசியல் தீர்வு காணவேண்டும். அவ்விதமான கருத்துக்களை கூறிக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதற்கு ரிய திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருப்பதாகவும் நான்சொல்லமாட்டேன்.இருந்த போதிலும் கூட இவ்விதமான முயற்சிகளில் நாங்கள் பங்காளிகளாக இருக்கத் தயார் என்பதைக் காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

விசேடமாக நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களுக்கும் அந்த விதமான செய்தியை தெரிவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதனடிப்படையில் சுதந்திர தினத்தில் புதிய சூழலில் நான் பங்குபற்றிக் கொண்டுள்ளேன். விசேடமாக தமிழ் மக்கள் நன்மையடைவார்கள்–என்றார். (த–5)

# கே.பி மீது இறுகுகிறது பிடி



கொழும்பு, பெப். 6
கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் நாட்டைவிட்டு வெளியேற மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தடை விதித்துள்ளது.

குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி விஜித் மலல்கொட, ஏச். எம் டி நவாஸ் ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள் எப்பட்டது.

சர்வதேச நாடுகளிடம் இருந்து விடுதலை புலிகள் இயக்கத்திற்கு ஆயுதங்கள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்க முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாக விஜித ஹேரத் தாக்கல் செய்தி ருந்த மனுவில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த–5)

# மின் தடை

யாழ்ப்பாணம், பெப். 6
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்தமின்விநியோகமார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை .காலை 08.30 மணி யிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ். பிரதேசத் தில் கெருடாவில், கற்கோ வளம், மாதனை, நெல் லண்டை, வெளிச்ச வீடு, சிவப்பிரகாசம் நூலகம், கற்கோவளம் ஜெயந்தா கைத்தொழில் பூங்கா ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் முறிகண்டி, அக்கராயன், நாச்சிக்குடா, ஜெயபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம், 651 ஆவது படைப் பிரிவு, 652 ஆவது படைப்பிரிவு, கொமாண்டோ றெஜிமென்ட் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என மின்சார சபை அறி வித்துள்ளது. (த)

# சிறுபான்மையினரையும் அனுசரிக்கிறது புதிய அரசு

## அமைச்சர் ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 6
சிறுபான்மையினரையும் அனுசரித்தே தற்போதைய அரசு செயற்பட்டு வருகிறது. வடக்கு ஆளுநர், பிரதம செய லாளர் இடமாற்றம் தமிழ் அமைச்சர்கள் நியமனம் எல் லாம் அதனாலேயே. பல் வேறு கோணங்களில் இந்த அரசு சிந்தித்துச் செயற்படு கிறது என்று ராஜாங்க கல்வி அமைச்சர் வி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அவர் மூளாய் தென்னிந்தியத் திருச் சபையில் பிரார்த்தனை வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் கல்விக்கு அதிமுக்கியம் கொடுக்கிறார்கள். போர் பாதிப்பு இடம்பெற்ற போதும் இங்குள்ளவர்கள் தமது கல்வியில் அக்கறையுடனேயே இருந்துள்ளனர். ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர் கல்வி வரை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

வடக்குக்கு விரைவில் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளேன். மாணவர்களின் பிரச்சினைகள், ஆசிரியர்களின் பிரச்சினைகள், அதிபர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக் கப்படும்.

ஆனால் மிக முக்கிய விடயம் என்னவெனில் இங்குள்ள அதிகாரிகளால் அனுப்பப்படும் சில தகவல்கள் பிழையானதாக அமைந்துள்ளன. எனவே சரியான தகவல்களை இங்குள்ள அதிகாரிகள் வழங்கவேண்டும். இங்குள்ள நிர்வாகம் கடந்த ஆட்சியில் உரிய தகவல்களை வழங்கவில்லை.

மஹிந்தவின் பெயரைக் கேட்டால் அராஜகம் என்றே இங்குள்ளவர்கள் இதுவரை காலமும் இருந்தனர். 100 நாளில் பெரிதாகச் சாதித்து விடமுடியாது. அடிப்படை வேலைகளைச் செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். இந்தியத்தூதரக அதிகாரி தட்சணா மூர்த்தி உரையாற்றுகையில்,

வடக்கிலுள்ள மக்கள் கல்விக்கு எந்தளவு முக்கியம் கொடுக்கிறார்கள் என்பதனைத் தினமும் காண்கிறேன். பெற்றோர்கள் அதில் எந்தளவுக்கு அக்கறையாகவுள்ளனர் என்பதும் தெரியும். அப்படிப்பட்ட இந் தக் கல்வியைத் தனியாரிடம் வழங்க இடமளிக்கக்கூடாது. க.பொ.த சாதாரணதர, உயர்தர பரீட்சைகளின் பின்னர் உயர் கல்விக்கு இந்தியா செல்வதற்கு விரும்பினால் அதற்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று தெரிவித்தார். (த–4)

# புதிய அரசின் பட்ஜெட் சுதந்திரக்கட்சி ஆதரவு

கொழும்பு, பெப். 6
புதிய ஜனநாயக முன்னணி அரசின் இடைக்கால வரவு –செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவெடுத்துள்ளது என்று எதிர்க்கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றில்நேற்று நடைபெற்ற புதிய அரசின் இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நிதியமைச்சராக இருக்கும் ரவி கருணாநாயக்க எதிர்க் கட்சியில் இருக்கும் போது அப்போதைய வரவு– செலவுத் திட்டங்களில் இருந்த குறைபாடுகளைச்சுட்டிக்காட்டி விமர்சனம் செய்தார். எனவே அவ்வாறான குறைபாடுகளை இனி அவர் சரிசெய்ய வேண்டும்.பேச்சளவில்இருக்காது செயலிலும் காட்ட வேண்டும்.

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வை வரவேற் கின்றோம். அதில் எதிர்க்கட்சிக்கும் பங்கு இருப்பதை யிட்டு பெருமையடைகின் றோம்.

அத்துடன் பட்ஜெட் தொடர்பில்சில குழப்பங்களும் இருக்கின்றன. அதா வது கர்ப்பிணித் தாய் மார்க ளுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என கூறப்படுகின்றது. சுகாதார அமைச்சரின் தரவுகளின்படி வருடமொன்றுக்கு360,000 முதல் 400,000 வரைகுழந்தைகள் பிறக்கின்றன. எனவே, 8 பில்லியன் ரூபா நிதி தேவைப்படும். எனினும் பட் ஜெட்டில் 1000 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது இது 8 இல் ஒரு பங் காகும்.

அத்துடன் கஸினோ ஒழிக்கப்படவேண்டும் என கடந்த காலங்களில் கோஷங்கள் எழுப்பட்டன. ஆனாலும் கஸினோவுக்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபா வரி விதிக்கப் பட்டுள்ளது.

கஸினோ தொடர்பில் புதிய அரசின் நிலைப்பாடு என்ன? வாகன இறக்குமதிக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரிமுறை மை தொடர்பிலும் குழப்பகரமான நிலை இருக் கின்றது. மாளிகை வரி அற விடப்படும். வரியை அறவி டுவதற்கு பொறிமுறை குறித் தும் குறிப்பிடப்பட வில்லை என்றும் அவர் சுட் டிக்காட் டினார்.

அதேவேளை, தேவையான விமர்சனங்களை முன்வைப் பதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார். இடைக் கால பட்ஜெட்டுக்கு நாம் ஆத ரவளிப்போம் என்றார் அவர். (த)

# சபை அமர்வின் ஒளிபரப்பு; நேற்று கிளம்பியது சர்ச்சை

## பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய தினேஷ்

கொழும்பு, பெப். 6
நாடாளுமன்றத்தில் இடம் பெறும் சம்பவங்கள் மற்றும் விவரங்கள் தொடர் பான நேரடி ஒளிபரப்பு தொடர்பில் சர்ச்சை ஒன்று நேற்றுக் கிளம் பியது.முன்னாள்அமைச்சரும் இன்றைய எதிரணியின் சிரேஷ்ட உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனவே இந்த சர்ச்சையை எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது. வழமையான கேள்வி நேரத்தின்பின் சபா பீடத்தின் அனுமதியுடன் தினேஷ் குணவர்த்தன பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அப்போது அவர் அங்கு குறிப்பிட்டதாவது:–

இந்த சபையில் கடந்த 29 ஆம் திகதி இடைக்கால வரவு –செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது சபாநாயகர் ஒரு அறிவித்தலை விடுத்தார். அதாவது இந்த சபையின் செயற்பாடுகள் நேரடியாக ஒளிபரப்பப்படும். அதனை நாட்டு மக்கள் நேரடியாகப் பார்க்கக் கூடியதாக இருக்கும். எனவே உறுப்பினர்கள் நாகரிகமாக நடந்து கொள்வது நலம்–என்றார். ஆனால் இன்று வரை அப்படி எதுவும் நடைபெறவில்லை. சபையில் சபாநாயகர் அறிவித்த பின்னரும் அதனை செயற்படுத்த தவறியது ஏன்? அதனைத் தடுத்தது யார்? இதனை இந்த சபையில் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேள்விகளை தொடுத்தார் தினேஷ் குண வர்த்தன.

இவ் விடயம் தொடர்பாக பிர தமர் ரணில் விக்கிரம சிங்கவும் ஒன்றை சுட்டிக்காட்டினார்.உங்களுடைய இருண்ட ஆட்சியின்போது நாடாளுமன்றச் செயற்பாடுகளை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் நேரடியாக ஒளிபரப்பப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். ஆனால் அது உதாசீனம் செய்யப்பட்டது.

இன்று அதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவித்தலின்படிநேரடி ஒளிபரப்புசெய்வதில்ஏற்பட்ட தாமதங்கள், காரணிகள் தொடர்பாகசபாநாயகர்தலைமையில் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசித் தீர்மானிப்போம். நாமும் நேரடியாக ஒளிபரப்பப்படுவதை வரவேற்கின்றோம்–என்றார் பிரதமர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர்ரவிகருணாநாயக்கவும் தனது பங்குக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். வரவு–செலவுத் திட்ட விவா தங்கள் நேரடியாக ஒளி பரப்பப்படவேண்டும் என தொடர்ச்சியாக வலி யுறுத்தினோம். ஆனால் அன்று ஜனாதிபதியாக இருந்தவரும் முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுமே அதற்கு தடையாகச் செயல்பட்டனர். அன்று அதனை தட்டிக்கேட்க முடியாத தினேஷ் குணவர்த்தன இன்று சர்ச்சை எழுப்புவது வேடிக்கையானது என்று திருப்பியடித்து விட்டார். (த)




## இலங்கையின் சரித்திர நாயகன்

# சங்கா

இலங்கை கிரிக்கெட் அணியின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் சங்ககாரதான் என்று தெரிவித்துள்ள மேற்கிந்தியத்தீவுகளின் முன்னாள் அணித் தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ், இலங்கை அணி கிண்ணத்தை வெல்வதற்கு சங்காவின் – அனுபவமும் – திறமையும் கைகொடுக்கும் என்று தெரிவித்துள்ளார். உலகில் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் ஒரு சிலரே. அவர்களுக்கு சங்ககாரவும் ஒருவர். அவரது திறமைகளை குறைத்து மதிப்பிட முடியாது. கடந்த சில வருடங்களாக எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் சிறந்த கிரிக்கெட்டை விளையாடவில்லை. ஆனால் சங்கா டெஸ்ட் – ஒரு நாள் என்று சகலதுறையிலும் கலக்கி வருகின்றார். சங்கா தனது இறுதி உலகக் கிண்ணத்தில் விளையாடுகின்றார். இதனால் அவர் மீது எதிர்பார்ப்பு அதிகம் உள்ளது. சங்காவின் திறமை கைகொடுக்க இலங்கை அணி கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

(5)



## ஆஸி யின் அதிசய மனிதன்

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் அதிசயமான மனிதர் என்று புகழாரம் சூட்டி யுள்ள பயிற்சியாளர் லேமன், ஆஸி. பிரதமருக்கு அடுத்த நிலை யில் அவர் சக்தி வாய்ந்தவராக இருக் கின்றார் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் போது ஆஸ்தி ரேலிய அணியின் தலைவர் மைக் கல் கிளார்க் காயமடைந்தார். அதற்கடுத்த மூன்று டெஸ்ட் ஆட் டங்களில் அவரால் விளையாட முடியாமல் போனது. அவருக் குப் பதிலாக சிமித் அணியின் தலைவராக பொறுப்பேற்றார். அடுத்த மூன்று ஆட்டங்களிலும் சிமித் சிறப்பாகச் செயற்பட்டார். அத்துடன் தொடர் சதங்களை விளாசி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். இதனால், மைக்கல் கிளார்க்கின் சகாப்தம் முடிவுக்கு வருவதாகக் கருதப்பட்டது. ஆனால், கிளார்க் முழுமையாக குணமடையாத நிலையிலும், உலகக் கிண்ணத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் தலை வராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் ஆஸ்திரேலிய அணி யின் பயிற்சியாளர் டரன் லேமன், கிளார்க்குக்குத் தனது முழு ஆதரவைத் தெரிவித்துள் ளார். 'மைக்கல் கிளார்க் ஆஸ்திரேலிய அணியின் தலை வர். இது ஆஸ்திரேலிய பிரதமருக்கு அடுத்த இரண் டாவது முக்கியமான இடம். எங்களது அணியின் அணித் தலைவர் சிறப்பாக விளையாட வேண்டும் என்று நாங்கள் விரும்பு கிறோம். நான்கு ஆண்டு களுக்கு ஒரு முறை நடைபெறும் மிக முக்கி யமான தொடரான உலகக்கிண்ண தொட ருக்கு தலைமை தாங்க எங்களது தலைவர் முழு நலம் பெறவேண் டும். அவர் நிச்சயம் முழு உடல் தகுதியுடன் அணிக்கு திரும்புவார், என்றார்.

(5–ரி)



## அதிரடிக்கு அணை போடுகின்றது ஐ.சி.சி

கிரிக்கெட் என்றாலே இப்போது அதிரடிதான் என்ற நிலைமை காணப்படுகின்றது. அதிரடிக்காகவே ஒவ்வொரு துடுப்பாட்ட வீரரும் பிரத்தியேகமான துடுப்பு மட்டையைப் பயன்படுத்துகின்றனர்.

துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கத்தை கொஞ்சம் கட்டுப்படுத்தி. பந்து வீச்சாளர்களுக்கு விமோசனம் வழங்க ஐ.சி.சி தீர்மானித்துள்ளது. துடுப்பு மட்டையின் அள்வுகளை குறைப்பது. எல்லைக் கோட்டை அதிகப்படுத்துவது என்று பல மாற்றங்களை செய்ய ஐ.சி.சி பரிசீலனை செய்து வருகின்றது.

வில்லியர்ஸ். மக்கலம். சங்ககார. ஹேறக்லி போன்ற வீரர்கள் அதிரடி காட்டுவதில் எவ்வித வியப்பும் இல்லை. ஆனால். ஒரு சில வீரர்கள் சாதாரணமாக அடித்தாலே. ஆட்டமிழப்புக்கு பதில் ஆறு ஓட்டங்கள் கிடைக்கின்றது. இது பந்து வீச்சாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றம் வழங்குவதாக இருக்கின்றது. இதனால். துடுப்பு மட்டையின் அகலத்தை சற்று குறைக்க. உலக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மற்றும் விதிகளை ஏற்படுத்தும் குழு ஆராய்ந்து வருகிறது. (5–ரி)

## உலகக் கிண்ணம் என்ன சொல்லுகின்றது?

- நடப்பு உலகக் கிண்ணத் தொடரில். இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்திலேயே பாகிஸ்தானுடன் மோதுகிறது. ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் இந்த ஆட்டம். முதல் முறையாக மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின் இல்லாமல் இந்திய அணி பாகிஸ்தானை எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கது. உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானிடம் இதுவரை இந்தியா தோற்றதில்லை. நடப்பு சம்பியனான இந்திய அணிக்கு இந்த ஆட்டம் மிகவும் சவாலாகவே இருக்கும் என்று இந்திய முன்னாள் சுழல் நட்சத்திரம் வெங்கடபதி ராஜு கூறியுள்ளார்.
- சர்ச்சைகள் மற்றும் ஊழல் இல்லாமல் உலகக் கிண்ணத் தொடரை நடத்தி முடிப்பது தங்களுக்கு மிகப் பெரிய சவாலாக அமைந் துள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமை செயலதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் கூறியுள்ளார்.
- உலகக் கிண்ணத்தில் எந்த சவாலான இலக்கையும் சமாளிக்கும் அளவுக்கு இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவாக உள்ளது. ஆனால். இந்தியா வெற்றியைக் குவிக்க வேண்டும் என்றால் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பங்களிப்பது அவசியமாகும்' என்று அனுபவ சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார். (5)

# கிண்ண வேட்டை தொடக்கம்

## ஆதிக்கம் செலுத்திய ஆஸி.

இங்கிலாந்திலிருந்து போட்டித் தொடர் இடம்மாறியது. ஆசிய நாடுகள் ஆதிக்கம் செலுத்தியதால், இந்தியா – பாகிஸ்தான் இணைந்து நடத்தியது போட்டியை.

நான்காவது உலகக் கிண்ணத்தில், போட்டிகளும் கொஞ்சம் மாற்றமடைந்தன. இதுவரை 60 பந்துப் பரிமாற்றங்களுடன் நடந்தது போட்டி. முதன் முறையாக 50 பந்துப் பரிமாற்றங்களாக மாற்றப்பட்டது. ஆனால் அணிகளின் எண்ணிக்கையில் மாற்றமில்லை. எட்டு அணிகள், இரண்டு குழுக்கள். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூஸி லாந்து, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே. ஆசிய மண்ணில் தொடர் நடந்தது. இதில் ஆசிய அணிகள் ஆதிக்கம் செலுத்தின. கூடவே ஆஸ்திரேலிய அணியும் ஆதிக்கம் செலுத்தியது. கடந்த உலகக் கிண்ணத் தொடர் போன்று ஒவ்வொரு அணிகளும் இரு முறை லீக்கில் மோதிக் கொண்டன.



# லீக் ஆட்டம்

பாகிஸ்தான் மண்ணில் முதலாவது ஆட்டம். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8 நடந்தது ஆட்டம். இலங்கையுடன் மோதியது பாகிஸ்தான். போராட்டத்தை இலங்கை வெளிப்படுத்தியது. இருப்பினும் இறுதியில் பாகிஸ்தான் 15 ஓட் டங்களால் வெற்றியைப் பெற்றது.

மறுநாள் இந்தியா, ஆஸ்திரேலியா இடையில் இந்திய மண்ணில் ஆட்டம். ஆஸி. மயிரிழை யில் ஒரு ஓட்டத்தால் வெற்றியை வசப்படுத்தி யது. இந்த வெற்றியுடன் ஆதிக்கத்தை தொடர்ந் தது ஆஸி. ஆனாலும் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து, நியூஸிலாந்து, சிம்பாப்வே என்று அணிகளை புரட்டி எடுத்தன. சொந்த மண்ணில் போட்டி என்பதால், இந்தியாவும் – பாகிஸ்தானும் புகுந்து விளையாடியது.

ஆசிய அணியான இலங்கையின் நிலைமை பரிதாபம். 1979, 1983 ஆம் ஆண்டுகளில் ஆறு தல் வெற்றிகளைப் பெற்ற இலங்கையால், இந்தத் தொடரில் ஒரு வெற்றியைக் கூடப் பதிவு செய்ய முடியவில்லை.

50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டித் தொடர். மயிரிழை வெற்றிகள் பல இதனால் பதிவு செய்யப்பட்டன. விறுவிறுப்பான தொட ராகவே லீக் ஆட்டங்கள் நடந்தேறின. ஆரம் பத்தில் ஆஸ்திரேலியா, இந்தியாவைச் சரித்தது. ஆனாலும் டில்லியில் நடந்த மற்றொரு லீக் ஆட்டத்தில் ஆஸியை அசர வைத்தது இந்தியா. நடப்புச் சம்பியன் என்பதை, இந்தியா நிரூபித்தது.

மறுபுறம் பாகிஸ்தான் லீக் ஆட்டத்தில் சகல அணிகளையும் தோற்கடித்தது. மேற்கிந்தியத் தீவுகளை ஒரு லீக் ஆட்டத்தில் தோற்கடித்தாலும், மற்றைய லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் பதிலடி கொடுத்தது.

கரீபியன்கள் இரு தடவைகள் சம்பியன். கடந்த தொடரில் இறுதி வரைக்கும் வந்தார்கள். ஆனாலும் இந்தத் தொடரில் அரையிறுதிக்கு கூட தகுதி பெறாது வெளியேறினர். மேற்கிந்தியத் தீவுகளுக்கு இந்தத் தொடருடன் பிடித்தது சோகம்.



## 1987 உலகக்கிண்ணம்

அதிகூடிய ஓட்டங்கள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | அதிகூடிய |
|---|---|---|---|
| ஜி.ஏ.கோச் [இங்கிலாந்து] | 08 | 471 | 115 |
| டி.சி.போன் [ஆஸ்திரேலியா] | 08 | 447 | 93 |
| ஜி.மார்ஷ் [ஆஸ்திரேலியா] | 08 | 428 | 126 |

அதிகூடிய இலக்குகள்

| | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த |
|---|---|---|---|
| சி.மக்டெர்மொட் [ஆஸ்.] | 08 | 18 | 5/44 |
| இம்ரான்கான் [பாகிஸ்தான்] | 07 | 17 | 4/37 |
| பி.பற்றேர்சன் [மே.இ.தீவுகள்] | 06 | 14 | 3/81 |



# அரையிறுதி

ஆட்டத்தை நடத்திய பாகிஸ்தான், இந்தியாவுடன் ஆஸி, இங் கிலாந்து அணிகள் அரையிறுதிக்குள் நுழைந்து கொண்டன. அரையிறுதி ஆட்டங்கள் இந்த அணிகளுக்கு ஏற்கனவே பழக் கப்பட்டவை. லாகூரில் முதலாவது அரையிறுதி. ஆஸ்திரேலி யாவும் பாகிஸ்தானும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சி யில் வென்றது ஆஸி. தேர்ந்தெடுத்தது துடுப்பாட்டத்தை. ஆரம்பம் முதலே சரியான அடித்தளம் அமைத்தது. முன் வரிசை வீரர்களின் சராசரியான பங்களிப்புடன் 50 பந்துப் பரிமாற்றங்களில் 267 ஓட்டங்களை எட்டியது எட்டு இலக்குகளை இழந்து.

பதிலளித்து ஆடியது பாகிஸ்தான். ஆரம்பம் வாய்க்கவில்லை. அணித் தலைவர் இம்ரான் கான் – ஜாவிட் மியன்டாட் இணைப்பு வெற்றிக்கான அறிகுறியைக் காட்டியது. ஆனா லும் பின்வரிசை அதிரடி காட்டினாலும், வெற்றிக்குப் போது மான ஓட்டங்கள் இல்லை. இறுதியில் 249 ஓட்டங் களுடன் சுருண்டது பாகிஸ்தான். இரண்டாவது தடவை யாக இறுதிக்குள் நுழைந்தது ஆஸ்திரேலியா.

இந்தியாவும், இங்கிலாந்தும் மும்பையில் பலம் பார்த் தன. கடந்த உலகக் கிண்ணம் இங்கிலாந்தில் நடந்த போது, அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தை இந்தியா அதனது சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தியது. அதற்கு இங்கிலாந்து இந்தத் தடவை பழி தீர்த்துக் கொண்டது. இங் கிலாந்தை துடுப்பெடுத்தாட பணித்தது இந்தியா. வில்லங் கத்தை விலை கொடுத்து வாங் கியது.

கிரகம் கூச்சின் அதிரடி ஆட்டத்துடன் பலமான நிலைக்குச் சென்றது இங் கிலாந்து. இந்திய அணியின் சுழல்பந் துகள் எல்லாம் சுக்கு நூறாகியது. 6 இலக்குகளைப் பறிகொடுத்து 254 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக் குத் தொடங்கிய இந்தியாவுக்கு ஆரம்பம் நல்லாகவே அமைந்தது. அசாருதின் 64 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். 204 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து வெற்றியைநெருங்கிக்கொண் டிருந்தது. திடீரென அடுத்த 15 ஓட் டங்களுக்கு எஞ்சிய 5 இலக்குகளை யும் பறிகொடுத்தது.

நடப்புச் சம்பியன், போட்டியை நடத்தும் நாடு எல்லாவற்றையும் இந்தியா கொண்டிருந்த போதும், இங்கிலாந்து அதனைத் தகர்த்து இரண்டாவது முறையாக இறுதிக் குத் தகுதி பெற்றது.

# இறுதி ஆட்டம்

**ஆஸ்திரேலியா - இங்கிலாந்து** அணிகள் 1975, 1979 ஆம் ஆண்டுகளில் இறுதிக்கு வந்து மே.தீவுகளிடம் வாங்கிக் கட்டியவை. இந்தத் தடவை கிண்ணம் வெல்ல வேண்டும் என்ற துடிப்புடன் வெள்ளையர்கள் கள மிறங்கினர். ஆஸ்திரேலியா துடுப்பெடுத்தாடும் தீர்மா னத்தை முதலில் எடுத்தது.

ஆரம்பம் முதலே சீரான ஓட்ட வேகம். டேவிட் போனின் நிதான ஆரம்பமும், இறுதிக் கட்டத்தில் மைக் வெல்ராவின் அதிரடியும் கைகொடுத்தது. டேவிட் போன் 75 ஓட்டங்கள். மைக் வெல்ரா 31 பந்துகளில் 45 ஓட்டங்கள். ஆஸி. 253 ஓட்டங்களை 5 இலக்குகளை இழந்து பெற்றுக் கொண்டது. சவாலான இலக்கு அல்ல. ஆனாலும் இங்கிலாந்து தடுமாற்றம். பில் ஆத்தி 103 பந்துகளில் 58 ஓட்டங் கள். மோசமான நிதானத்தால் தவறியது ஆட்டத்தின் போக்கு. அணித் தலைவர் கட்ரிங், லம் என்று 40 ஓட்டங்களைச் சேர்த்துக் கொடுத்தனர். ஆனாலும் ஓட்ட வேகம் வெற்றி க்குப் போதவில்லை.

இறுதியில் 246 ஓட்டங்களை மாத்திரம் 8 இலக்குகளை இழந்து பெற்றது. அநியாயமாக 7 ஓட்டங்களால் ஆஸியின் கைக்கு கிண்ணம் சென்றது. ஆஸி.யின் கிண்ண வேட்டை ஆரம்பமானது.

## கொசுறுத் தகவல்

இந்திய அணிக்கும், நியூஸிலாந்து அணிக்கும் இடையில் நாக்பூரில் லீக் ஆட்டம் நடந்தது. இதில் இந்திய அணி யின் வேகப் பந்து வீச்சாளர் சேட்டன் சர்மா ஹற்றிக் எடுத்தார். இது தான் உலகக் கிண்ணத்தில் பெறப்பட்ட முதலாவது ஹற்றிக். 10 பந் துப் பரிமாற்றங் களில் 51 ஓட்டங் கள் கொடுத்து 3 இலக்குகள் சாய்த்தார் சர்மா.



வெள்ளிக்கிழமை பெப்ரவரி 06 2015 உதயன்

# உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம்!




## நாங்களே

உதயன் உலகக் கிண்ண
கொண்டாட்டம், உங்களுடன்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள்
எழுத்துக்களை.
நீங்கள் பார்த்த உலகக் கிண்ண ஆட்டம்– தொடர், நடப்பு உலகக் கிண்ண
தொடர்பிலான விமர்சனம்.....

எழுதுங்கள்...
எழுதுங்கள்....
எழுதிக் குவியுங்கள்...

cricket@uthayan.com
www.facebook.com/uthayan.print

'உலகக் கிண்ண வாசகர் கணை'
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



ஆச்சரியத்துக்கு உதயன் மட்டுமே

# ஆஸியில் லூட்டி அடிக்கும் இந்திய வீரர்கள்

ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்த இந்திய அணி அங்கு படுதோல்வியைச் சந்தித்தது. ஆஸியுடனான டெஸ்ட் தொடரைக் கோட்டை விட்டதுடன், முத்தரப்பு ஒரு நாள் தொடரிலும், இறுதிக்குள் நுழையாமல் வாங்கிக் கட்டியது.

ஆனால் இந்தத் தோல்விகளைப் பற்றிக் கவலைப் படாமல் இந்திய அணி வீரர்கள், ஆஸ்திரேலியாவில் உல்லாசமாக சுற்றுலாவுக்கு கிளம்பியுள்ளனர்.

அடிலெய்டில் இருந்து 150 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சாகச பூங்காவுக்கு அணித் தலைவர் டோனி, வேகப் பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர் குமார், இஷந்த் சர்மா மற்றும் வீரர் வரிசையில் இருக்கும் மொகித் ஷர்மா ஆகியோர் சென்றுள்ளனர்.

படகில் சென்று மீன் பிடிப்பது, செயற்கையான மலையேற்ற சாகசம் போன்ற வசதிகள் அந்தப் பூங்காவில் உள்ளன. இங்குள்ள வசதிகளை அனுபவித்து இந்திய வீரர்கள் உற்சாகமாக பொழுதைக் கழிக்கிறார்கள்.

'கடினமான தொடரில் விளையாடி வரும் எங்களுக்கு உலகக் கிண்ணத்துக்கு முன்பாக ஓய்வு தேவை.

அப்போதுதான் புத்துணர்ச்சியுடன் திரும்ப முடியும்' என்று டோனி கூறியிருந்தார். (5)



# தவறிழைக்கின்றது இந்தியா

இந்திய அணியில் யுவராஜ் சிங், சேவாக் போன்ற அனுபவசாலிகள் இல்லாதது மிகப் பெரிய இழப்பு. இதனால் இந்திய அணி தனது வெற்றி வாய்ப்பை, தானே குறைத்துள்ளது. இவ்வாறு பாகிஸ்தானின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அப்துல் காதிர் கூறியுள்ளார்.

ஆசிய அணிகள் எப்போதுமே மிகப் பெரிய தவறுகளை செய்வது இன்னும் எனக்கு புரியாத புதிராக உள்ளது. சேவாக், யுவராஜ் போன்றவர்கள் அனுபவசாலிகள், திறமையான வீரர்கள். இவர்கள் இல்லாமல் எப்படி இந்திய அணி முழுமை பெறும் என்று தெரியவில்லை.

கடந்த 2011 உலகக் கிண்ணத் தொடரின் போது ஷேவாக் முதல் ஆட்டத்தில் அபாரமாக சதம் போட்டார். யுவராஜ் சிங்கோ கடைசி வரை பிரமாதமாக ஆடியதுடன் தொடர் நாயகன் விருதையும் வென்றார்.

டோனி மிகச் சிறந்த அணித் தலைவராக இருக்கலாம். ஆனால் அவரால் மட்டுமே கிண்ணத்தை தக்க வைக்க முடியாது. ஒட்டு மொத்த அணியும் சிறப்பாக செயற்பட வேண்டியது அவசியம். அரை இறுதிக்கு ஒரே ஒரு ஆசிய அணி மட்டுமே நுழையும் என்பது எனது கணிப்பு என்று தெரிவித்துள்ளார். (5)



# அடக்கி வாசிக்க வேண்டும்

அதிரடி வீரர் மகஸ்வெல் அதிரடியை அடக்கி வாசிக்க வேண்டும் என்று சக வீரரும் மற்றொரு அதிரடி மன்னனுமான டேவிட் வோர்ணர் தெரிவித்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்று முடிந்த முத்தரப்பு ஒரு நாள் ஆட்டத்தில் அபார திறனை வெளிப்படுத்திய மக்ஸ்வெல் தனது அதிரடியை உலக்கிண்ணத் தொடரிலும் தொடர்வார். அவருக்கே உரித்தான சகலதுறை திறைமையால் எதிரணியை அச்சுறுத்துவார்.

இது எமது அணிக்கு மிகப்பெரிய பலம். ஆனால் ஒரு பந்துப் பரிமாற்றத்தில் அதிக ஓட்டங்கள் வந்துவிட்ட பின்னர் சற்று பொறுமை காப்பது அவசியம். மக்ஸ்வெல் அனைத்து பந்துகளையும் அடித்து நொறுக்கி விட வேண்டும் என்ற முடிவுடன் உள்ளார். இது தவறு. ஒரு நான்கு அல்லது ஆறுக்கு ஆசைப் பட்டு இலக்கை பறிகொடுத்து விடக்கூடாது எனவே மக்ஸ் வெல் சற்று பொறுமை காத் தல் மிக அவசியம்– என் றார். (5–ரி)

லட்சம் லட்சமாய்...
பரிசுகளை
தினந்தோறும்
அள்ள

# நீங்கள் தயாரா?

நமக்கு மிக
நெருக்கமானவர்களுக்கு
மட்டுமே தெரியும்
நம்மை எங்கே அடித்தால்
வலிக்கும் என்று...!!!

# மீண்டும் ஐஸ்



நடிகை ஐஸ்வர்யாராய் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நடிக்கும் புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது. ஐஸ்வர்யாராய், 2010 ஆம் ஆண்டு கடைசியாக நடித்திருந்தார். அதன் பிறகு சினிமாவில் நடிக்கவில்லை.
மகள் ஆரத்யாவை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார். திரைப்பட வாய்ப்புகள் வந்தும் நடிக்கவில்லை. உடம்பும் எடை அதிகரித்தது. இந்த நிலையில் ஹிந்தி இயக்குநர் ஒருவர் ஐஸ்வர்யாராயை அணுகி ஒரு கதை சொன்னார். அது ஐஸ்வர்யாராய்க்கு பிடித்து போனது. நடிக்க சம்மதித்தார். இதையடுத்து கடும் உடற்பயிற்சிகள் செய்து எடையை குறைத்துள்ளார். அவர் நடிக்கும் திரைப்படத்துக்கு 'ஜஸ்பா' என்று பெயரிட்டுள்ளனர்.







# ரிலாக்ஸா வாசியுங்க...

ஒரு தேசத்தில் சிகரெட் விற் பனை கிடையாது. யாரும் குடிப் பதும் கிடையாது. அங்கு உள்ள சிகரெட் நிறுவனம் ஒரு ஆளை வேலைக்குச் சேர்த்தது. அவன் பரப்புரை உக்தியை கையாண் டான். அதற்கு ஒரு விளம்பரம் செய்தான்.
சிகரெட் குடித்தால்..!
1 திருடன் உங்கள் வீட்டுக்கு வர மாட்டான்
2 உங்களுக்கு முதுமையே வராது
3 பெண் குழந்தை பிறக்காது
இந்த விளம்பரத்தை பார்த்து எல் லோரும் சிகரெட் குடிக்க ஆரம் பித்து விட்டார்கள்.
அந்த தேசத்தில் இருந்த சமூக ஆர் வலர் ஒருவர் இந்தக் கதை தவறு என்பதை நீருபிக்க உச்ச நீதி மன் றத்தில் வழக்கு தொடர்ந்தார்.
நீதி மன்றத்தில் வழக்கு வந்தது. சிக ரெட் விற்பனை பிரதிநிதி நீதி மன்றதின் முன்னிலையானான். நீதிபதி அவரி டம், 'இப்படி ஒரு கருத்தை விளம்பரம் செய்து உள்ளாய். இது அறிவியலுக்கு ஏற்றதாய் இல் லையே..!!' என்று கேட்டார்
அதற்கு அவன் சொன்னான், 'முத லில் நான் என்ன சொன்னேன்...?
திருடன் உங்கள் வீட்டுக்கு வரமாட் டான். ஆமாம் வரமாட்டான். கார ணம் எப்பொழுது சிகரெட் குடிக்க ஆரம் பித்து விட்டார்களோ அப் பொழுதே இருமல் வந்து விடும். இருமிக் கொண்டே இருப்பதால் இவர்களுக்கு தூக்கம் வராது. முழித்து கொண்டு இருக்கிறார்கள் என்று திருடன் வர மாட்டான்.
இரண்டாவது என்ன சொன்னேன். முது மையே வராது... எப்படி வரும்...? சிகரெட் குடித்தால் இள மையிலே செத்து விடுவான். எப் படி முதுமை வரும்...?
மூன்றாவது என்ன சொன்னேன். பெண் குழந்தை பிறக்காது... எப்படி பிறக் கும்? சிகரெட்டில்நிக்கோடின்எனும் நச்சு தன்மை இருப்பதால் மலட்டு தன்மை வந்துவிடும். பிள் ளைப் பேறே இருக்காது. இதில் ஆண் என்ன பெண் என்ன பிள்ளையே பிறக்காது. என்று சொல்லி முடித்தான்.
அவன் சொன்னது சரிதான். நாம் தான் யோசித்து முடிவு எடுக்க தவறிவிட் டோம் என்று வழக்கை தள்ளுபடி செய்தார் நீதிபதி.

# ஏன் இந்தக் கொடூரம்

அமெரிக்கா, வெனிசுலா வைச் சேர்ந்தவர்கள் பச்சை குத்தும் (டட்டூ) நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். இவ் வாறான நிகழ்வு லத்தீன் அமெரிக்காவிலும் நடைபெறு கின்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண் டோர் உடல் முழுவதும் டட்டூ குத்திக் கொண்டு உடலில் துளைகளை இட்டுக் கொண்டும் மிகவும் அகோரமாக காட்சியளிக் கின்றனர். உட லில் டட்டூ குத்திக்கொள்வது சகஜம் என்றாலும் கண்களில் டட்டூ குத்திகொள்ளும் பழக் கம் யாரிடமும் இல்லை. ஆனால் இவர்கள்; கண்க ளிலும் டட்டூ குத்திக்கொண் டுள்ளனர்.
இது மாத்திரமல்லாது உடலமைப்புகளிலும் மாற்றம் செய்துள்ளனர். மாட்டுக்கொம்பு போல தலையை புடைக்க வைத்தல், பற்களை தீட்டி கூராக்கிக்கொள்ளுதல் போன்ற பல்வேறு அலங்காரங்களைச் செய்து கொண்டுள் ளனர். இந்த அலங்காரத்தின் பின்னர் யாரென்று அடை யாளம் தெரியாத அளவுக்கு உருவம் மாற்றப்பட்டுள்ளது.





இன்றைய நாள் உங்களுக்கு எப்படி

மேடம்: நல்ல செயல்களைச் செய்து சிறப்படைவீர்கள். உங்கள் பெயரும், புகழும் வளரும். குடத்துக்குள் இட்ட விளக்காய் செயலாற்றி வந்த நீங்கள் வெளியுலகில் அறியப்படுவீர்கள்.

**இடபம்**: குறுகிய வட்டத்தில் இருந்த நீங்கள் உங்கள் செயல்களை விரிவுபடுத்துவீர்கள். இல்லத்திற்குத் தேவையான நவீன உபகர ணங்களை வாங்கு வீர்கள்.

**மிதுனம்**: உங்களின் செயல்களை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை யைக் காண்பீர்கள்.

**கடகம்**: உங்கள் வேலைகளுக்கு உரிய அங்கீகாரத்தை மேலதிகாரிகள் வழங்குவார்கள். சக ஊழியர்கள் சற்று தள்ளியே இருப்பார்கள். அவர்களை உங்களின் அமைதியான குணத் தால் அனுசரித்து நடந்துகொள்வீர்கள்.

**சிங்கம்**: கூட்டாளிகள் உங்களிடம் நட்போடு பழகுவார்கள். உங்களின் வியாபார யுக்திகள் சரி யான இலக்குகளைச் சென்றடையும். சிறிய முதலீடு களில் பெரிய வருமானத்தைக் காண்பீர்கள்.

**கன்னி**: சமுதாயப் பணி செய்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவீர்கள். இதனால் பாராட்டுக் கிடைக் கும். தொண்டர்கள் உங்கள் சொல் கேட்டு நடப் பார்கள்.

**துலாம்**: உங்கள் துறையில் உள்ள நுணுக்கங்களை அறிந்து வைத்துக்கொள்வீர்கள். அவற்றை தகுந்த சமயத்தில் உபயோகித்து வெற்றி பெறுவதற்கு ஏது வான சூழ்நிலை உண்டாகும்.

**விருச்சிகம்**: புதிய வாய்ப்புகள் வரும். குடும்பத் தில் சந்தோஷத்தைக் காண்பீர்கள். உறவினர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். உங் கள் கடமையை சரியாகச் செய்யுங்கள்.

**தனுசு**: நண்பர்கள் ஆதரவு நல்ல முறை யிலேயே கிடைக்கும். உங்களின் வாக்கு வன்மை அதிகரிக்கும். உடல் நலம் திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்**: சமுதாயத்தில் உங்கள் பெயரும், புகழும் உயரும். தீயவர்களின் தொடர்பு தானாகவே வில கும். எந்தச் செயலைச் செய்தாலும் அதில் உங் களின் தனித்தன்மையை வெளிப்படுத்துவீர்கள்.

**கும்பம்**: சகோதர, சகோதரிகள் காரணமில்லாமல் விரோதம் பாராட்டுவார்கள். அதனால் அவர் களிடம் அநாவசிய நெருக்கம் வேண்டாம். கடின மான விடயங்கள்கூட உங்கள் முயற்சியால் சீராகும்.

**மீனம்**: சமுதாயத்தில் முக்கியஸ்தர் என்கிற அந்தஸ்துக்கு உயர்ந்துவிடுவீர்கள். மேலும் அர சிலிருந்து எதிர்பார்த்த சலுகைகள் உங்களை வந்தடையும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங் களைச் செய்து பயனடைவீர்கள்.

# மைத்திரி யுகத்தில் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என நம்பிக்கை

## சம்பூர் மக்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

மூதூர், பெப்.6

கடந்த ஒன்பது வருடங்களாக அகதி முகாம்களில் சொல்லொணாத் துயரங்களுடன் வாழ்ந்து வரும் சம்பூர் மக்கள், மைத்திரி யுகத்திலாவது தமது பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் கேள்வியுடனும், 800 பேருக்கு மேற்பட்ட நபர்களினதும் 10 இற்கும் மேற் பட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களினதும் கையொப்பங்களுடான கடிதம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட அந்தக்கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"கடந்த 9 வருடங்களாக கிளிவெட்டி, பட்டித்தி டல், மணற்சேனை, கட்டைப்பறிச்சான் ஆகிய நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் சார்பில் எமது மீள் குடியேற்றம் தொடர்பான கோரிக்கையை தங்களின் கவனத்துக்குக் கொண்டு வரு கின்றோம்.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இன்று வரை நாம் இத்துயரத்தை அனுபவிக்கின்றோம். இடம்பெயர்ந்த காலம் தொடக்கம் எமக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு பங்கீடு 2011 ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் முதல் நிறுத்தப் பட்ட நிலையில் எமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், அன்றாடவாழ்வுஉட்பட அனைத்துத் தேவை களுக்கும் போராடுபவர்க ளாக நாம் வாழ வேண்டி யுள்ளது. அத்துடன் பொரு ளாதாரம், சமூக முன்னேற் றம் அனைத்தும் இழந்த மக்களாக எதிர் காலம் குறித்த அச்சத்துடன் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வாழ்வாதாரத்தை முற் றாக இழந்தவர்களாக நாங் கள் நலன்புரி நிலையங் களில் வாழ்கின்ற அதே வேளை, எமது விவசாய நிலங்கள் தரிசு நிலங் களாக மாறி வருகின்றன. வளமான விவசாய நிலங் களும், 218 குடும்பங்கள் வாழ்ந்து வந்த அவர்களுக்குச் சொந்தமான குடி யிருப்புக் காணிகளும் அடையாளப்படுத்தப்பட்ட பல்வேறு நிறுவனங்க ளுக்கு குத்தகைக்கு வழங் குவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை தவிர ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பழைமை வாய்ந்த சம்பூர் கிராமத் தில் பிரபலமான சம்பூர் மகா வித்தியாலயம் உட் பட பல்வேறு பௌதிக வளங்களையும் உள்ளடக்கிய 218 ஏக்கர் பரப்பளவுடைய 637 குடும்பங்கள் வாழ்ந்த பிரதான பகுதி இன்னமும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

இந்தக் காரணங்களை முன்னிறுத்தியே, இன்றுவரை எமது மீள் குடியேற்றம் மறுக்கப்படுகின்றது. இவை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிக்கு நாம் பல முறை முறையிட்டும் எமது மீள் குடியேற்றம் தொடர்பாக அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் நல்லாட்சிக்கான அறை கூவலை விடுத்து ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் போட்டியிட்ட போது நலன்புரி நிலையங் களில் வாழும் நாங்கள் தங்களை முழுமையாக ஆதரிக்கும் தீர்மானத்தை மேற்கொண்டோம். தங்கள் வெற்றியில் நாங்களும் பங்காளர்களானோம்.

எமது முழுமையான ஆதரவுடன் கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் தங்களுக்கு இலங்கையி லேயே இரண்டாவது அதிக படியான ஆதரவைத் தந்த தொகுதியாக மூதூர்த் தொகுதி பதிவாகியது. தாங்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்ற நிமிடம் முதல் எமது சொந்த மண்ணில் குடியேறும் எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் நாம் நாள்களை எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். எனவே நூறு நாள்களுள் நல்லாட்சியை நோக்காகக் கொண்டு தாங்கள் எடுக்கப்போகும் நடவடிக்கைகளில் எமது மீள் குடியேற்றம் தொடர்பான நடவடிக்கையும் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நாட்டில் ஏற்படப்போகும் மாற்றம் எமது அவல வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என் றும் எமது சொந்த மண் ணில் வாழ முடி யும் என்றும் நம்புகின்றோம். எனவே இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு சம்பூர் மீள் குடியேற்றம் தொடர்பாக தங்களின் நேரடிக் கவனத்தைச் செலுத்தி எமது சொந்த மண்ணில் குடியேறி எமது விவசாய நிலங்களில் விவசாயம் செய்து கொண்டு கடற்றொழிலில் ஈடுபட்டு எமது வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி சுதந்திரமான, அமைதியான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவும், நிம்மதியாக வாழவும் நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்"– என்றுள்ளது.

(வ–40)

**தவறிவிட்டது**
கந்தரின் நோபாய் சிவகுரு ஜோசப் என்பவருடைய தே.அ.அட்டை (646092566V) அத்துடன் பேஸ் 31.01.2015 அன்று ஆஸ்பத்திரி வீதி, BOC வங்கி அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 077 750 6568

**வீடு விற்பனைக்கு**
சாவகச்சேரி கற்குளி வீதி, பாலாதி யேட்டர் அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 706 5299

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்
40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
அஜீத் நடிக்கும்
என்னை அறிந்தால்



காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30

## நேற்று திறந்து வைக்கப்பட்டது துர்க்கா மகளிர் வீட்டுத் திட்டம்



வலி.வடக்கு, பெப்.6

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தால் துர்க்கையம்மன் ஆலயத்தில் வாழும் பிள்ளைகளின் எதிர் கால நன்மை கருதி நிர்மாணிக்கப்பட்ட துர்க்கா மகளிர் வீட்டுத் திட்டம் குறித்த ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் திறந்து வைக் கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம் மன் ஆலயத்தில் இருந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆறு வீடுகளுக்குமான படங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல் லப்பட்டன.

அதனைத் தொடர்ந்து விருந் தினர்கள் மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக வீதியில் இருந்து வீட்டுத் திட்டம் அமைந் துள்ள இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நினை வுப் பலகையை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி எஸ் ஆனந்தராசா திரை நீக்கம் செய்து வைத்ததுடன் உரிய வீடுகளை விருந்தினர்களான மருத்துவ கலாநிதி ஆனந்த ராசா, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீமோக னன், மருத்துவ கலாநிதி ரவிராஜ், அமெரிக்க நாட்டின் ஹவாய் குரு பீட் தொண்டு நாத சுவாமிகள், நல்லை குரு முதல் வர் திருஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் மற்றும் திருமதி ஆனந்தராசா ஆகியோர் திறந்து வைத்தனர். (வ–86)

## சிறைச்சாலைகள் தலைமையகத்தில் பாவிக்காத நிலையில் 5 ஸ்கானர்கள்

கொழும்பு, பெப்.6

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசால் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தேவைக்காக அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்த 10 கோடி ரூபா பெறுமதி உடைய 5 'ஸ்கானர்' சாதனங்கள் பயன்படுத்தாதநிலையில்சிறைச்சாலைகள் தலைமையகத்தின் ஒரு புறத்தில் போடப்பட் டிருப்பதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.

நபர்களைப் பரிசோதிப்பது தொடர்பாக தருவிக்கப்பட் டுள்ள2 ஸ்கானர் சாதனங்களும் பொருள் பண்டங்களைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக தருவிக்கப்பட்டுள்ள 3 ஸ்கானர் சாதனங்களும் அவ்விதம் ஒருபுறத்தில் போடப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தச் சாதனங்களை தருவிப் பதற்கு முன்னர் அவற்றைப் பரிசோதித்துப் பார்ப்பது தொடர்பாக அமெரிக்கா சென்றிருந்த அதிகாரிகளுக்கு அவை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப ஞானம் இல்லாததால் அவற்றின் தரம் தொடர்பாக சிக்கல்கள் எழுந்திருப் பதாகவும், மேற்படித் திணைக்களத்தின் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக சிறைச்சாலை திணைக் களத்தின் உயர் அதிகாரி ஒருவர் "5 ஸ்கானர்கள் சிறைச் சாலைகள் தலைமையகத்தில் ஒரு மூலையில் போடப் பட்டிருப்பதை தாமும் அறிந்திருப்பதாகக் கூறனார்.(வ–22)




**வீடு, காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கண்டுக்குளி, கச்சேரிக்கு அருகில் 1½ பரப்பில் 3 அறைகள், 2குளியலறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
077 038 5881/077 036 2220

**காணி விற்பனைக்கு**
கோப்பாய் வடக்கு, இலகடி வீதியில் நுங்கியவத்தை 04 (நான்கு) பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: 077 600 7494

Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
இப்பொழுது திரையில்



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
பரராஜசேகரம் நந்தீஸ் அவர்களின் அன்புத் தந்தை

**கனகரத்தினம் பரராஜசேகரம்**

நேற்று (05.02.2015) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27.09.1946 — மறைவு 10.02.2012

அமரர் குப்புசாமி ஞானசேகரம்
(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க திருதியை
உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
மூன்று ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'சந்திரவாசா'
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

8 ஆம் ஆண்டு நினைவலைகள்



சித்தவைத்திய கலாநிதி
**வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி**
திதி: அபரபக்க திருதியை
(06.02.2015)

தோற்றம் 21.04.1940 — மறைவு 05.02.2007

வளம்பல கொழித்த மாமலை சரிந்ததோ?
விளங்கிய பொன்தேர் தீயில் எரிந்ததோ?
ஆருயிர் அப்பா! அருந்தவத் தந்தையே!
யாரிடம் போவோம்? யாரிடம் ஆறுவோம்.

"கந்தையா வளவு"
259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# இழுவைப்படகு பயன்பாட்டால் சாதாரண மீன்பிடியாளர் பாதிப்பு

## கிளி. இரணைமாதா நகர் கிராமிய கடற்றொழில் அமைப்பு ஜனாதிபதிக்கு மனு

கிளிநொச்சி, பெப்.6

நாச்சிக்குடா கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளைக் கொண்டு மீன்பிடிப் பதால் சாதாரண மீன்பிடியாளர் களின் தொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக கிளிநொச்சி இரணை மாதா நகர் கிராமிய கடற்றொ ழில் அமைப்பு தெரிவித்துள்ளது.

பூநகரி, நாச்சிக்குடாக் கடற் பரப்பில் குருநகர் பகுதியில் இருந்து போகும் இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன. இழுவைப்படகு தடை செய்யப் பட்டுள்ள தொழிலாக உள்ளபோது குருநகர் பகுதி மீனவர்கள் மட் டும் மீண்டும் தடைசெய்யப்பட்ட தொழிலை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இழுவைப் படகுத் தொழில் தடை செய்யப்பட்ட தொழிலாகும். அந்த வகையில் மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கும், கடல் வளத்தைப் பாதுகாப்பதற்கும் நல்லதொரு திட்டம் அரசால் கொண்டு வரப் பட்டது.

இந்த நிலையில் கிடைக்கப் பெற்றுள்ள ஆட்சி மாற்றத்தால் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான பல திட்டங்கள் முன்னெடுக் கப்படும் என நம்பி நிற்கின்றோம்.

இந்தநிலையில் எமது கடற்பரப் பில் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகள் மீண்டும் பயன்பாட்டில் உள்ளன. இதனால் பல இலட்சம் மதிப்பிலான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுகின்றன. அத்துடன் கடல் வளமும் அழிக்கப்படுகிறது. எனவே தடை செய்யப் பட்ட இந்த இழுவைப் படகு பாவனையை உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வு–14)

# ஆலய மரத்தில் காய்த்த தேங்காயில் பிள்ளையார்



கிளிநொச்சி, பெப்.6

கிளிநொச்சி, உடையார்கட்டு பகுதியில் உள்ள குரவையர் மாங்கனிப்பிள்ளையார் கோயிலில் தேங்காயில் பிள்ளையார் தோன்றிய அதிசயம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

உடையார்கட்டிலுள்ள குரவையர் மாங்கனிப்பிள்ளையார் கோவில் காணியில் வளர்ந்துநின்ற தென்னை மரத்திலே இந்த பிள்ளையார் போன்ற வடிவம் கொண்ட தேங்காய் ஒன்று காய்த்துள்ளது. இம்முறை இடம்பெற்ற பிள்ளை யார் கதையின் போதே இந்த அதிசயம் இடம்பெற்றுள்ளது. எனவே பிள்ளையார் கதையின்போது பிள்ளையார் வடி வம் கொண்ட இந்தத்தேங்காய் பூசையில் வைத்து வழிபடப்பட்டது. இதே போன்று கடந்தமுறை இடம் பெற்ற பிள்ளையார் கதையின் போதும் இவ் ஆலயக் காணியில் நின்ற மாமரம் ஒன்றில் காய்த்த மாங் காயிலும் பிள்ளையார் உருவம் தோன்றி யுள்ளது. போரின் பின்னர் வன்னிப்பகுதியில் உள்ள ஆலயங் களில் இவ்வாறான அதிசயங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் வேப்பமரத்தில் பால் வடிவது, கிணற்று நீர் மட்டம் உயர்தல் தற்போது இந்த கோயிலில் இடம் பெறும் அதிசயம். இவற்றை வைத்துப் பார்க்கும் போது ஏதோ ஒரு நம்பிக்கை தோன்றுவதாக குரவையர் மாங்கனிப்பிள்ளையார் ஆலயத்தின் தர்மகர்த்தா சோழநாத சர்மா கூறினார். (வ–21)

# கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு மோ.சைக்கிள்



கிளிநொச்சி, பெப்.6

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கான மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலில் திணைக்களங்களில் பணிபுரியும் 75 பொலிஸ் அதிகாரிகளுக்கே நேற்றையதினம் இந்த மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டன. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ரசா்து சொய்ஸா, பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த ஆகியோர் மோட்டார் சைக்கிள்களை வழங்கினர்.

இது போன்று நடைபெற்று முடிந்த ஜனாதிபதித்தேர்தலின் போது ஒரு தடவை 25 மோட்டார் சைக்கிள்களும், இரண்டாவது தடவை 30 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (வ–21)

# சமய அறிவுப் போட்டி

உரும்பிராய், பெப்.6

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்பாள் ஆலய சைவ மன்றத்தினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சைவசமய அறிவுப் போட்டிகளில் தரம் 1 முதல் 11 ஆம் தரத் திலுள்ள மாணவர்களுக் கான எழுத்துத் தேர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு உரும் பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பண்ணிசைப் போட்டி கள், பேச்சுப் போட்டிகள் 14 ஆம் திகதி சனிக் கிழமையன்று நடை பெறும் என்றும் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சிவராத் திரி தினத்தன்று ஆலயத் தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# விலை குறைப்பின் பயனை அனுபவிக்காத மட்டு.மக்கள்

## பழைய விலைக்கு பொருள்கள் விற்கப்படுவதால்

மட்டக்களப்பு, பெப்.6

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசின் வரவு-செலவுத்திட்டத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தகர்கள் பழைய விலையிலேயே பொருள்களை விற்பனை செய்து வருவதால் விலை குறைப்பின் பயனை அனுபவிக்க முடியவில்லை என்று பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு நகரம், காத்தான்குடி, ஆரையம்பதி உட்பட பல நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் பழைய விலைக்கே பொருள்கள் விற்பனையாவதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு கிலோ கோதுமை மாவுக்கு 12.50 குறைவடைந்துள்ளது. அவ்வாறானால் 50 கிலோ கொண்ட ஒரு மூடை மாவுக்கு 625 ரூபா குறைவடைந்துள்ள நிலையில் தொடர்ந்தும் கோதுமை மாவில் தயாரிக்கப்படும் சம்சா, பற்றீஸ், கட்லட், ரொட்டிவகைகள், கேக்வகைகள் உட்பட அனைத்துப் பொருள்களும் பழைய விலையிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் சாதாரண தேநீரை 10 ரூபாயாகவும் பால் தேநீரை 25 ரூபாயாகவும் விற்பனை செய்யுமாறு சிற்றுண்டிச்சாலைகளை கேட்டுள்ளபோதிலும் இம்மாவட்டத்தில் சாதாரண தேநீர் 15 ரூபாயாகவும் பால் தேநீர் 35 ரூபாயாகவுமே விற்பனை செய்யப்படுகின்றது. அதே நேரம் மாட்டிறைச்சியின் விலையும் காத்தான்குடி நகரில் மலைபோல் உயர்வடைந்துள்ளது. ஒரு கிலோ மாட்டிறைச்சி ஏனைய பிரதேசங்களில் 400 ரூபாயாகவிற்பனையாகின்றநிலையில் இப்பிரதேசத்தில் 600 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்திடம் முறையிட்டபோது நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றனர். ஆனால் அவ்வாறு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

இதுகுறித்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொது மக்கள் மாவட்ட அரச அதிபர் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகங்களையும் கோரியுள்ளனர்.

(வ)

## எழுத்தாளர் பொன்னுத்துரையின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.6

மக்கள் கலை இலக்கியப் பெரு மன்ற ஏற்பாட்டில் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலா சார

கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ் வில், எழுத்தாளரின் உருவப் படம் திரை நீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

அஞ்சலி உரைகளை யாழ்.

த.கலாமணி, சட்டத்தரணி ரெங்கன் தேவராசா, குப்பிளான் ஐ. சண்முகம் ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜி ஜோர்ஜ், மா.பாலசிங்கம், ச.சரத் சந்திரன், அ. யோகராசா, ஐ. சாந்தன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

# மெய் வன்மைப் போட்டிகள்

வட்டு.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந.சபாரத் தினசிங்கிதலைமையில்நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப் பணிப் பாளர் ச.கைலாசநாதனும் சிறப்பு விருந் தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் திருமதி கோசலை குலபாலசிங்கமும் கலந்துகொள்வர்.

(வ)

◆◆◆

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு அதிபர் எஸ்.சிவநேஸ்வரன் தலை மையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மேலதிக மாகா ணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேம வதி செல்வின், சிறப்பு விருந்தினராக வலி காமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பா ளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக திருமதி சாரதா தேவி பேராயிரவரும் கலந்துகொள்ள வுள்ளனர்.

(வ)

◆◆◆

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டிஇன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத் தில் அதிபர் ப.சந்திரபாகு தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந் திரனும், சிறப்பு விருந்தினராக வடம ராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (க.அ) திருமதி அ.பார்த்திபனும் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை நெல்லி யடி மத் திய கல்லூரி ஆசிரியர் திருமதி சறோஜினிதேவி ராஜேந்திரன் வழங்கிக் கௌர விப்பார். (வ-35)

◆◆◆

வடமராட்சிகிழக்குகுடத்தனைஅ.த.க.வித்தியாலய வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு வித்தியாலயமைதானத்தில் அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகவடமாகாணசபைஉறுப்பினர் ச.சுகிர்த னும் சிறப்பு விருந்தினராக மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி ச.திர விய ராசாவும் கலந்துகொள்வர்.

(ஒ)

◆◆◆

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு சென்.பிலிப்ஸ் விளையாட்டு மைதான்த்தில் நடை பெறும். அதிபர் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக தீவக வலயத்தின் ஓய்வுபெற்ற வல யக்கல்விப் பணிப்பாளர் ஜி.வீ. இராதா கிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர் களாக தீவக வலயக் கல்விப் பணிப் பாளர் தி.ஜோண் குயின் ரஸ், அல்லைப் பிட்டி கிராம அலுவலர் சி.இரட்ணேஸ் வரன், யாழ்ப்பாணம் அஞ்சற் பயிற் சிக்கல்லூரியின் போதனாசிரியர் செல்வி கலைமதி செல்லத்துரை ஆகி யோரும் கலந்துகொள்வர்.

(வ)

◆◆◆

ஏழாலை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குலபாலசிங்கமும் சிறப்பு விருந்தி னராக ஓய்வுபெற்ற அதிபர் திருமதி க.இரா ஜேந்திரமும் கலந்துகொள்வர்.

(வ)

◆◆◆

நெல்லியடி மத் திய கல்லூரியின் இல்ல மெய் வன் மைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 13.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் செ.சேது ராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிர தம விருந்தினராக பழைய மாணவனான பிரதேச மருத்துவ அதிகாரி, பிரதேச வைத்தியசாலை வரணி, வைத்தியகலாநிதி ப.கமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி சந்திராதேவி கமலநாதன் வழங்கிக் கௌரவிப்பார்.

(வ-35)


# சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரையறுக்கப்பட்டது

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான கூட்ட அறிவித்தல்

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| தொ. இல | கிளை இல | கிளைகளின் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | சுன்னாகம் | திருமதி ச.தயாதேவி | 15.02.2015 | மு.ப.10.00 மணி | தலைமைக்காரியாலயம் சுன்னாகம் |
| 02 | 02 | சந்தைபடி, சுன்னாகம் | திருமதி க.சித்திரகுமாரி | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 03 | 03 | சுன்னாகம் மேற்கு | திருமதி ஸ்ரீ.எமல்டா | 15.02.2015 | மு.ப.10.00 மணி | யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 04 | 04 | கந்தரோடை | இ.புவன்ராஜ | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 05 | 05 | உடுவில் டச்சு வீதி | பா.ஸ்ரீகுமார் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | ஜகபி ஆலடி, உடுவில் |
| 06 | 06 | சங்குவேலி | வே.பிரதீஸ்குமரன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 07 | 07 | உடுவில் மானிப்பாய் வீதி | இ.தயாகரன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | ஜகபி ஆலடி, உடுவில் |
| 08 | 08 | மல்வம் | க.பாலகிருஸ்ணன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 09 | 09 | உடுவில் தெற்கு | செ.செல்வகுமாரன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் - 20இல் கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில். |
| 10 | 10 | தாவடி தெற்கு | பா.பாலவரதன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 11 | 11 | தாவடி | க.சசிகரன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 12 | 12 | பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி | பொ.கோகுலன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | யா/இணுவில் இந்துக்கல்லூரி |
| 13 | 13 | இணுவில் சந்தி | பா.வாகீசன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் |
| 14 | 14 | கே.கே.எஸ்.வீதி, இணுவில் | ம.கபிலன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | யா/இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபம் |
| 15 | 15 | கே.கே.எஸ்.வீதி, இணுவில் | ச.சுவர்ணன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | யா/இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபம் |
| 16 | 16 | கே.கே.எஸ்.வீதி, உடுவில் | வை.சரவணன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | யா/உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை |
| 17 | 17 | கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் | திருமதி ஞா.ஜெயாமேரிகொன்சி | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கனகசூரியன் விமலாதேவி வீடு (நாகலிங்கம் செட்டியார்) |
| 18 | 18 | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | வ.நிதர்சன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | யா/சித்தி விநாயகர் வித்தியாசாலை - புன்னாலைக்கட்டுவன் |
| 19 | 19 | ஈவினை | இ.வேல்குமார் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 20 | 20 | குப்பிளான் | கு.நிசாந்தன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 21 | 21 | ஏழாலை வடக்கு | அ.தயாளன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 22 | 22 | ஏழாலை கிழக்கு | தே.வேணுகோபாலன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் 21இல் ஏழாலை வடக்கு, ஏழாலை |
| 23 | 23 | ஏழாலை தெற்கு | வி.ஜெயந்தன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 24 | 23A | ஏழாலை தெற்கு மயிலங்காடு | நா.குமணதாசன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் 23இல் ஏழாலை தெற்கு, ஏழாலை |
| 25 | 24 | ஏழாலை மத்தி | சி.அருணோதயன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக் கட்டடம் 25 இல் ஏழாலை மேற்கு, ஏழாலை |
| 26 | 25 | ஏழாலை மேற்கு | பா.குருபரன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 27 | 26 | திடற்புலம், வசாவிளான் | க.கமலநாதன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 28 | 28 | மயிலணி | க.திவாகரன் | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 29 | 29 | கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் | இ.விஜயமோகனராசா | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் |
| 30 | 30 | புன்னாலைக்கட்டுவன் வடக்கு | திருமதி பா.கலைச்செல்வி | 15.02.2015 | மு.ப.10.00 மணி | கிளைக்கட்டடம் 19 இல் ஈவினை |

சகல கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் 30.01.2015, 31.01.2015இல் தபால் மூலம் கூட்ட அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபை கூட்டத்துக்குச் சமூகமளிக்கத் தகைமையுடையவர்களுக்கு அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவிடத்து இந்த அறிவித்தலைப் பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
06.02.2015

(J19538)(12.3.7)

V.K.அருந்தவநாதன்,
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# பொருள்கள் விலை குறைப்பின் பின்னர் இரு தினங்களில் 120 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,பெப்.6
விலை குறைப்புச் செய்தும் வியாபாரிகள் அதிகவிலைக்குப் பொருள்களை விற்பனை செய்து வருகின்றமை தொடர்பில் இரண்டு நாள்களில் 120 இற்கும் மேற்பட்ட முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப் பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
"முறைப்பாடுகள் தொடர்பில் நாங்கள் அந்தந்த இடங்களுக்குச் சென்று விசாரணை நடத்தி வழக்குப் பதிவு செய்து வருகிறோம். அதிக விலைக்கு விற்பனை செய்யும் கடைக்காரர்கள் தொடர்பில் 021 321 9000 என்ற இலக்கத்துக்கு முறைப்பாடுகளை அறிவிக்க முடியும். இந்த இலக்கம் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பின்னர் 120 பேருக்கும் மேற்பட்டோர் முறைப்பாடுகள் தெரிவித்துள்ள னர். கடந்த ஞாயிறு, திங் கள் ஆகிய 2 நாள்களில் மாத்திரம் இந்த எண்ணிக்கை பதிவாகியுள்ளது.
பொதுமக்கள் தாம் கொள்வனவு செய்யும் பொருள் களுக்கான பற்றுச் சீட்டைத் தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும். பொருள்கள் தற்போதும் அதிக விலைக்கே விற்பனை செய்யப் பட்டால் எமக்கு முறையிடுங்கள். குறித்த வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்படும். வியாபாரிகள் அதிகமாக பெறப்பட்ட பணமும் உங்களுக்கு மீளப் பெற் றுத்தரப்படும்.
பால் மா பைக் கட்டுக்கள் விலைக் குறைப்புச் செய்யப் படாது முன்னைய விலைக்கே விற்பனை செய் யப்படுவ தாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கிடைக்கப் பெற்றவற்றில் பால்மா பைக் கற் தொடர்பானமுறைப் பாடுகளே அதிகம். வர்த்தகர்கள் அவற் றைப் பதுக்கி வைத் திருக்காது ஏதாவது முறைமை யைக் கையாண்டு பொது மக்களுக்கு புதிய விலைக்கு விற் பனை செய்து அவற் றின் எண் ணிக்கை தொடர் பில் பால்மா நிறுவனங்களுக்கு அல்லது அதன் முகவர்க ளுக்கு அறி வித்து மிகுதிப் பணத்தைப் பெற் றுக்கொள் ளலாம். சீமெந்து பைக்கட்டுக் களும் அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள் ளன என்று வசந்தசேகரன் மேலும் தெரிவித்தார்.
இதேவேளை– திருகோணமலையில் பால்மா பைக்கட்டுக் களில் அச்சிடப்பட்ட விலையை கத்தரித்து வைத்திருந்து பால் மா நிறுவனத்தினர் அல் லது முகவர் வரும்போது அந் தக் கத்தரித்தபகுதியைக்கொடுத்து பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ–4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அம்மாப்பிள்ளை நாகேசு



ஊறணி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இல.82/30, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்மாப்பிள்ளை நாகேசு நேற்று (05.02.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி- லட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நாகேசுவின் அன்பு மனைவியும், ராஜதுரை, சபாரட்ணம், நவரட்ணம் (ஜேர்மனி), கருணாவதி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கிளி, துரை, கிருஷ்ணர் ஆகியோரின் சகோதரியும், வண்ணமலர், லலிதா (ஜேர்மனி), விமலநாதன் ஆகியோரின் மாமியாரும், சிறிபாஸ்கரன், சாந்தாதேவி (லண்டன்), சிறீரஞ்சினி, யோகேஸ்வரன், சுரேஸ் (ஜேர்மனி), சிறீவரதன் (கனடா), சுகிதா, வரதன், கவிதா, ஈஸ்வரன், யசோதா, லூயிஸ் (சுவிஸ்), பிரகாஷ், வதனா, விஜிதா, ஜீவானந்தம், ஜெகதா, பாபு, அநுஜன், தர்மிலா, டினோசாந் ஆகியோரின் பேர்த்தியும், துவாரகா, றூபிகா (லண்டன்), சர்மிலா, தநூஜன், தயாபரன், நிரோஜன், நிதர்ஷன் (ஜேர்மனி), அபிரதன், சுடாங்கி, ராகுல், ராக்கேஷ், வைஸ்ணவி, ஜொய்சி (சுவிஸ்), தனுஷன், பானுஜன், கோபிஷா, ஜெனிவர், நரேன், கம்சனா, பிரவீன், அபிராம் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.82/30, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 1507

(86832) (4.3.7)

### திருமதி திரேசம்மா பிரான்சிஸ்பிள்ளை



கூழாவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா- பிரான்சிஸ்பிள்ளை நேற்று (05.02.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவரான பிரான்சிஸ்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம், செல்லத்துரை, செல்லையா, அக்கினேஸ் மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்துராணி, துரை, சறோஜா ஆகியோரின் அன்புத் தாயும், ஜேம்ஸ், ராணி, சிறி ஆகியோரின் பாசமிகு மாமியும், தங்கா, குமார் (இத்தாலி) ஜெயந்தி, வவி (பிரான்ஸ்), சாந்தி, ஜயராஜ் (பிரான்ஸ்), ஜெயராஜினி (லண்டன்), ஜெயலிஸ்ரா, அமலன் (லண்டன்), நிமலன் (லண்டன்), மோகன் (லண்டன்), யூட்தாஸ், ஜென்சி, தினேஷ், தீபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றொசாந்தன், பிறைசன், பிரிதன், றபிஷா,டிலக்ஷி, ஜென்சன், மதுஷா, விதுஷா, மனோஜா, டிலு, ஏஞ்ச லினா, கறோலினா, ஜென்சன், எய்ஷா, திலக்ஷ், டியூனி, டிறோனி, அன்சன், ராஜ், அனிஷா, ஜெறோன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.02.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் கட்டை,
கூழாவடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 321 9003

(86829) (45.3.7)

# கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம் சித்திவிநாயகர் ஸ்ரீமாக முத்து மாரியம்மன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 9 திகதி திங் கட்கிழமை காலை 9.33 மணிக்கு இடம் பெறும். கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.
மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மாவை ஆதீனப் பேரரசின் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாகிய மகாராஜ ஸ்ரீ து. இரத்தினசபாபதி தீக்ஷதர் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியை கள் இடம்பெறும்.
சுதுமலை குரு பீடாதிபதி மற்றும் இந்துநாகரிகத் துறை தலைவர் பேரா சிரியர் கலாநிதி மா.வேதநாதன் ஆகியோரின் ஆசியுரையும் இடம்பெறும். (வ–9)

# 'ஒவ்வா' நூல் அறிமுக நிகழ்வு

கவிஞர் ஸர்மிலா ஸெய்யித்தின் இரண்டாவது கவிதைத் தொகுதி யான 'ஒவ்வா' நூல் அறிமுக நிகழ்வும் விமர்சன உரைகளும் டேவிட் வீதி யில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத் தூது அழகியற் கல்லூரியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு நடைபெறும்.
யாழ் இலக்கியக் குவியத்தினர் ஏற்பாடு செய் துள்ள கவிஞர் சோ.பத்மநாதன் தலை மையில் இந்நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் படைப் பாளிகள், இலக்கிய ஆர் வலர்கள், வாச கர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம் என்று யாழ். இலக்கியக் குவியத்தினர் தெரிவித்துள்ளனர்.
(வ–10)

## மரண அறிவித்தல்

### கனகரட்ணம் பரராஜசேகரம்



நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் பரராஜசேகரம் நேற்று (05/02/2015) வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்- ஜெகசோதியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஐயாத்துரையின் மருமகனும் காலஞ்சென்ற விஜயலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் செல்வநாயகம் (கனடா)ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நந்தீஸ் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் வலிகாமம் வடக்கு பிரதேசசபை) அனுஷாந்தி (ஆசிரியை . யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலகுமார் (அதிபர், யா/ அராலி இந்துக் கல்லூரி), கௌசல்யா ஆகியோரின் அன்பு மாமனும், அஸ்வினி அபிவர்சன், அனுசயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06/02/2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கரயான்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் உதவி



யாழ்ப்பாணம்.ஜன.6
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் சங்கத் தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் இதய சத் திர சிகிச்சைக்கான உதவிப்பணம் வழங்கப்பட்டுள்ளது.
வறுமை நிலைக்குள் வாழும் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமைச் சேர்ந்த 5 பிள்ளைகளைக் கொண்ட குடும் பம் ஒன்றின் குடும்ப தலைவருக்கு இதய சத்திர சிகிச்சை செய்வதற்காக 8 இலட்சம் ரூபா நிதி தேவைப்பட்டுள்ளது.
இதற்காக குடும்பத்தவர்களால் சங்கத்துக்கு விடுக்கப் பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த சங்கத்தால் இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
எனினும் வறுமையில் வாழும் குடும்பத்தவர்களுக்கு சத்திர சிகிச்சைக்கு தேவையான நிதி வசதி போதவில்லை என்றும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (வ–14)

# சமுர்த்தி முத்திரை மீளாய்வு

கொடிகமாம், பெப்.6
மந்துவில்ஜே/347 கிராமசேவகர் பிரிவுக்குஉட்பட்ட சமுர்த்தி முத்தி ரைக்கான மீளாய்வு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு மந்துவில் வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. இதில் குறித்த பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி முத்திரை பெறு வோர் சமுர்த்தி பயனா ளிகள், குறிப் பாக குடும்ப அட்டை உடையவர்கள் அனை வரையும் தவ றாது சமுக மளிக்குமாறு கோரப்படுகின்றது.
(வ–105)

# பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.6
யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடத்தப் படும் பண்ணிசை திருக்குறள் மனனப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# கோப்பாய் முத்துமாரிக்கு மஹா கும்பாபிஷேகம்

கோப்பாய், பெப்.6
கோப்பாய்மத்தி,நாவலம் பதி மஹாமுத்துமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை கும்பாபிஷேக பெரும் சாந்தி தொடர்பான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நாளை சனிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழவுள்ளது.
இதனையடுத்து மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு மஹா கும்பாபிஷேகக் கிரியை ஆரம்பிக்கப் பட்டு கும்பங்கள் திருவீதிவலமாக எடுத் துவரப்பட்டு காலை 8.45 மணியளவில் விமானத் தூபி அபிஷேகமும் காலை 9.30 மணிக்கு முத்துமாரி அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகமும் நடைபெறும்.
பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வர சிவாச்சாரியார் தலைமை யில் இருபதுக்கு மேற்பட்ட அந்தண சிவாச்சாரியார்கள் இம் மஹாகும்பாபிஷேகக் கிரியைகளில் கலந்துகொள் கிறார்கள். (ஒ)

# சீனாவில் ஜிமெயிலுக்குத் தடை



மிகவும் இலகுவான முறையில் பயன்படுத்தக் கூடிய மின்னஞ்சல் சேவையை வழங்கி வரும் ஜிமெயிலுக்கு சீனாவில் தடை விதிக் கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. நேரடியாக கூகுள் தளத்திலிருந்து ஜிமெயிலை பயன் படுத்த முடியாத வசதி சீனாவில் காணப்பட்ட போதிலும் **Microsoft Outlook** போன்ற மூன்றாம் தரப்பு மென்பொருள்களினூடாக இந் தச்சேவை பெறப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்போது இவ்வாறு சேவையைப் பெறுவதற்கும் தடை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் கூகுளுக்கும் சீனாவுக்குமான உறவு முறிவடைந்து அந்தத் தளத்தைப் பாவிப்பதற்குச் சீனாவில் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பேரழிவுகளை முன்கூட்டி அறிவிக்க நவீன ரோபோ

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வுமையமான நாஸா குரங்கு வடிவத்தை ஒத்த ரோபோ ஒன்றினை வடி வமைத்துள்ளது.

இந்த ரோபோ சூழலில் இடம் பெறவுள்ள பேரழிவுகளை முன்கூட்டியே அறிவிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. நான்கு கால்களையும் ஏழு கமராக் களையும் கொண்டு இந்த ரோபோ உருவாக்கப் பட்டுள்ளது.

இதேவேளை– மனிதர்களைப் போன்று – நடக்கவும், இரண்டு கால்களில் எழுந்து நிற் கவும் இந்தரோபோக்களுக்கு முடியும். மேலும் இவை நேர்த் தியான தரைகளிலும், கரடு முரடான தரைகளிலும் நடந்து செல்லக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



## அன்ரோயிட் சாதனங்களில் மல்வேர் தாக்கம்

**The interiew** திரைப்படத்தினால் சைபர் தாக்குதலுக்கு உள் ளான சொனி நிறுவனம் அந்தத் திரைப்படத்தை வெளியிடுவதில் பல தடைகளை எதிர்நோக்கியுள்ளது.

இதன் காரணமாக குறிப்பிட்ட சில திரையரங்குகளில் மாத்திரமே திரையிடப்படவுள்ள இந்தத் திரைப்படம் **Youtube** தளத்தினூடாக இலவசமாகவும், **Google Play** மற்றும் **iTunes** தளங்களினூடாகவும் வெளியிடப்படவுள்ளது.



இந்த நிலையில் அன்ரோயிட் சாதனங்களுக்கான போலி அப்பிளிக் கேஷன் தயாரிக்கப்பட்டுள்ளது. திரைப்படத்தைப் பார்வையிடுவதற்காக இந்த அப்பிளிக் கேஷனை தரவிறக்கும்போது மல்வேரும் சேர்ந்து தரவிறக்கம் செய்யப்படுகின்றது. **Android** அல்லது **Badaccents** எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மல்வேர் ஆனது இதுவரை சுமார் 20,000 அன்ரோயிட் சாதனங்களைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## XIAOMI MI5 ஸ்மார்ட் கைபேசி

**Xiaomi** நிறுவனம் **Mi5** எனும் ஸ்மார்ட் கைபேசியை அறி முகம் செய்யவுள்ளதாக அறிவித்திருந் தது. இந்த நிலையில் தற்போது அந்தக் கைபேசி தொடர்பான தக வல்களும், ஒளிப்படமும் வெளி யாகியுள்ளன.



5.7 அங்குல அளவுடையதும், **2560 x 1440 Pixel Resolution** உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ள இந்தக் கைபேசியானது **QuaddCore Snapdragon 810 Processor**, 20.7 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இந்தக் கைபேசி அடுத்த வருடம் இடம்பெறவுள்ள **CEC (Consumer Electronics and Consumer)** நிகழ்வில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அம்மாடியோவ் இத்தனை பரிசுகளும் எமக்கா?

# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று, 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று, 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

30 அகவையில் உதயன்



## பிரான்ஸ் மீது தாக்குதல் தொடரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதி மிரட்டல்

பாரிஸ், பெப். 6
பிரான்ஸ் மீது புதிய தாக்குதல்களைத் தொடுக்க வாருங்கள் என ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அழைப்பு விடுப்பது போன்ற வீடியோ காட்சி வெளியாகியுள்ளது.

இஸ்லாமிய அரசு எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸால் வெளியிடப்பட்டுள்ள அந்த வீடியோ காட்சியில், அடையாளம் தெரியாத ஒரு முகமூடியணிந்த ஜிகாதி, பிரெஞ்சு முஸ்லிம்களை நாட்டைவிட்டு வெளியேறுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் மேலும் பலரைக் கொல்ல அழைப்பு விடுத்ததோடு, பிரெஞ்சுப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சார்லி ஹெப்டோ தாக்கு தலை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என அனைவரையும் தாக்குங்கள் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

சார்லி ஹெப்டோ மீதான தாக்குதலுக்கு அல்குவைதா பொறுப் பேற்று இருந்தாலும், உலகின் பல்வேறு மூலைகளிலும் இருக்கும் ஜிகாதிகளும் அந்தத் தாக்குதலை ஆதரித்தும் புகழ்ந்தும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# கமரூனில் மோதல் 200 தீவிரவாதிகள் சாவு

அபுயா, பெப். 6
நைஜீரியாவுக்கும் கமரூனுக்குமான எல்லைப் பகுதியின் இரு புறமும் போக்கோஹராம் தீவிரவாதிகளுக்கும், பன்னாட்டுப் படைகளுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. அந்த மோதலில் தமது துருப்புக்கள் ஒன்பது பேரும், 200 பேர் வரையிலான போக்கோஹராமின் தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளதாக சாட் நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

கமரூன் நாட்டிலுள்ள போடொகோல் நகரில் போக்கோஹராம் தீவிரவாதிகள் கட்டடங்களை எரித்தும், மக்களையும், அரச படையினரையும், கொன்றும் கொடூரச் செயல்களைப் புரிந்து வந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



இதனிடையே போக்கோஹராம் தீவிரவாதிகளை நைஜீரிய நகர்களான கம்பாரூ மற்றும் ந்காலா ஆகியவற்றிலிருந்து தமது நாட்டு இராணுவத்தினர் விரட்டியடித்துள்ளனர் என்று சாட் நாட்டு இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.



## பர்மாவின் விவகாரங்களில் ஐ.நா. பிரதிநிதி தலையிடுவதாக குற்றச்சாட்டு


பர்மாவுக்குச் சென்ற ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி தமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக பர்மிய அரசு குற்றம் சுமத் தியிருக்கிறது.

பர்மாவின் முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படுவதாக ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி யாங்கீ லீ சுட்டிக்காட்டியிருந்ததை அடுத்து பர்மிய அரசு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாங்கி லீ, பர்மா வந்திருந்த போது அங்கே இருக்கும் ரோஹிங்கா முஸ்லிம்களின் நாடற்ற நிலைமை குறித்து அவர் தமது கரிசனைகளை வெளியிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து பர்மாவின் பிரபல புத்தபிக்கு ஒருவர் அவரைக் கெட்ட வார்த்தைகளால் விமர்சித்திருந்தார்.

பர்மாவின் வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையில் அந்த விமர்சனங்கள் குறித்து நேரடியாக எந்தக் குறிப்பும் இல்லாத போதும், யாங்கி லீ தனது பணியைக் கவனமாகவும், தொழில் முறைப்பாங்கிலும் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




சிபெரியாவில் விஞ்ஞான அருங்காட்சியகத்தில் மாணவர்களால் வடிவமைக் கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பலரையும் கவர்ந்த பல உருவங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடிப்பெட்டி.

# பாகிஸ்தானின் அணுஆயுத சோதனையை கண்டித்த அமெ. பாதுகாப்புத்துறை அதிகாரி

இஸ்லாமாபாத், பெப். 6
பாகிஸ்தான் அணு ஆயுதங்களைச் சுமந்தபடி இலக்கைத் தாக்கி அழிக்கும் ராட் என பெயரிடப்பட்டுள்ள ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. பாகிஸ்தானின் இந்தச் சோதனைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. அது குறித்து அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அதிகாரி வின்சென்ட் ஸ்டீவர்ட் தெரிவிக்கையில்;

தொடர்ந்து அணு ஆயுதங்களைப் பாகிஸ்தான் சோதித்து வருவது ஆபத்தானது.

கைபர் மாகாணம் மற்றும் பழங்குடி இனத்தவர் வாழும் பிரதேசங்களில் பாகிஸ்தான்



இராணுவம் குவிக்கப்பட்டு வருகிறது. தீவிரவாதிகளின் எஞ்சிய பகுதிகளையும் அந்த நாட்டு இராணுவம் இந்த ஆண்டுக்குள் அழித்து நிர்மூலமாக்கிவிடும் என்று எதிர்பார்க் கிறோம்.

பாகிஸ்தான் இராணு வம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதும் தீவிரவாதிகள் மற்றும், பிரிவினைவாதிகளால் அதன் உள் நாட்டுப் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத் தல் நீடித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## அமெ.தாக்குதலில் அல்சபாப் தீவிரவாத தலைவர் உயிரிழப்பு

வொஷிங்டன், பெப்.6
சோமாலியாவில் அல்சபாப் தீவிரவாதிகள் தொடர்ந்து நாச வேலைகளில் ஈடுபட்டுவருகிறார்கள். அல்குவைதா அமைப்புடன் இணைந்து செயற்படும் அந்தத் தீவிரவாதிகளை ஒடுக்கும் வகையில், அமெரிக்கா வான் வழித் தாக்குதல்களை மேற்கொண்டு வரு கிறது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி தலைநகர் மொகாதிசுவின் தெற் குப் பகுதியில் தீவிரவா தத் தலைவரைக் குறி வைத்து அமெரிக்க இரா ணுவம் ஏவுகணை மூலம் தாக்குதல் மேற்கொண்டது. அதில் அல்சபாப் தீவிரவாத அமைப்பின் முக் கிய தலைவர் யூசுப் தீக் என்பவர் கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுகுறித்து அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவிக்கையில், ஏவுகணைத் தாக்குதல் முடிவுகள் குறித்து உறுதிசெய்யப்படவில்லையாயினும் அந்தத் தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அந் தத் தாக்குதலிலேயே தீவிரவாதத் தலைவர் கொல்லப்பட்டுள்ளார் என்றும் அந்தத் தாக்குதலில் பொதுமக்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

06 FEB 2015

# அமெரிக்காவை எச்சரித்தது வடகொரியா

## அந்நாட்டு வரலாற்றின் இறுதி அத்தியாயத்தை எழுதப்போவதாகவும் மிரட்டல்

பியொங்யாங் பெப் 6

'எங்கள் நாட்டை வீழ்த்தி விட நினைத்து தாதாவா கச் செயற்படும் அமெரிக் காவினது வரலாற்றின் கடைசிப் பக்கங்களை எழு தப்போவது நாங்கள்தான்' என்று வட கொரியா எச்சரித் துள்ளது. தென் கொரியா மற்றும் அமெரிக்க படை கள் எதிர்வரும் மார்ச் மாதம் வழக்கமான தங்களது இரா ணுவக் கூட்டுப் பயிற்சியை ஆரம்பிக் கவுள்ளன.

இராணுவக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராக அணு ஆயுதச் சோதனை மேற்கொள்ளப் படும் என்றும் வட கொரியா எச்சரித்துள்ளது.

இந்த நிலையில், வட கொரிய அதிபர் வசம் இருக்கும் தேசிய பாதுகாப்பு ஆணையம் சார் பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தொடர்ந்து வட கொரியாவின் பலத்தை வீழ்த்த அனைத்து முயற்சி களையும் அமெரிக்கா மேற் கொண்டு வருகிறது.

ஏகாதிபத்தியவாதிகளாக இருக்க விரும்பும் அமெரிக் காவுடன் உடன்பட வேண்டிய



அவசியம் ஏதுவும் எமக் கில்லை. தாதாவாக வலம் வரும் அமெரிக்காவுடன் பேச்சுக்களை மேற்கொள்ள வட கொரிய மக்களும் இரா ணுவமும் விரும்பவில்லை.

அமெரிக்க வரலாற்றின் கடை சிப் பக்கங்களை எழுதப் போவது வட கொரியாதான். அதற்காக எந்த வகையான தாக்குதலிலும் நாங்கள் இறங்குவோம். தரைவழி, வான்வழி, கடல்வழி, கட லுக்குகீழ் அல்லது சைபர் மோதல் என எந்த வகை யிலான தாக்குதல்களை யும் நாங்கள் அமெரிக்கா மீது நடத்துவோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஒபாமாவின் பேச்சுக் கான பதிலாக அமெரிக்கா வைக் குறிவைத்து வட கொரியா இந்த அறிக்கை வெளியிட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.



## தாய்வான் விமான விபத்தில் உயிர் தப்பிய சிறு குழந்தை

ரைபி, பெப்.6

தாய்வானில் சென்று கொண்டிருந்த விமானம் திடீரென ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் நேற்று முன் தினம் 31 பேர்சாவடைந்தனர். எஞ்சியவர்களைத் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தநிலையில் அந்த விபத்தில் ஆற்றில் மிதந்த விமானப் பாகத்தில் இருக்கை 'பெல்ட்' உடன் இணைக்கப்பட்ட நிலையில் ஒரு சிறு குழந்தை உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டுள்ளது. அந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என தாய்வான் அரச அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## காஸா போர் விசாரணைக் குழுவுக்கு தலைவராக மேரி மெக்கோவன் டேவிஸ்



இஸ்ரேல் – ஹமாஸ் இடையே கடந்த ஆண்டு நடைபெற்ற காஸா போர் குறித்து விசா ரணை மேற்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணை யம் அமைத்த விசாரணைக் குழுவுக்குப் புதிய தலை வர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் நீதிபதி மேரி மெக்கோவன் டேவிஸ் புதிய தலைவராக இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அந்தக்குழுவின் தலைவராக இருந்த வில்லி யம் ஷாபஸ், பாலஸ்தீன விடு தலை இயக்கத்துக்கு கடந்த 2012–ஆம் ஆண்டு சட்ட ஆலோசனைகள் அளித்துள் ளதால் அவர் ஒருதலைப் பட்சமாகச் செயற்பட வாய்ப் புள்ளது என இஸ்ரேல் முறை யிட்டதைத் தொடர்ந்து அவர் அந்தப் பதவியிலிருந்து வில கினார். அதனைத் தொடர்ந்து, புதிய தலைவராக மேரி மெக்கோவன் டேவிஸ் நிய மிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.



## குடியுரிமை இல்லாத ஈழத்தமிழரின் குழந்தைகள்

புதுடில்லி, பெப். 6

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்குப் பிறந்த 16,000 குழந்தைகள் குடியு ரிமைகள் இல்லாத நிலை யில் அகதிகள் அந்தஸ் துடன் வாழ்ந்து வருவதாக ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் நிறுவுநர் எஸ். சி.சந்திரஹாசன் தெரிவித் துள்ளார்.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்ப வேண்டுமென இலங்கை இந்திய அதிகாரிகள் கலந் துரையாடிவரும் நிலை யில் அது தொடர்பாக அதி காரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அகதி முகாம்களில் பிறக் கும் குழந்தைகள் குறித்து இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்ய வேண்டும். பிறந்த ஒரு வருடத்துக் குள் பதிவு செய்த பின் பிறப்புச் சான்றிதழைப் பெற வேண்டும். கடந்த 30 ஆண்டு களில் தமி ழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் 24,000க் கும் மேற்பட்ட குழந்தை கள் பிறந்துள்ளன. அவற் றில் 8,000 குழந் தைகள் மாத்திரமே பதிவு செய் யப்பட்டிருப்பதாக எஸ். சி.சந்திரஹாசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

16,000 பிள்ளைகள் பதிவு செய்யப்படவேண்டி உள் ளனர். இவர்களில் பலர் இளைஞர்களாகி விட்ட னர். அவர்கள் நாடு திரும் பினாலும் அது சட்ட ரீதி யானதாக அமையாது. எனவே அவர்களின் பதிவு களை இந்திய அரசு உறுதி செய்ய வேண்டியிருப்ப தாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

மேலும் இந்தியாவிலுள்ள அகதிகளை நாட்டுக்கு அழைப்பதற்கு முன்னர் அவர்களைப் பதிவு செய் வது தொடர்பில் தெளி வான நிலைப்பாடு ஒன்றை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



எதியோப்பியாவில் சிம்பாப்வே அதிபர் றொபேட் முகாபே ஆபிரிக்க ஒன்றியத்தின் கூட்டத்தில் உரையாற்றிவிட்டு திரும்புகின்ற போது விழுகின் றார். அவரை ஓடிச்சென்று காப்பாற்றும் அவரது சகாக்க ளுடன் றொபாட் முகாபே.

## செல்பி மோகத்தால் ஏற்பட்ட அமெரிக்க விமான விபத்து

அமெரிக்காவில் நடந்த விமான விபத்தொன்றுக்கு அந்த விமானத்தைச் செலுத்திச் சென்ற விமானி செல்பி எடுக்க முயற்சித்தமையே காரணம் எனத் தெரியவந் துள்ளது.



'செஸ்னா 150 கே' எனப்படும் சிறிய ரக விமான மொன்று கடந்த வருடம் மே மாதம் 31ஆம் திகதி கொல ராடோ பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது அந்த விமா னம் விபத்துக்கு உள்ளானது.

விமானியும், ஒரு பயணியும் மட்டுமே பயணித்த அந்த விமானம் வாட்கின்ஸ் அருகே திடீரென கீழே விழுந்து நொறுங்கியது, அந்த விபத்தில் விமானத்தில் இருந்த இரு வரும் உயிரிழந்தனர். அதுகுறித்து அமெரிக்காவின் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் மேற் கொண்ட விசாரணையில்;

விமானம் குறைந்த உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது விமானி செல்பி எடுத்துக் கொண்டதும், அதனால் அவரது கவனம் சிதறி விபத்து ஏற்பட்டது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசி மூலம் தங்களைத் தாமே படமெடுத்துக் கொள்ளும் செல்பி மோகம் தற்போது அதிகரித்துள்ளது, இதனால் பல்வேறு விபரீதங்களும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அழகிய வெர்சாய் அரண்மனை

பரிஸ், பெப். 6

பிரான்ஸில் உள்ள வெர்சாய் என்னும் நகரில் அமைந்துள்ள அரண்மனை ஒரு அழகானதும் எழில்மிகுந்ததுமா கும். இந்த அரசு மாளிகை முழுமை யான மன்னராட்சி முறைக்கு அடை யாளமாக விளங்குகிறது.

பிரான்ஸின் பெருமைக்குரிய சரித் திரத்தையும், கலாசாரத்தையும் எடுத் துரைக்கும் அரண்மனை யாக அது விளங்குகிறது.

1682 ஆம் ஆண்டு முதல் 1789 ஆண்டு வரை அதிகார மையமாக இருந்த அந்தஅரண் மனையைக் கட்டுவதற்கு 50 ஆண்டுகளும் 2 பில்லியன் டொலரும் செலவு செய்யப் பட்டுள்ளன.

அரசர்கள் மற்றும் அரசிகள் மூன்று தலைமுறையாக வாழ்ந்து வந்த அந்த அரண்மனையைச் சுற்றி 2,000 ஏக்கரில் அழகான பசுமை யான தோட்டங்களும் அரண்மனை யில் அதிநுட்ப கட்டட வேலைப்பாடு களும் அழகிய பூந்தோட்டமும் விசால மான பிரதேசத்தில் அமைந்துள்ளன.

பல்வேறுபட்ட வரலாற்று, இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் அந்த அரண் மனை, பிரான்ஸில் முக்கிய சுற்று லாப்பயணிகளைக் கவரும் பகுதி களில் ஒன்றாக விளங்குகிறது என் பது



குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் தாக்குதல் 25 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், பெப். 6

பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ் தான் மற்றும் கைபர் பழங் குடிப் பகுதிகளில் பாகிஸ் தான் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலில் அங்கு மறைவிடத்தில் பதுங்கியிருந்த 25 தீவிரவாதிகள் கொல் லப்பட்டுள்ளனர். தீவிர வாதிகளின் 7 பதுங்குகுழிகள் அழிக்கப்பட்டுள்ளன.

பெஷாவர் பகுதியில் இரா ணுவப் பாடசாலை மீது தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து அந்த நாட்டில் தீவிரவாதி களுக்கு எதிரான நடவடிக் கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. அதன் எதி ரொலியாகவே இந்தத் தாக் குதல் நடவடிக்கையை பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

# எதிர்காலத்தில் காணாமற் போகும் இணையம்




இணையம் இல்லாமல் நவீன வாழ்க்கை இனி இல்லை என்று நினைக்கத் தொடங்கியிருக்கும் நேரத்தில், இணையம், மறைந்து போகும் நிலை வரும் என்று சொன்னால் எப்படி இருக் கும்? முன்னணி இயந்திர நிறுவனமான கூகுள் நிறு வனத் தலைவர் எரிக் ஸ்கிமிட் தான் இவ்வாறு கூறி வியக்க வைத் திருக்கிறார்.

ஆனால் கவலை வேண்டாம், ஸ்கிமிட் சொல்வது இணை யம் இல்லாமற் போகும் என்பதல்ல, நாம் அறிந்த வகையில் இணையம் காணா மற்போய் , நாம் அதன் இருப்பை உணராத அள வுக்கு எங்கும் இணையம் வியாபித்திருக்கும் என்று அவர் கூறியிருக்கிறார்.

நீக்கமற நிறைந்திருப்பது என் பார்களே அதேபோலத்தான் இணையமும் ஆகிவிடும் என்று அவர் சொல்லியிருக் கிறார்.

சுவிஸ்சர்லாந்து நாட்டில் டாவோசில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மாநாட்டில், 'டிஜிட்டல் பொரு ளாதாரத்தின் எதிர்காலம்' எனும் தலைப்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கூகுள் செயல் தலை வர் எரிக் ஸ்கிமிட்டிடம் , எதிர்காலத்தில் இணையம் எப்படி இருக்கும்? என்று கேட்கப் பட்டது.

இணையம் மறைந்து போய் விடும் என்று சொல்வேன் என்று இதற்குப் பதில் சொன்ன ஸ்கிமிட், மேலும் கூறுகை யில், எண்ணற்ற ஐபி முகவரிகள் உருவாகி இருக்கும். எண்ணற்ற சாதனங்கள், சென்சார்கள், நீங்கள் அணிந்திருக்கும் சாத னங்கள் என எல்லாமே அவற்றை நீங்கள் உணராத அளவுக்கு இருக்கும்.

இந்தச் சாதனங்கள் எல்லாம் உங்களுடனேயே எல்லா நேரங்களிலும் இருக்கும்.

கற்பனை செய்து பாருங்கள்! நீங்கள் ஓர் அறைக்குள் நுழைகிறீர்கள். அந்த அறை உங்களை உணர்ந்து கொள் கிறது. உங்கள் அனு மதியுடன் அறையில் உள்ள பொருள்களு டன் நீங்கள் தொடர்பு கொள்கிறீர் கள்.

இது போன்ற சூழல் தொழில்நுட்ப நிறு வனங்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக இருக்கும். மிகவும் பிரத்தியேகமான, தனிப்பட்ட தன்மை கொண்ட சுவாரஸ் யமான உலகம் உரு வாகலாம்.

**கற்பனை செய்து பாருங்கள்! நீங்கள் ஓர் அறைக்குள் நுழைகிறீர்கள். அந்த அறை உங்களை உணர்ந்து கொள்கிறது. உங்கள் அனுமதியுடன் அறையில் உள்ள பொருள்களுடன் நீங்கள் தொடர்பு கொள்கிறீர்கள். இதுபோன்ற சூழல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பாக இருக்கும். மிகவும் பிரத்தியேகமான, தனிப்பட்ட தன்மை கொண்ட சுவாரஸ்யமான உலகம் உருவாகலாம்.**

இதுபோன்ற தொழில் நுட்ப முன்னேற்றம் புதிய அலை, வேலை வாய்ப்புக்களை உரு வாக்கும். தொழில் நுட்பம்வேலைவாய்ப் புக்களைப் பறித்து விடும் என்ற கவ லையே வேண்டாம் என்றார்.

இதே விவாதத்தில் பேஸ்புக் நிறுவன தலைமை அதிகாரி ஷெரில் சாண்ட் பெர்கும் கலந்து கொண்டு பேசினார். அவரும் தொழில்நுட்பம் புதிய வேலை வாய்ப் புக்களை உருவாக் கும் அழிக்காது என்று கூறினார்.

இணையம் மக்களின் குர லாக இருப்பதாகக் கூறிய அவர், வரும் காலத்தில் இணையத்தால், மேலும் மாற்றங்கள் வரும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

யாஹு நிறுவன தலைமை அதிகாரி மரிசா மெயர் பேசும் போது, தனிப்பட்ட இணையம் மேம்பட்டதாக இருக் கும் என்றும், பயனாளிகள் தங்கள் தகவல்களை தாங்களே கட்டுப்படுத்தும் நிலை வரும் என்றும் கூறினார்.




## மில்க்மெயிட் பேஸ்புக் ஆர்வலர்களுக்கு கிடைத்த வாய்ப்பு

மில்க்மெயிட், இலங்கையில் அனைத்து இல்லங்களிலும் இனிப்பு ஆகாரங்களைத் தயாரிப்பதில் விருப்பத்துக்குரிய தெரி வாகத் திகழ்ந்துவருகின்றது.

உள்நாட்டில் புகழ்பெற்ற சமையல் கலை நிபுணரும், ஸ்பொன்ஞ் பாஸ்ரி உணவகத்தின் உரிமையாளருமான அகாந்த பண்டிதசேகர அவர்களைச் சந்திக்கும் வாய்ப் பொன்றை அது தனது பேஸ்புக் ஆர்வலர்களுக்கு வழங்கியிருந்தது. நிகழ்வில் சுவையான ஆகாரங்கள் உட்பட அவர்கள் தமது பிற்பகல் பொழுதை இனிமையாகக் களித்திருந்தனர்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் ஆர்வலர்கள் பக்கத்தை 2013 இல் மில்க்மெயிட் ஆரம்பித்திருந்தது. ஆர்வமூட்டுகின்ற செயற்பாடுகள் மூலமாக நுகர்வோருடனான தொடர்புகளை மேம்படுத்தும் முயற்சிகளை இதன் மூலமாக முன்னெடுத்து வருகின்றது. மேலும், ஆர்வலர்கள் மில்க்மெயிட் தொடர்பான தமது அனுபவங்களை இணையத்தளத்தின் மூலமாக ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதையும் அது ஊக்குவித்து வருகின்றது.

இந்நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்காக சமையல்கலை நிபுணரான அகாந்த அவர்கள்; சமையல் செயன்முறை விளக்கமொன்றை நிகழ்த்தியிருந்தார். அவர் மேலும் சுவைமிக்க இனிப்பு ஆகாரங்களைத் தயாரித்தல் அடங்கலாக, மில்க்மெயிட் இனை உபயோகித்து வீட்டில் தயாரிக்கக்கூடிய இனிப்பு ஆகாரங்களை தயாரிக்கும் முறைகள் தொடர்பான பயன்மிக்க குறிப்புக்களையும் பகிர்ந்து கொண்டார்.


நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பாலை மூலப்பொருளாகக் கொண்ட உற்பத்தித் துறையின் உதவித் தலைமை அதிகாரியான ருவான் வெலிக்கல அவர்கள் கூறுகையில்; 'சமையற்கலை நிபுணரான அகாந்த போன்ற தொழில்சார் நிபுணர் ஒருவரின் வழிகாட்டலின் கீழ் எமது மில்க்மெயிட் ஆர்வலர்கள், இனிப்பு ஆகாரங்களைத் தயாரிக்கும் தமது திறமைகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் அவரை நேரடியாகச் சந்திப்பதற்கு வாய்ப்பொன்றை ஏற்படுத்தியமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது. பிரபலமான சமூக ஊடக வலைத்தளமான பேஸ்புக் ஊடாக மில்க்மெயிட் நுகர்வோருடன் நாம் இடைத் தொடர்புகளைப் பேணி வருகின்றோம்.

கடந்த இரு ஆண்டு காலப்பகுதியில் இனிப்பு ஆகாரப் பிரியர்கள் தாம் அவற்றைத் தயாரிக்கும் செயன்முறைகளையும், பயனுள்ள தகவல்களையும் மிகுந்த ஆர்வத்துடன் இணையத் தளத்தினூடாக பகிர்ந்து கொண்டு மில்க்மெயிட் பேஸ்புக் பக்கத்தின் செயற்பாடுகளை கணிசமான அளவில் அதிகரிக்க உதவியுள்ளனர். எதிர்வரும் நாள்களில் இன்னும் பல ஆர்வமூட்டுகின்ற செயற்பாடுகள் மற்றும் புத்தாக்க வழி முறைகள் மூலமாக எமது நுகர்வோரின் வாழ்வை மேம்படுத்தவேண்டும் என்பதை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த் துள்ளோம்' என்றும் குறிப்பிட்டார்.

மில்க்மெயிட் பல தலைமுறைகளாக பல்வேறுபட்ட இனிப்பு ஆகாரங்களைத் தயாரிப்பதற்கான சேர்க்கைப்பொருளாகத் திகழ்ந்துவருகின்றது.

அனைவரின் நம்பிக்கையையும் வென்றெடுத்து, முற்றுமுழுதாக உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுகின்ற பாலை மட்டுமே உபயோகித்து உற்பத்திசெய்யப்பட்டுவருகின்றது. செழுமையும், பாற்சுவையும் நிறைந்த மில்க்மெயிட் இலங்கையில் அனைத்து இல்லங்களிலும் சுவைமிக்க இனிப்பு ஆகாரங்கள், பானவகைகள் மற்றும் ஆகாரங்களின் மேற்பகுதியில் அழகுக்காகவும், சுவைக்காகவும் அலங்கரிக்கப்படும் உணவு என அனைவரின் நாவுக்கும் சுவையூட்டி அவர்களை பூரிப்புக்கு உள்ளாகி வருகின்றது. (த)

# வாசகர் திருமுகம்



## வேகம் வேண்டவே வேண்டாம்

வல்லை வெளியிலுள்ள மண் டான் சந்தியை அண்மித்த பகுதியில் வாகன விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறுவதைக் காண முடிகிறது. அதிலும் பருத் தித்துறை– யாழ்ப்பாணம் வீதி காப்பெற் வீதியாக அமைக் கப் பட்ட பின்னரே வாகன விபத் துக் களில்அதிகரிப்புக் காணப் படுகின்றது.

மண்டான் சந்தியில் விபத்துக் கள் ஏற்படுமென்ற எச்சரிக்கைப் பலகைகள் நடப்பட்டுள்ள போதி லும் வாகன சாரதிகள் இதைக் கவனத்தில் கொள்வதாகத் தெரிய வில்லை. அதிலும் காப்பெற் வீதி என்பதால் முழு வேகத்தில் வாக னங்களைச் செலுத்திச் செல் வதை அவதானிக்க முடிகின்றது.

மண்டான் சந்தியிலுள்ள மோச மான வளைவில்கூட இவர்கள் வேகத்தைக் குறைப்பதாகத் தெரிய வில்லை. இதனால் தாம் மட்டு மல்ல வேறு வானகங்களில் பய ணிப்பவர்களும் பாதிப்பை எதிர் கொள்வார்களென் பதை இவர் கள் ஏனோ மறந்து வாக னங்களை அதிவேகமாக ஓட்டிச் செல்கின்றனர்

கடந்த வாரம் அரச பஸ் ஒன் றில் பருத்தித்துறைக்குச் சென்று கொண்டிருந்தேன். வல்லைச் சந்தியிலிருந்து மண்டான் சந்தி வரை வேகமாகச் சென்ற அந்த பஸ் அங்கு காணப் படும் வளை விலும் வேகத்தைக் குறைக்க வில்லை. கரணம் தப்பி னால் மர ணம் என்றதொரு நிலை தான் அங்கு காணப்பட்டது. அந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்தை எதிர் கொண்டிருக்குமாயின் பிர யாணிகள் பலர் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய தொரு நிலை உருவாகியிருக்கும்

ஆகவே வாகன சாரதிகளே வேகத் துக்குத் தடைபோட்டு விவேகத் துக்கு முன்னுரிமை வழங்குங்கள்.

*க.சிவப்பிரகாசம்,*
*சுன்னாகம்.*

## உணவை வீணாக்குதல் தகுமா?

அண்மையில் திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அந்த வைபவம் மிகவும் சிறப் பான வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்றவர்கள் அவைனரும் சிறப்பாக வர வேற்றப்பட்டனர். சிற்றுண்டி, குளிர்பானங்க ளுக்கும் குறைவில்லை.

மதிய உணவு எவ்வித குறைகளுமின்றி சுவை யாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. விருந்தினர்கள் தமது வருப்பத்துக்கு ஏற்ற வகையில் கறி வகைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் சிறப்பாக மேதற்கொள்ளப்பட்டி ருந்தது.

ஆனால் ஒரேயொரு குறைபாடு மட்டுமே கண்ணை உறுத்தியது. விருந்தினர்கள் சிலர் சோறு, கறி முத லியவற்றைத் தாமே பரிமாறிக் கொண்டதால் இந்தக் குறைபாடு ஏற்பட்டதாகக் கருத முடிகின் றது. சிலர் அளவுக்கு மீறி இவற்றை எடுத்துவிட்டுப் பின்னர் மீதியை வீசியதுதான் வேதனை தருகின் றது. இவர்கள் தாம் உண்ணக்கூடிய உணவின் அளவுக்கேற்ப அதனை எடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டி ருக்காது. சிலர் குழந்தைகளுக்கும் அதிக உணவைப் பரிமாறிக்கொண்டதால் இந்த நிலை ஏற்பட்டதைக் காணமுடிந்தது.

ஒருவேளை உணவுக்குக்கூடப் பலர் வழியின்றி இருக்கும் நிலையில் இவ்வாறு உணவை வீணாக்கு வதை அனுமதிக்க முடியாது.

ஆகவே உணவு பரிமாறும் முறையில் மாற்றம் வேண்டும். வைபவங்களுக்குப் பொறுப்பான வர்கள் உரியவர்கள் மூலமாக உணவுகளைப் பரி மாறும்போது இத்தகைய சேதாரங்கள் ஏற்படு வதைத் தடுக்க முடியும். அத்துடன் தேவையற்ற நேர விரயத்தையும் தவிர்க்க முடியும்.

பெறுமதிமிக்க உணவை வீணாக்காது பாதுகாப் பது எம் அனைவரதும் முக்கிய கடமையாகும். விர யாமாக்கப்படும் உணவு பலரது பசியையும் போக்க உதவுமென்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

*த.கிறிஸ்ரியன்,குருநகர்.*

## கழிவுகள் அகற்றப்படுமா?

யாழ்.நகரிலுள்ள சிறு ஒழுங்கைகளில் கழிவுப் பொருள்கள் குவிந்து கிடப்பதை சமீப நாள்களாக அவதானிக்க முடிகின்றது.தற்போது மாநகரசபையின் நிர்வாகத்தை ஆணையாளர் பொறுப்பேற் றிருக்கும் நிலையில் இவ்வாறு கழிவுகளும், குப்பைகளும் காணப்படுகின்றமை சுகாதாரத்துக்குப் பெரும் கேடாக அமையப் போகின்றது. சுகாதாரத் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாகவே இந்த நிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து கழிவுகளை முற்றாக அகற்றுவது மாநகசபையின் முக்கிய கடமையாகும்.

தற்போது டெங்கு நுளம்புகளின் பெருக்கமும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துக் காணப்படும் நிலையில் கழிவுகள் இவ்வாறு தேங்கிக் கிடப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடப் போகின்றது.

மேலும் யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளின் மனங்களில் தவறானதொரு அபிப்பிராயம் ஏற்பட்டுவிடுமென்பதையும் மறுக்க முடியாது. ஆகவே மாநகரசபை நிர்வாகத்தினர் இந்த விடயத்தில் முன்னுரிமை எடுத்துச் செயற்படவேண்டும் என்பதே நகரவாசிகளின் வேண்டுகோளாகும்.

*சு.புஸ்பாதேவி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## விடிவு கிடைக்குமா ?

மைத்திரி அரசு அமைந்த பின்னர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு இன்று முதல் முறையாக வருகை தரவுள்ளார். பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் சந்திப்புக்களை நடத்தவுள்ளார். மீள்குடியமர்வு தொடர்பிலான பேச்சுக்களும் இதன்போது இடம்பெறவுள்ளது.

25 வருடகாலமாக நலன்புரி நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தமது நிலங்களுக்கு எப்போது திரும்ப முடியும் என்ற ஏக்கத்துடன் காத்திருக்கின்றார்கள். கடந்த பல தடவைகள், மக்கள் மீள்குடியமர்வுக்கு அனு மதிக்கப்படுவதாகச் சொல்லி ஏமாற்றப் பட்ட னர். கடந்த அரசின் அரசியல்வாதிகள் தேர்தலில் தம்மை வெற்றி பெறச் செய்தால் மீள்குடியமர்வு இடம்பெறும் என்று மக்களை மோசம் செய்ய முயன்றனர். ஆனால் மக்களோ தெளிவாக இருந்தமையினால் அந்த அரசியல்வாதிகள் மண் கவ்வ வேண்டி ஏற்பட்டது.

தற்போது வலி.வடக்கில் மீளக்குடியமர வேண் டிய மக்கள் திடமான தீர்மானத்தை எடுத்திருக் கின்றனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்த லுக்கு முன்னர் தம்மை மீள்குடியமர்த்தவில்லை என்றால், தேர்தலை எதிர்க்கப் போவதாக – பகிஷ்கரிக்கப் போவதாக பகிரங்க எச்சரிக் கையை விடுத்துள்ளனர். இந்த எச்சரிக்கை புறக்கணிக்க தக்கது ஒன்றல்ல.

மக்களின் மீள்குடியமர்வை தாமதிக்கச் செய் வதன் விளைவுகளை, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புதான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்த லில் எதிர்கொள்ளப் போகின்றது.

கனவான் தன்மையுடன் எழுத்துமூலமாக ஒப்பந் தத்தை செய்யாமல் ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், இது போததாதென்று சுதந்திர தின நிகழ்வில் பங்கெடுத்தமை ஆகிய முற்கூட்டிய நல்லிணக்க சமிஞ்சைகளுக்கு புதிய அரசிடமிருந்து இந்த விடயத்திலாவது பதிலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், மக்களின் மீள்குடிய மர்வு தொடர்பில் முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும். கடந்த 2012 ஆம் ஆண்டு – மஹிந்த அரசின் காலத்திலேயே, இராணுவத்தி னருக்கு தேவையற்றது என்று அடையாளப் படுத்தப்பட்ட நிலங்களை முதலில் விடுவிப்ப தற்கு புதிய அரசுக்கு எந்தத் தடங்கலும் இருக்கப் போவதில்லை.

எனவே இன்றைய கலந்துரையாடலில், 2012 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீள் பரி சீலனை செய்து, பொதுமக்களின் காணி களை விரைந்து விடுவிக்க வேண்டும். விடுவிப்பதற்கு தாமதிக்கும் ஒவ்வொரு கணமும், அந்த மக் களை எரிச்சல் அடையச் செய்யும் நடவடிக் கையாகவே இருக்கும். கடந்த 2005 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் ஜனாதி பதித் தேர்தலை புறக்கணித்தமையின் விளைவு என்னவென்று தற்போதைய ரணில் அரசுக்கு தெரியாதது அல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்த லில் புறக்கணிப்பு கோசத்தை புறந்தள்ளி வாக்க ளித்த தமிழ் மக்களை, புதிய அரசு புறக்கணிக்க நினைத்தால் விளைவுகள் விபரீதமாகவே இருக்கும். இனியும் புலிப்பூச்சாண்டி கதைகளைச் சொல் லிக் கொண்டிருக்காமல், வலி.வடக்கு மக்க ளின் காணிகளை விடுவிப்ப தற்கு, யாழ்ப்பாணத்திற்கு இன்று வரும் பாது காப்பு இரா ஜாங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் மனங்களை வெல்வதற்கு வாய்ச் சொற்கள் உதவா...

நாட்டின் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து இங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்து வோம். காலனித்துவ ஆட்சியில் இருந்து எமது நாடு இன்றைய திகதியில் விடுதலை பெற்றது -

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது. ஆனால் வடக்கு -கிழக்கு வாழ் மக்களின் மனங்களில் இன்னமும் பல சந்தேகங்கள் நிலவுகின்றன. அதனால் வடக்கு - தெற்கு மக்களின் இதயங்களை ஒன்றி ணைத்து இந்த நாட்டில் நல்லிணக்கத்தை உரு வாக்குவோம் -

மேற்கண்டவாறு உறுதி மொழி வழங்கி உள்ளார் நாட்டின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

முப்பது வருடங்களாக நீடித்த பயங்கரவாதம் கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது -

ஆனாலும் வடக்கு, கிழக்கில் வாழும் மக்க ளின் மனங்களை வெல்ல முடியவில்லை. அவர்க ளது இதயங்களில் இன்னமும் - தொடர்ந்தும் சந்தேகங்கள் நிலவுகின்றன -

அதனால், வடக்கு மற்றும் தெற்கு மக்களை இணைக்கும் பொருட்டு, தேசிய நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது - என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்து உள்ளார்.

நல்லது; வரவேற்கத் தக்கது என்று வகைப்படுத்தலாம்.

ஆனாலும்....

புதிய ஜனாதிபதியும் சரி, அவரது கூட்டாளிகளும் சரி, நாட்டின் பெரும்பான்மை இன மக்களைத் தமது நிலைப்பாட்டுக்குச் சம்மதிக்கச் செய்வதற்கு, அரசியல் மற்றும் ஆட்சிப் பலத்தைப் பெறுவதற்கான எந்த வகை சார்ந்த உத்திகளை, திட்டங்களை முன்னெடுக்கப் போகின்றனர் என்ற நீண்டு உயர்ந்த வினா எழுகின்றது.

ஏனெனில் தத்தமது அரசியல் மற்றும் ஆட்சி வலு நலன்களுக்காகவே தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தும், காலத்துக்குக் காலம் ஒருவர் மாறி மற்றவர் என்ற வரிசையில், தமிழ் மக்களின் பிரிக்க முடியாத உரிமைகளைத் தட்டி வீழ்த்தியும், நாட்டில் நல்லிணக்கம் முகிழ்த்தாலும் இடம் விடாது தடுத்து வந்தார்கள். அதுவே, இந்தச் சின்னஞ் சிறிய சிறிலங்காவின் விதியாக மாற்றப்பட்டது.

பிரிட்டிஷாரிடம் விடுதலை வாங்குவதற்கு, சிங்களத் தலைவர்களோடு, தமிழ்த் தலைவர்களும் தோளோடு தோள் நின்று, முன்னின்று உழைத்தனர்.

ஆனால் எட்டு வருட காலத்திலேயே, 1956 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் உரித்தை, சிங்கள அரசியல் தலைவர்கள், நன்றி மறந்தவர்களாக உரித்து எடுத்து விட்டார்கள்.

ஆனால், அடுத்துத் தொடுத்து, மாறி மாறி ஆட்சிக் கட்டிலில் ஏறிய தென்னிலங்கைக் கட்சிகள், அவற்றின் தலைவர்கள், ஜனநாயகம் என்ற பதாகைகளை வெவ்வேறு வடிவங்களில், உருவங்களில் காட்டி, சிங்கள மேலாதிக்கத்தை வளர்த்தார்கள்.

அதன் விளைவு.....

தமிழ்பேசும் மக்கள் சிறுபான்மையினர் என்பதால், அவர்களது அடிப்படை ஜனநாயக உரிமை கீலம் கீலமாகக் கிழித்து எறியப்பட்டது. அதனால் வந்த வினைகளே தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்டங்கள். அவை பயன் விளைக்காத பட்சத்திலேயே, ஆயுதப் போராட்டம் வெடித்தது.

அதனால் இந்தியா மற்றும் ஏனைய நாடுகள், தமது மூக்கை நுழைக்கவும், தமக்கென நலன்கள் பலவற்றைப் பிடுங்கிக் கொள்ளவும், தளம் அமைத்துக் கொடுத்தனர் சிங்களத் தலைவர்கள்.

அந்தப் பாவத்துக்கு, வினைப் பயனுக்குப் பரிகாரம் செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் கடமையும் கொழும்பு அரசுக்கே உண்டு.


அதன் தலையாரி - புதிய ஜனாதிபதி - சிறுபான்மை மக்களின் அரசியல், வாழ்வியல் நலன்களுக்கு வேறு மாற்றுப் பாதைகள் எந்தப் பயனையும் தரமாட்டா என்று உணர்ந்து, உயர் அரச மட்டத்தில் இருந்து கீழ் மட்டம்வரை இனபேதத்தை முற்றாகக் களைந்து செயற்பட முன்வரவேண்டும்.

முதலிடமும் முன்னுரிமையும் வழங்கினால் மட்டுமே, வெறும் வாய்ச்சொல் வல்லவனாக அன்றி, செயல்வீரனாக உயர்ந்து எழுந்தால் மட்டுமே, தமிழ் மக்களின் மனங்களை - இதயங்களை அவரால் வெல்ல இயலும்.

வேறு எந்த வழியும் உதவப்போவதில்லை. மாற்றுப் பாதைகள் எந்தப் பயனையும் தரமாட்டா. அதனை முழுதார்ந்து உணர்ந்து செயலில் காட்ட வேண்டும். வெறும் மேடைப் பேச்சோ, அறிவிப்புகளோ எந்தப் பயனையும் தரமாட்டா. தமிழ் மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை, நட்பு ரீதியாக வழங்குவதற்கு, தென்னிலங்கையின் அரசியல் தலை வர்கள் தமக்குள்ளே ஒற்றுமைப்பட்டு வழங்குவ தற்கு மனதார்ந்து முன்வரவேண்டும்.

# நிரூபிக்கப்பட்டது

## மோடியின் அரசியல் மேதமை



இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு இந்தியா வந்த அந்த நாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்த தற்காக பிரதமர் மோடிக்கு தமிழக தலைவர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அத்தோடு, தமிழகத்தைச் சேர்ந்த சில தலைவர்கள், மோடி தமது அரசியல் மேதமையை நிரூபிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஆனால், இத்தகைய விமர்சனங்கள், வேண்டுகோள்கள் எதையும் பிரதமர் மோடி காதில் போட்டுக் கொண்டதாகக் காட்டிக் கொள்ள வில்லை.

இலங்கை அதிபர் தேர்த லில் அதிகாரத்தில் இருந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து, மிதவாதியான சிறிசேன ஆட்சியைப் பிடித்தார். இந்த வெற்றி குறித்து இந்திய, தமிழகத் தலைவர்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஆனால், இதன் பின்னால் இருந்த சூட்சுமத்தை அவர்கள் அறிய வில்லை.

அதையும் ராஜபக்ஷவே தொடக்கிவைத்தார்இலங்கையில் இயங்கிவந்த இந்திய உளவுத் துறையினர் (றோ) திட்டமிட்டுத் தனது வெற்றியை தடுத்துவிட்டனர் என்று ராஜபக்ஷ கூறினார். அதன் பிறகே இந்திய மக்களுக்கு இப்படியும் நடந்திருக் கலாமோ என்ற எண்ணம் ஏற்பட் டது.

ராஜபக்ஷவுக்கு தமது அரசின் உளவுத் துறை மூலம் இது நிச்சயமாகத் தெரிந்திருக் கும். ஆனாலும், அவர் தமது வெற்றியின் மீது இருந்த நம் பிக்கையால், அதைப் பொருட்படுத்தா மல் இருந்திருக்கலாம்.

தமது தோல்விக்குப் பிறகே இந்தியாவின் உண்மையான வலிமை அவருக்குப் புரிந்தி ருக்கும்.

இப்போது, இலங்கையில் தமி ழர்கள், சிங்களவர் கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள் என அனைத்துத் தரப்பு மக்களுக்குமான சீர்திருத்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இருந்தும் தமிழகத் தலைவர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு உடனடியாக அனைத்து நலன்க ளையும் பெற்றுக் கொடுத்து விட வேண்டும் எனத் துடிக்கிறார்கள். வண்டியில் சுமையை அளவுக்கு அதிகமாக வைத்தால், அச்சு முறிந்துவிடும் என்பது எமது தலைவர்களுக்கு தெரியாததல்ல.

இலங்கைப் பிரச்சினையில் பிரதமர் மோடி தமது அரசியல் மேதமையை நிரூபிக்க வேண்டும் எனக் கூறிய தலைவர்கள், அவர்கள் எதிர்பார்த்தது நிறை வேறிய பிறகு கூடப் பிரத மரைப் பாராட்ட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த நிலையில், இலங்கையில் ஒருவேளை ஆட்சி மாற்றம் ஏற்படாமல் போய் விட்டால், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை மட்டுமின்றி, இந்தி யாவின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி விடும் என்பதை பிரதமர் கணிக்கத் தவறவில்லை.

இதன் வெளிப்பாடே அமெரிக்காவுடன் நெருங்கிய நட்பைப் பேண அவர் அச்சாரம் போடப்பட்டமையாகும்.

நிலவியல் ரீதியாக எமக்கு அச்சுறுத்தலாக இருப்பது, எமது அண்டை நாட்டுப் பங்காளிகளான சீனா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளே.


இந்த மூன்று நாடுகளை யும் வழிக்குக் கொண்டு வருவதற்கு முன்னதாக, பிரதமர் மோடி இவற்றுடன் நட்புரீதியாக பழகி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவிரும்பினார்.

இதற்காக, இலங்கை, சீனா, பாகிஸ்தான் நாட்டுத் தலைவர்களை இந்தியா வுக்கு அழைத்து நட்பை நாடினார்.

ஆனால், சீன அதிபர் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோதே சீனப் படை இந்திய எல்லை யில் ஊடுருவியது. பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.இந்தியப் படைகள் சீன எல்லை யில் குவிக்கப்பட்ட பிறகே சீனா பின் வாங்கியது.

மேலும் சீன ஜனாதிபதியின் இந்திய வருகையின் போது, இந்தியா வில் அதிக அளவிலான சீன முத லீடு குறித்து அதிபர் அறிவிப்பார் என எதிர்பார்க் கப்பட்டது.

ஆனால், அவர் இலங்கைக்கு அளித்த முக்கியத்து வத்தை இந்தியாவுக்கு அளிக்கவில்லை என்பதே உண்மை.



அதேபோல, பயங்கரவாதிகளின் புகலிடமாகவும், அவர்களிடமிருந்து தன்னையே காத்துக்கொள்ள முடியாத சூழலிலும் உள்ள பாகிஸ்தான், இந்தியாவில் ஊடுருவ முயற்சிப்பது, பயங்கரவாதத்தை வேரூன்றச் செய்வது, கள்ள நோட்டுகளை புழக்கத்தில் விடுவது போன்றவற்றை இன்னமும் கைவிடவில்லை.

இதற்கு அந்த நாட்டுக்கு உறுதுணையாக இருப் பது, பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா ஆண்டு தோறும் அளித்துவரும் கோடிக் கணக்கான ரூபாய் நிதியுதவிதான்.

இந்த நிலையில்தான் அமெரிக்க அதிபர் ஒபாமா வின் இந்தியப் பயணம் இடம் பெற்றது. எல்லை யில் அச்சுறுத்தும் பாகிஸ்தான், தங்களது உற்பத்திப் பொருள்களை கட்டுப்பாடின்றி இந்தியாவில் திணிக்கும் சீனா, சீனாவுக்கு கப்பல் தளம் அமைக்க அனுமதி வழங்கி, அதன்மூலம் அவர்களின் ஆதரவோடு இந்தியாவை அச்சுறுத்த நினைத்த இலங்கை என, இந்த நிலவியல் பங்காளிகளுக்கு உலக வல்லரசான அமெரிக்கா, இந்தியாவைக் கட்டியணைத்ததும் வியர்த்து விட்டது.

இதனால் அச்சமடைந்த சீனா, அவசர அவசரமாக தனது இராணுவ அணி வகுப்பு விழாவை ஏற்பாடு செய்து, அதில் பங்கேற்க ரஷ்ய அதிபர் புடினை அழைத்துள் ளது.

உக்ரைன் பிரச்சினையில் அமெரிக்கா தன் னோடு மோதி வரும் நிலையில், நட்பு நாடாக இருந்த இந்தியாவும்,அமெரிக்காவு டன் நெருங்கிச் செல்வ தால், அதற்குப் பதிலடி யாக ரஷ்யாவும் சீன விழாவில் பங்கேற்க ஒப் புதல் தெரிவித்துள்ளது.

மொத்தத்தில் அண்டை நாட்டுப் பங்காளிகள் மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்துமே இந்தியாவை வியந்து, அச்சத்துடன் நோக் கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான அணுசக்தித் துறைத் தொடர்புகள் சம்பந்தமாக சில சந்தேகம், விமர்ச னங் களை எதிர்க்கட்சிகள் வைத்தாலும், பிரதமர் மோடி மீது உள்ள நம்பிக்கையால் அது தீவிரமாக் கப்படவில்லை.

பொதுவாக, அமெரிக்க அதிபரின் இந்திய வருகை, இலங்கையில் ஆட்சி மாற்றம் போன்றவை பிரதமர் நரேந்திர மோடி யின் அர சியல் மேத மையை நிரூ பித்துள்ளனஎன்றேகூறலாம்.

*(நன்றி: தினமணி)*

வெள்ளிக்கிழமை | பெப்ரவரி 06, 2015 | உதயன்

# நிலைக்குமா நல்லாட்சி?

## விழிப்புணர்வுடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்

சிங்கள மூலம்: மவ்பிம
உபுல் யோசெப்
பெர்னாண்டோ
தமிழில்: வீ.எஸ்.ரீ.

நாட்டின் 43 ஆவது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைப் நேர் காணல் ஒன்றுக்காக அவரது வீட்டுக்கு வரும் வழி குறித்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமது வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள பொலிஸாரின் சோதனைச் சாவடியில் உள்ள பொலிஸாரிடம் நான் செய்திப் பத்திரிகை ஒன்றிலிருந்து தன்னைச் சந்திக்க வருவதாகக் கூறிவிட வேண்டாமென அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். "நாள் முழுவதும் நாங்கள் வெளியில் எங்கெங்கு சென்று வருகிறோம் என்பது குறித்தும், எமது வீட்டுக்கு எம்மைச் சந்திக்க வருபவர்கள் குறித்தும் தெரிந்து கொள்ள புலனாய்வாளர்களை நியமித்துள்ளனர்'' எனவும் அவர் தெரிவித்தார்.

நான் ஷிராணியின் வீட்டுக்குச் சென்றபோது நுழைவாயிலையும் ஜன்னல்களையும் மூடி விட்டே அவர்கள் வீட்டினுள் இருந்தனர். அந்த அளவுக்கு அவர்களை அச் சம் பீடித்திருந்தது. அவ ரது கணவர் வேலை வாய்ப்பொன்றுக்கு விண்ணப்பித்தால், ஷிராணியின் கணவரே அவர் என்பது தெரிய வந்ததும் அவருக்கு வேலைவாய்ப்பு வழங்க நிறுவனங்கள் அஞ்சின. ஒருநாள் லஞ்ச ஊழல் விசாரணைக் குழு முன்னிலையில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்ட வேளை, அன்றைய தினம் தமது மகன் பரீட்சையொன்றில் தோற்ற வேண்டியிருந்ததாம். அவ்வி தம் தமது மகன் பரீட் சைக்குத் தோற்ற வேண்டியுள்ளதைத் தெரிந்து கொண்டே அன்றைய தினம் தம்மை லஞ்ச ஊழல் விசாரணைக் குழு முன்னால் முன்னிலையாகுமாறு வற்புறுத்தினர் எனவும் அவர் தெரிவித்தார். வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவாற்ற அவருக்கு அழைப்புக்கள் கிடைத்தபோதிலும், வெளிநாடு செல்வதற்கு அவருக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த விதத்தில் மஹிந்தவின் அரசு ஷிராணிக்கு ஏற்படுத்தக் கூடிய உச்சப் பாதிப்புக்களை ஏற்படுத்தியது.

'என்றாவது ஒருநாள் எனக்கு நியாயம் கிட்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்குண்டு' என்று, குறிப் பிட்ட அந்த நேர்காணலின் போது ஷிராணி தெரிவித்திருந்தார்.

மஹிந்த திடீர் ஜனாதிபதித் தேர்தலைப் பிரகடனப் படுத்தி, தேர்தலில் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராகக் களமி றங்க முடிவான பின்னர் தாம் தேர்தலில் வெற்றியீட்டினால் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடமிருந்து பறிக்கப்பட்ட சகல கௌரவங்களையும் மீண்டும் அவருக்கு வழங்குவேன் என மைத்திரிபால உறுதியளித்துள்ளதாக பத்திரிகை களில் செய்தி பிரசுரமாகியிருந்தது. உங்களிடமிருந்து பறிக்கப்பட்ட பிர தம நீதியரசர் பதவியை உங்களுக்கு மீண்டும் வழங்குவோம் என மைத்திரிபால தரப்பினர் வாக்குறுதி எதுவும் வழங்கவில்லையா? என நான் அந்த நேர்காணலின் போது ஷிராணியி டம் வினாவினேன். அது குறித்து சட்டத்தரணிகள் சங்கம் மைத்திரிபால தரப் பினரை வற்புறுத்தி வருவ தாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக,தான் எதுவும் அறிந்திருக்கவில்லை எனவும் ஷிராணி தெரிவித் தார்.

பறிக்கப்பட்ட அவரது பதவியை அவருக்கு மீண் டும் பெற்றுக் கொடுப்பது நீதி தேவதைக்கு வழங் கும் நியாயமாக அமையு மென கடந்த டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிய எனது கட்டுரையில் மைத்திரி யின் கருணை ஷிராணிக் குக் கிட்டுமா என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. அதேபோன்று மைத்திரிபாலவின் நூறுநாள் கள் வேலைத் திட்டம் என்ற தேர்தல் கொள்கை நிலைப்பாட்டில் ஷிராணிக் கும் நீதி வழங்கப்படுமெ னக் குறிப்பிடப்பட்டிருந் தது. அவ்விதம் அந்தக் கொள்கை விளக்கத்தில் ஷிராணி விடயத்தையும் உள்ளடக்க வைப்பித்த பெருமை சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் நியாய மான சமூகமொன்றுக் கான அமைப்பை வழி நடத்திய சோபித தேரருக்குமே உரித்தாகும்.

மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று நாள்கள் சில கடந்த நிலையிலும் பிரதம நீதியரசராக நியமிக் கப்பட்ட மொஹான் பீரிஸ் தமது பதவியிலிருந்து வெளி யேறும் அறிகுறியேதும் தென்படவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால வும் பிரதமர் ரணிலும் மொஹான் பீரிஸை பிர தம நீதியரசர் பதவியிலிருந்து வெளியேற்றப் பல தரப்பட்ட முயற்சி களை மேற்கொண்டபோதி லும் அவற்றில் ஒன்றுதா னும் பயனளிக்கவில்லை.

கடைசியில் அந்தப் பொறுப்பை சோபிததேரரும் சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவர் உபுல் ஜயசூரிய உள்ளிட்ட சட்டத்தரணிகளுமே ஏற்றுக் கொண்ட னர். ஷிராணி மீதான வழக்கில் ஷிராணிக்காக முன்னிலையாகி வாதிட்ட ரொமேஸ் சில்வா மற்றும் சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி போன்றே உயிர் அச்சுறுத்தலுக்குள் ளான குணரத்ன வன்னி யாராச்சி போன்றோரும் அவர்களில் அடங்கியிருந் தனர்.

இதேபோன்றுதான் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதி பதி முஷாரப், அந்த நாட் டின் பிரதம நீதியரசர் சௌத் திரியை சட்டத்துக்கு முரணான விதத்தில் அவரது பதவி யின்றும் விலக்கி, அவசர கால நிலையைப் பிரகட னப்படுத்தி சௌத்திரியை சிறையிலும் அடைத்தார். 2008 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் புதிய அரசு பதவியேற்றதை அடுத்து ஜனாதிபதி முஷாரப் பதவி விலக நேர்ந்தது. புதிய பிரத மராகப் பதவியேற்ற பிரதமர் ஹிலானி, சௌத்தி ரியை சிறையிலிருந்து விடுவித்தார். அந்த நாட் டின் சட்டத்தரணிகள் சங்கம், சௌத்திரியை மீண் டும் பிரதம நீதியரசராக நியமிக்க வேண்டுமென ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தது. அரசமைப்புச் சிக்கல்கள் ஏற்படலாமெ னக் கூறி புதிய அரசு அந் தக் கோரிக்கையைத் தட் டிக் கழித்தது. கடைசியில் பொறுமையிழந்த சட்டத்தரணிகள் சங்கம் நீண்ட நடைப் பயணம் (லோங் மார்ச்) என்ற மாபெரும் எதிர்ப்புப் பேரணி ஒன்றை திட்டமிட்டு முன்னெடுத் தனர். ஊர்வலம் இஸ்லா மாபாத் நகரத்தை அண் மித்த வேளையில் மக்கள் சக்திக்கு அஞ்சிய பாகிஸ் தான் அரசு தனது நிறை வேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி மீண்டும் சௌத்திரியை பாகிஸ்தா னின் பிரதம நீதியரசராக நியமித்தது.

பாகிஸ்தானின் சட்டத்தரணிகள் போன்றே இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய உட்பட சட்டத்தரணிகள் மற்றும் சோபித தேரரின் நியாயமான சமூகமொன்றுக்கான அமைப்பினர் இன்று நாட்டில் பெரும் புரட்சியொன்றை நடத்திக் காட்டியுள்ளனர்.



அன்று ஷிராணி தனக்கெதிரான குற்றச் சாட்டுகளுக்கு விளக்கமளிக்க குற்ற வியல் விசாரணைக் குழு முன்பாக முன் னிலையாகும் முன்னர் ஷிராணியின் வெற்றிக்காக பிரித் நூல் கட்டி ஆசி வழங் கிய சோபித தேரரும், ஷிரா ணிக்கு நம்பிக்கையூட்டி தைரியம் பெறச் செய்த உபுல் ஜய சூரியவும் அவரை மீண்டும் பிரதம நீதியரசர் ஆசனத்தில் அம ரச் செய்திருந்தனர். ஷிராணி பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டதும் ஒரு ஜன வரி மாதத்திலேயே. மீண் டும் அவர் பிரதம நீதியரசர் கதிரையில் அமர முடிந்ததும் இதே ஜனவரி மாதத்திலேயே.

பத்திரிகையாளர் லசந்த விக்கிரம துங்க படுகொலை செய்யப்பட்டமை, சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றதுடன் சிறைக்கு அனுப்பப்பட்டமை, ஜனவரி மாதங்களிலேயே இடம்பெற்றமையாலேயே ஜனவரி மாதத்தை கறுப்பு ஜனவரி என அடையாளப்படுத்த நேர்ந்தது. ஆனால் அதே போன்றதொரு ஜனவரி மாதமொன்றிலேயே லசந்த வின் படுகொலை குறித்த விசாரணை, பொன்சேகா இழக்க நேர்ந்த சேவைக் கான வரப்பிரசாதங்களை மீளப்பெற முடிந்தமை, பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஷிராணி மீண் டும் பதவியில் அமர முடிந் தமை ஆகியவை கூட நிகழ்ந்துள்ளன.

இத்தகைய அரசியல் மாற் றம் அராபிய வசந்தத்தி லேயே இடம்பெற்றுள்ளதே தவிர இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னெப் போதும் இத்தகைய தலை கீழ் மாற்றமொன்று நிகழ்ந்ததில்லை. உண்மையில் மைத்திபாலவை நாட்டின் ஜனாதிபதியாக ஆக்கி வைத்தது அரசி யல் கட்சிகளது செயற்பா டுகளல்ல. நாட்டின் பொது மக்க ளது மன எழுச்சியும் பொது அமைப்புக்களது தீவிரச் செயற்பாடுக ளுமே அதனைச் செய் துள்ளன. தற்போது அந் தச் சக்திகளினால் பத விக்குக் கொண்டு வரப் பட்ட அதிகாரத் தரப்புக் கள், முன்னைய அரசின் செயற்பாடுகளால் அந்த அரசு வீழ்ச்சியுற நேர்ந் தமையை படிப்பினையா கக் கொண்டு நல்லாட் சியை நாட்டில் ஏற்படுத் தத் தவறுவார்களானால், அவர்களையும் ஆட்சி அதிகாரத்திலிருந்து தூக்கி ஏறி யத் தக்க பெரும் பலத்தை இன்று அந்த மக்கள் சக்திகொண்டுள்ளது.

மைத்திரிபால, ஷிரா ணிக்கு எதிரான குற்ற வியல் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஒருவரே; ரணிலோ அந்த விடயத்தில் மதில் மேல் பூனையாகச் செயற் பட்டவர்; இவர்களுடன் கூடி அன்று ஷிராணிக்கு எதிரான குற்றவியல் பிரே ரணையை ஆதரித்தும் எதிர்த்தும் வாக்களித்த அனைவரும் அந்தத் தவறை உணர்ந்து தத் மைத் திருத்திக் கொள்ள இன்று ஒன்று சேர்ந்து செயற்பட முன் வந்துள்ளனர். அத்தகைய தொரு நிலையை உருவாக்கிக் காட்டிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சோபித தேரரின் நியாயமான சமூகமொன்றுக் கான "அமைப்பும் தேசியத்தின் காவல் தெய் வங்களாகக் கொள்ளத்தக்கவர்கள். இதனை மன திருத்தி நாட்டின் ஒட்டு மொத் தச் சமூகமும் நீதியும் நியாயமும்மிக்க நல்லாட்சியொன்று நாட்டில் நிலவ வைக்க விழிப்புடன் செயற் பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.

> “ முன்னைய படிப்பினைகளை மன திருத்தி, நாட்டின் ஒட்டு மொத்தச் சமூகமும் நீதியும் நியாயமும் மிக்க நல்லாட்சி யொன்று நாட்டில் நிலவ வைக்க விழிப்புடன் செயற் பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.

## நாளை

**தை-24**
**சனிக்கிழமை**
**07.02.2015**

திதி: திருத்தியை: மு.ப.11.27 வரை
நட்சத்திரம்: உத்தரம் முழுவதும்
சுபநேரம்: 03.35-05.05 வரை
இராகுகாலம்:09.35-11.05 வரை

## ஞானச்சுடர்



### ஆன்மிகச் சிந்தனை

அழியாத பரம்பொருள் உள்ளத்தில் இருக் கிறது. எனவே தான் தியானம் செய்யும் போது ஆனந்தம் உண்டாகின்றது. தியானம் படிப் படியாக ஆழமாகும்போது. இறையுணர்வு அனுபவம் கிடைக்கும். அது மெதுவாகத்தான் வரும். அதனை ஒரே நாளில் எதிர்பார்க்க முடியாது. தியானத்தின்போது ஆனந்தம் பெறுவதென்பது ஒரு சாதாரண விடய மல்ல. தியானம் தீவிரமாகும்போது இறைவ னின் கருணையும் உன்னைத்தேடி வருகிறது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அன்பு ஆனந்தத்தைக் கொண்டு வரும்

அன்பு என்னும் வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். சுதந்திரம் இல்லாத வரை யில் அன்பு தோன்றுவதில்லை. அன்பின் மூலமா கச் செய்யப்படும்ஒவ்வொருசெயலும்ஆனந்தத்தைக் கொண்டு வரும் . அமைதியையும் ஆசிகளையும் விளை வாகக் கொண்டு வராத அன்புச் செயல்கள் எதுவுமே இல்லை. உண்மை இருப்பு, உண்மை அறிவு, உண்மை அன்பு மூன்றும் ஒன்றோடு ஒன்று நிரந்தரமாக இணைந் தவை.இந்த மூன்றும் ஒன்றி லேயே உள்ளன. இதில் எங்கே ஒன்று உள்ளதோ அந்த இடத்தில் மற்றவை இருந்தே தீரும்.



## முள்ளங்கியின் முத்தான நன்மைகள்

இன்றைய காலகட்டத் தில் காய் கறிகளை உண வில் சேர்த்துக் கொள்ளாமல் துரித உணவுகளிலேயே மக்கள் ஆர்வம் காட்டு கின்றனர். பின்னர் வயிற் றில் பிரச்சினை, சிறுநீரக் கத்தில் கல் என தினந்தினம் மாத்திரைகளை சாப்பிடும் நிலை தான் ஏற்படுகிறது. ஆனால் ஆரோக்கியமாய் வாழ வேண்டும் என்றால் ஒரே வழி காய்கறிகள் தான். அதிலும் முள்ளங்கி சாப்பிடுவதால் நாம் ஆரோக் கியமாய் இருப்பது மட் டுமன்றி உடல்நலம் பற் றிய பயம் இல்லாமலும் வாழலாம். முள்ளங்கியை உணவில் அதிகம் சேர்ப் பதால், உடலில் தாது பலம் அதிகரிக்கும். சிறு நீரகத்தில் சேரும் கற்க ளைக் கரைத்து விடும். நரம்புத் தளர்ச்சியைப் போக்கி, உடலுக்கு அதிக சக்தியை கொடுக்கும். முடி உதிர்வதைத் தடுத்து, நன்கு வளர்ச்சியடைய உதவும். இரைப்பை வலி, வயிற்று வலி, வயிற்று எரிச்சல் ஏற்பட்டால் முள் ளங்கியைச் சாப்பிட்டால் குணமாகி விடும். முள்ளங் கியை அவ்வப்போது சமைத்து உண்டுவந் தால், தொண்டை சம்பந் தப்பட்ட வியாதிகள் நீங்கி விடும், குரல் இனி மையாகும். முள்ளங் கியைத் தட்டிச்சாறெ டுத்து அதிகாலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கல் அடைப்பு வியாதி குண மாகிவிடும்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 50 | 60 | 80 | 30 | 40 | 60 | 40 |
| கத்தரி | 70 | 60 | 80 | 100 | 70 | 80 | 80 | 50 |
| கரட் | 180 | 160 | 180 | 180 | 140 | 200 | 180 | 150 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 60 | 40 | 50 | 45 | 30 |
| பயிற்றை | 140 | 140 | 160 | 140 | 140 | 150 | 120 | 100 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 120 | 240 | 180 | 150 |
| கருணைக்கிழங்கு | 70 | 50 | 100 | 80 | 60 | 70 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 120 | 80 | 70 | 80 | 70 | 90 | 65 | 70 |
| சி.வெங்காயம் | 40 | 100 | 100 | 100 | 100 | 130 | 100 | 50 |
| பூசணி | 80 | 70 | 90 | 80 | 80 | 120 | 75 | 80 |
| தக்காளி | 200 | 200 | 200 | 240 | 200 | 320 | 260 | 250 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 100 | 80 | 120 | 80 | 70 |
| கீரை | 10 | 30 | 20 | 20 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30 | 20 | 15 | 15 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 300 | 320 | 300 | 500 | 300 | 300 |
| புடோல் | 100 | 80 | 60 | 100 | 100 | 120 | 120 | 80 |
| கோவா | 140 | 80 | 80 | 120 | 100 | 140 | 120 | 120 |
| வெண்டி | 150 | 100 | 100 | 120 | 100 | 80 | 120 | 140 |
| போஞ்சி | 200 | 120 | 160 | 200 | 140 | 140 | 220 | 150 |
| லீக்ஸ் | 160 | 200 | 260 | 280 | 220 | 300 | 220 | 220 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 50 | 40 | 50 | 35 | 35 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 | 60 | 80 | 65 | 50 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 | 60 | 40 | 120 | 60 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 | 220 | 220 | 300 | 350 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 120 | 90 | 120 | 140 | 90 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 700 | 800 | 650 | 400 |
| நண்டு | 450 | 500 | 400 | 300 | 350 |
| கணவாய் | 450 | 550 | 500 | 700 | - |
| பாரை | 500 | 400 | 500 | - | 370 |
| சுறா | 650 | 750 | 550 | 700 | - |
| சீலா | 450 | 500 | 450 | 300 | 300 |
| விளை | 550 | 600 | 500 | 500 | 350 |
| முரல் | 350 | 350 | 350 | 400 | |
| கும்பிளா | 500 | 400 | 400 | - | 300 |
| கிழாக்கன் | 450 | 400 | 450 | - | - |
| ஒரா | 350 | 400 | 300 | 250 | - |
| திரளி | 250 | 350 | 200 | 100 | - |
| நகரை | 300 | 350 | 300 | - | 250 |
| சூடை | 180 | 200 | 100 | - | 70 |
| ஒட்டி | 200 | 250 | 200 | 250 | 200 |
| திருக்கை | 150 | 150 | 250 | 350 | 150 |
| பாலை | 350 | 300 | 400 | 250 | - |
| வாளை | 300 | 350 | 350 | 250 | 200 |
| [illegible] | 80 | 100 | 80 | 100 | - |
| [illegible] | 250 | 300 | 200 | 400 | 220 |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 3 | | | | | 8 | |
| 5 | 4 | | | | | | 1 | 7 |
| 8 | | 7 | 1 | 5 | | | | 9 |
| | 3 | 2 | | 1 | | 9 | | |
| | | 1 | 8 | | 4 | 5 | | |
| | | 5 | | 7 | | 2 | 4 | |
| 9 | | | | 4 | 2 | 1 | | 6 |
| 1 | 5 | | | | | | 9 | 2 |
| | 2 | | | | | 7 | 5 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 4 | 8 | 1 | 3 | 6 | 7 | 5 |
| 8 | 1 | 6 | 7 | 5 | 4 | 2 | 3 | 9 |
| 7 | 5 | 3 | 6 | 9 | 2 | 8 | 4 | 1 |
| 3 | 6 | 8 | 5 | 4 | 1 | 7 | 9 | 2 |
| 1 | 7 | 5 | 9 | 2 | 8 | 3 | 6 | 4 |
| 9 | 4 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 |
| 6 | 3 | 1 | 4 | 8 | 5 | 9 | 2 | 7 |
| 4 | 8 | 9 | 2 | 3 | 7 | 1 | 5 | 6 |
| 5 | 2 | 7 | 1 | 6 | 9 | 4 | 8 | 3 |

நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல்: அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## சளியை விரட்டும் கற்பூர வல்லி

இந்தச் செடியின் இலைகள் கைமருந்தாகப் பயன் படுத் தப்படுகின்றன. இதன் கிழங்குப் பகுதி பல மருந்துகளில் மூலப் பொருளாகவும் சேர்க்கப்படுகிறது. சளி, இருமல், தலைவலி போன்றவற்றைக் குணப்படுத்தும் தன்மை கற்பூர வல்லி இலைக்கு உண்டு. குழந்தைகளுக்கு ஏற்படும் சளிக்கு நல்ல மருந்து. இலைச்சாறு சற்றுக் காரமாக இருக்கும் என்பதால், தேன் கலந்து சாப்பிடலாம். தலை வலிக்கு இலையைக் கசக்கித் தலையில் தடவலாம்.




முத்துசரவணன்

சுற்றுச் சூழ்நிலை,தட்ப வெப்பம், இருப்பிடம், உணவுப் பழக்கம் ஆகிய வற்றைப் பொறுத்தே முகத் தோற்றம், உடல மைப்பு, உடலுறுப்புகள் உருவாகின் றன. இது இயற்கையின் விதி.

உயிரினங்களில் மனித னுக்கு அடுத்த படியாக குரங்கு இனம்– குறிப்பாக சிம்பன்சி இனக் குரங்குக்கு மாத்திரமே கைகள் அமைந் திருக்கின்றன. அதுவும் அதன் உபயோகத்துக்கு ஏற்ற வாறு உருவாகியிருக்கிறது.

ஆனால், மனிதர்கள் அனை வருக்கும் ஓரேவிதமாகக் கைகள் அமைந்திருக்க வில்லை. பல வகையாக உள்ள கைகளை நம் முன் னோர் ஏழு பெரும் பிரி வாக வரிசைப் படுத்தியிருக் கிறார்கள்.

ஒருவரின் எதிர்காலத்தைக் கண்டறிய உள்ளங் கையி லுள்ள ரேகைகளை மாத்தி ரம் பார்த்து முடிவு செய்து விடக்கூடாது. கைகளின் அமைப்பு, விரல்களின் அமைப்பு ஆகியவற்றையும் பார்த்து ரேகை களையும் கவனித்து பலனை அறிய வேண்டும்.ரேகைகளைப் போல் கையின் அமைப்பு, விரல்கள் அமைப்பு ஆகிய வையும் முக்கியமானவை.

**ஏழு வகைக் கைகள்**

1. அடிப்படை 2. சதுரம் 3. நீள் சதுரம் 4.தத்துவம் 5. கூம்பு 6. மனவியல் 7. கலப்பு

2.கையில் மிக முக்கிய மான ரேகைகள் ஏழு; அவை:–

1. ஆயுள் ரேகை .இது சுக்கிர மேட்டை வளைத்துக் கொண்டு செல்கிறது.
2. புத்தி ரேகை இது கையின் மத்திய பாகத்தில் நீண்டு செல்கிறது.
3. இதய ரேகை. புத்தி ரேகைக்கு சம கோட்டில் விரல்களின் அடிப் பாகத்தில் செல்கிறது.
4. சுக்கிர வளையம். இதய ரேகைக்கு மேலே சூரியன் சனிமேட்டைச்சுற்றிவளைத் துச் செல்கிறது.
5. ஆரோக்கிய ரேகை. புதன் மேட்டி லிருந்து கீழ் நோக்கிச் செல்கிறது.
6. சூரிய ரேகை. சூரிய மேட்டிலிருந்து தோன்றி செவ்வாயின் கீழ் மேட்டில் முடிவடைகிறது.
7. விதி ரேகை. கங்கண ரேகையில் தோன்றி மேல் நோக்கிச் சென்று சனி மேட் டில் முடிவடைகிறது.

**3. இரண்டாம் தர ரேகை கள் ஏழு; அவை:-**

1.செவ்வாய் ரேகை. செவ் வாய் மேட்டிலிருந்து ஆரம் பமாகி ஆயுள் ரேகைக்குள் முடிவடைகிறது.
2. காதல் ரேகை. ஆரோக்கிய ரேகைக்குச் சம கோணத் தில் செல்கிறது.
3. ஞான ரேகை. சந்திர, செவ் வாய் மேட்டை ஓரளவு வளைத்துச் செல்கிறது.
4.திருமண ரேகை. புதன் மேட்டில் நேர்க்கோடாக அமைந் திருக்கிறது. 5. 6,7 கங்கண ரேகைகள். மணிக் கட்டில் அமைந்திருக்கின் றன.இவை தவிர உப ரேகைகள், குறிகள் முதலிய வையும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் முக் கிய மானதே. பலன்களை அறிய உப ரேகைகள், குறி களைக் கணக்கில் எடுத்துக் கொள்வது மிக அவசி யமாகும்.

**1. அடிப்படைக் கை**

குட்டையான விரல்களும் குட்டையான நகங்களையு முடைய இந்த வகைக் கை யின் உள்ளங்கை பள்ளம் மேடாகக் காணப்படும். கைக ளில் சில ரேகைகளே காணப் படும். இத்தகைய கையை உடையவர் சிறிதும் முன் யோசனை இல்லாதவராக வும் மிருக பலத்தையும் மிருக சுபா வத்தை யுமே நம்பியிருப் பார்.

து ணி வி ல் லா த வ ர் க ள், மோகாந்த கார மானவர்கள். அழிக்க வேண்டும் என்ற ஆத்திர புத்தியில் எல்லா வற்றையும் நாசம் செய்வர். கொலை செய்யவும் தயங்க மாட்டார்.

வஞ்சக எண்ணமுள்ள இவர் ஒரு காரணமுமின்றி வஞ்சக மாகவே ஒரு வரைக் கவிழ்த்து விடுவார். ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ண மும் இருக்காது. ஆனால் தீமையான ஒன்றை எந்த வித நோக்க முமின்றிச் சுத்தமாகச் செய்து முடித்து விடுவார்.

வாழ்க்கையில் எந்தக் குறிக் கோளும் இல்லாதவர், சாப்பிடுவார், குடிப்பார், தூங்கு வார், இவ் வளவு தான் இவ ருக்குத் தெரி யும். எதற்காகச் சாப்பிட வேண்டும், தண்ணீர் பருக வேண்டும் தூங்க வேண் டும் என்பது கூட இவருக் குத் தெரியாது.

பூமிக்குப் பாரமாகவும், சோத்துக்குக் கேடாகவும் இருக்கும் இவரால் உலகத் துக்கோ சமூகத்துக்கோ ஏன் இவர் குடும்பத்துக்கோ கூட நன்மையும் இருக்காது.

இத்தகைய கையுள்ள வரு டைய புத்தி ரேகைகளில் ஆழமாகப் பதிந்து தடிப் பாகவும் நீளம் குறைந் தும் இருக்கும்.

இப்படிப்பட்ட கையுடைய வர் பிறர் துன்பத்தையோ துயரத்தையோ கூட உணர மாட்டார். 'கொடூரமான ஆசை இருக்குமே தவிர வாழ்க் கையில் முன் னேற் றத்துக்கான எந்த ஆசை யும் இருக்காது.

புத்தி ரேகை சிறிது அபி விருத் தியடைந்தவராக இருந்தால் அவர் மிகவும் கஷ்டப்பட்டு மனதை அபி விருத்தி செய்து கொண்டு பிறருடன் அனுசரித்துப் போகத் தொடங்கு வார். ஓளரவு பிறர் துன்பத்தை உணர்ந்தும் வாழ்க்கை யில் நல்ல நிலைக்கு வரவேண் டும் என்ற எண் ணமும் இருக்கும். ஆனால் இயற் கையான மிருக இச்சை மாத்திரம் மாறாது.

**2. சதுரம்**

சதுரக் கை என்றால் மணிக் கட்டிலிருந்து உள்ளங்கை விரல்களின் அடிப்பாகம், விரல்கள் ஆகிய அனைத் தும் சதுரம் போல் காணப்படும்.

இத்தகைய கையைப் பயனுள் ளதாக அழைப்பார்கள். எல் லாத் தரப்பு மக்களி டமும் இந்தக் கையை உடை யவர் களைக் காணலாம். பெரும் பாலும் குட்டையாகவும் சதுரமாகவுமே இவர்களு டைய கைகள் இருக்கும்.

இப்படிப்பட்ட கை உடைய வர் கட்டுத் திட்டத்துடனும், நேர் மையாகவும், நேரம் தவ றாதவராகவும், நல்ல குண முள்ள வராகவும் இருப்பார். பழக்க வழக்கங் கள், சமூகத் திட்டங்களுக்கு மதிப்பளிப் பார். மேலதி காரிக்கு மதிப்பளிபார். கட் டுத் திட்டங்களை விரும்பு வார்.

வீட்டில் மாத்திரமன்றி எங் குமே ஒவ் வொரு பொரு ளும் அதனதன் இட்த்தில் இருக்க விரும்புவார். அதே போல் எல்லாவற்றையும் மனதில் முறையாகப் பதிய வைத்துக் கொள்வார்.

சமூகப் பழக்கங்களுக்கு அடிமையாவார். சட்டத்துக்கு மதிப்பளிப்பார். சண்டை சச்சரவுக்குப் போக மாட் டார். ஆனால் ஒன்றை எதிர்க் கத் தீர்மானித் தால் கடைசி வரை எதிர்ப் பைக் கைவிட மாட் டார். அமை தியை நேசிப்பார்.

கலை, ஓவியம், இலக்கி யம் ஆகிய வற்றின் காத லர் உலகறிய வெற்றி கள் பெறுவார்.

எதையும் சட்டென்று ஒப் புக்கொள்ள மாட் டார். உதாரணம், ஆதாரம் காட்டினால் தான் நம்பு வார், கற்பனையோ அல் லது சொந்த எண் ணமோ இருக்காது. ஆனால் மத விவகாரங் களில் சொன் னதை நம்புவார்.

கடுமையாக– தன்னால் இயன்ற வரை உழைப் பார் இவரைவிடத் திற மையும் புத்திசாலித்த னமும் உள்ள வரை நெருங்கவிடமாட் டார்.

நடைமுறைக்கு சாத்திய மானதை யும், விஞ்ஞா னத்தையும் விரும்புவார். குடும்பத்தை நேசிப்பார், குடும்பக் கடமை களைச் செய்ய தவற மாட்டார். கொடுத்த வாக் கைக் காப்பாற்றுவார். நண் பர்களிடம் உண்மையாக நடந்து கொள்வார். கொள் கைப் பிடிப்புடன் நேர்மை யாகத் தொழில் செய்வார். இவரிடமுள்ள பெரிய குறை பாடு இவருக்குப் புரியாத அனைத்தையும் மறுப்பதே.

**1.சதுரக் கையில் குட்டை விரல்**

மிக அபூர்வமாகவே சதுரக்கையில் மிகக் குட்டை யான விரலைக் காண லாம். இத்தகைய விரலை யுடையவர் "காதால் கேட்டுக் கண் ணால் பார்த்தால் தான் நம்புவேன்" என்ற வகை யைச் சேர்ந்தவர். சந் தேகப் பிராணிகள். இவ ரைச் சமாதானப்படுத்து வது மிகக் கடினம். குறு கிய மனப்பான்மையுள் ளவர்.

கடுமையாக உழைத் துப் பணம் சேர்ப்பார். வறு மையால் அவதிப்பட மாட்டார். எதையுமே பண மாகவே நோக்கு வார். சொத்து, பணம் சேர்ப் பதில் அதிக ஆர்வம் காட்டுவார்.

*(தொடரும்)*




# உணர்வுகளோடு பின்னப்பட்டது ஆண், பெண், பேதம்

ஆண், பெண் பேதம் என்பது உயி ரியல் ரீதியானது மட்டுமல்ல, உணர்வுகளோடு பின் னப்பட் டது. ஒரு குழந்தை பிறந்ததில் இருந்தே வீட்டில்ஆணுக்கென்றும், பெண் ணுக் கென்றும் பிரத்தி யேகமான அறிவுரைகள் வழங் கப்படுகின்றன.

ஆணின் தைரியமும், சாகச மும் பாராட்டப்படும்போது, ஆண்மை யின் ஆதிக்க உணர்வு வளர்க்கப் படுகிறது. பெண் ணின் பொறு மை யும், வீட்டு வேலை களை ஏற்கும் பொறுப்பும் நல்ல மனைவிக் கான, மருமகளுக்கான குண நலங்களை வரித் தெடுப்பதும்தான் பெண்மை யின் தன்மையாக உருவாக்கப் படுகிறது.

சமூகத்தில் தான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை யும் குழந்தை தன் பெற்றோரிட மிருந்து தான் கற்றுக்கொள் கிறது.

சாதி, மதம், மொழி, இனம் போன்ற வையும் இந்தக் கருத்தாக்கத் தின் மேல் தங்களின் தாக்கத்தை தச் செலுத்துகின்றன. ஆடை அணித லில் தொடங்கி, பழக்க வழக்கங் கள், விளையாட்டுக்கள், சிறு சிறு வேலைகள் என உயிரியல் ரீதி யான அடையாளத்தை வைத்து, அதன் அடிப்படையில் சமூக அடை யாளங் களை உருவாக்குகிறது. சமூக விழு மியங்கள் பல்வேறு நடை முறை கள் மூலமாக ஆண், பெண் பேதத்தை வலியுறுத்திக் கொண்டே இருக் கின்றன.

ஆண்மை, பெண்மை என்பது சமூகம் உருவாக்கிய கருத் தாக்கமே!



# முட்டாள்களுக்கு வீண் உபதேசம்



எருமைப்பட்டியில் சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவரிடம் இரண்டு கழுதைகள் இருந்தன. அவை இரண்டும் ஒரு நாள் மிக வருத்தத்துடன் பேசிக் கொண்டன. 'நாம் சுமந்து வரும் அழுக்குத் துணிகள் மட்டும் சலவை செய்ததும் அழுக்கெல்லாம் போய் வெண்மையாகத் தெரிகின்றதே! ஆனால், நாம் மட்டும் ஏன் அந்தத் துணிகளைப் போன்று வெண்மையாக மாற முடியவில்லை?' என்று தங்களுக்குள் கேட்டுக்கொண்டன. அந்தப் பக்கமாக வந்த ஆடு கழுதைகளின் பேச்சை ஒட்டுக் கேட்டுவிட்டது.

கழுதைகளின் முட்டாள்தனமான பேச்சைக் கேட்டு அந்த ஆட்டுக்கு சிரிப்பே வந்துவிட்டது. 'கழுதைகளே! நீங்கள் பேசிக்கொண்டிருந்ததை நானும் அறிவேன். உங்கள் சந்தேகம் என்ன வென்று எனக்குப் புரிந்து விட்டது. முட்டாள்தனமான உங்கள் சந்தே கத்தை எப்படிப் போக்குவ தென்று எனக்குத் தெரியவில்லை...' என்று கூறியது ஆடு. இதைக் கேட்ட கழுதைகளுக்கு கோபம் வந்து விட்டது.

"ஆடே எங்களைப் பார்த்து முட்டாள்கள் என்று கூறுகிறாயா? எங்கள் சந்தேகத்துக்கு உன்னால் விடை கூற முடிந்தால் கூறு... இல்லையேல் இந்த இடத்தை விட்டு ஓடு... அதை விட்டு விட்டு முட்டாள்தனமான சந்தேகம் எனக் கூறி எங்களை அவமதிப்பு பண்ணாதே," என்று கோபமாகக் கூறின. "கழுதை களே! நீங்கள் என் மீது ஏன் இப்படி கோபப்படுகிறீர்கள்? துணிகளும் நீங்களும் ஒன்றா? அப்படியிருக்க முட்டாள் தனமான உங்கள் கேள்விக்கு என்னால் எப்படி பதில் கூற முடியும்? அப்படியே நான் பதில் கூறினால் நானும் உங்களோடு சேர்ந்து முட்டா ளாகி விடுவேன்," என்று கூறியது. கழுதை கள் இரண்டும் பொறுமை இழந்தன. தங்களின் ஆத்திரத்தை எல்லாம் ஒன்று திரட்டி தங்கள் கால்களால் ஆட்டை எட்டி உதைத்தன.

கழுதைகள் இரண்டும் உதைத்த வேகத்தில் ஆடு எங்கோ சென்று விழுந்தது. வலி தாங்காமல் நொண்டி நொண்டி எங்கோ நடந்து சென்றது.




# அம்புலன்ஸ்



நெப்போலியனின் குடும்ப மருத்துவரான 'பாரன்லாரே' என்பவர்தான் 1792 ஆம் ஆண்டு அம்புலன்ஸைக் கண்டுபிடித்தார். போர்க் களத்தில் காயமடைந்தவர்களை எடுத்துச் செல்வதற்காக, திறந்த உந்து வாகனங்களைத்தான் முதலில் பயன் படுத்தினார்கள். இந்த உந்து வாகனங்களை கரடு முரடான சாலையில் கொண்டு செல்லும் போது அந்த வாகனம் ஆடியது. இந்தக் காரணத்தால், வாகனத்தில் படுத்திருக்கும் காய மடைந்த வீரர்களும் அசைந் தாடினார்கள். அப்போது அவர்களுக்கு வலி அதிகமானது. இதைத் தவிர்ப்பதற்காக லாரே, உந்து வாகனத்தில் கம்பிச் சுருள்களைப் பொருத்தினார்.

1796 ஆம் ஆண்டு பிரெஞ் இராணுவம், போரில் காயப் பட்டவர்களைக் கொண்டு செல்வதற்காக் குதிரைகள் இழுத்துச் செல்லும் அம்பு லன்ஸை உருவாக்கியது. பின்னர் 1900 ஆம் ஆண்டில் பிரெஞ் இராணுவம், மோட் டார் பொருத் தப்பட்ட அம்பு லன்ஸை உருவாக்கியது.

# தற்கொலைக்கு முக்கிய காரணம் என்ன?



தற்கொலை பற்றிய உரையாடல்கள் அன்றாட ஊடக விவாதங்களின் ஓர் அங்கமாக உள்ளன. ஆனால் ஏன் தற்கொலை நடக்கிறது என்பது குறித்த புரிதல் மிகவும் குறைவாகவே உள்ளது. வாழ்க்கையில் பார்த்திராத, பழக்கமே இல்லாத ஒரு நபர் தற்கொலை செய்து கொண்டால்கூட அது குறித்து எல்லாருக்கும் அபிப்பிராயங் கள் உள்ளன. 'என்ன கோழைத்தனமான செயல்' என்றும் 'மிகவும் பலவீனமான நபர்' என்றும் பலரும் சொல்வர். தற்கொலை செய்யும் முடிவை எடுப்பவர்கள் தங்கள் தற்கொலை மூலம் பழி வாங்கல், வழியிலிருந்து தப்பிப்பது, மீட்பு, தியாகம் போன்ற விடயங்கள் நிறைவேறுவதாக நம்புவதாகத் தற்காலச் சமூக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். நாம் வாழும் கலாசாரச் சூழ லுடன் தொடர்புடைய உயிரியல், மரபியல் மற்றும் சமூகக் காரணிகள்தாம் இந்தக் கற்பனைகளை விளைவிக்கின்றன. வெறுமனே மரபியல் விதியாக மற்றுமே தற்கொலையை எளிதாக நிர்ணயித்து விட முடியாது. பாலினம், வயது, திருமண நிலை, உடல் ஆரோக்கியம் மற்றும் மனநலம் என அனைத்தும் ஒருவரது தற்கொலை முடிவுக்குக் காரணம் ஆகின்றன.

சந்தோஷம், துக்கம், கவலைகள், வெற்றிகள், தோல்விகளைக் கையாள்வது எப்படி என்று தெரியாதவர்களும், போதுமான தொடர்புத் திறன் அற்றவர்களும், மற்ற நபர்களிடம் உணர்வுரீதியான உறவை மேற்கொள்ள முடியாதவர்களிடமும் குடும்பரீதியான வரலாற்றின் தாக்கம் உள்ளது. சமூக உளவியல் அடிப்படை யில் பார்த்தால், போதை பயன்படுத்துபவர்கள், தற்கொலை விருப்பம் உள்ளவர்கள் மற்றும் மன நலம் குன்றி யவர்கள் இருக்கும் குடும்பங்களிலிருந்து வரும் நபரிடம் தற்கொலை எண்ணம் அதிகம் இருக்கும். உடல்நல மின்மை, ஊனம், நாள்பட்ட உடல்வலி போன்ற வையும் தற்கொலைக்கு முக்கிய காரணமாக உள்ளன. தீராத துயரத்துக்கு முடிவு காண்பது நல்ல வழியாகத் தெரிகிறது. ஆளுமைக் குறைபாடு, உளச்சிதைவு மற்றும் அடிக்கடி மாறும் மனநிலை இயல்பும் காரணமாக உள்ளன. குடும்பங்களில் தற் கொலை தொடர்பாக எழும் எண்ணங்கள் குறித்து கூடி உட்கார்ந்து யாரும் பேசுவதேயில்லை. ஒருவருக்கு ஏற்பட்ட துயரம் குறித்துக் கூட, நேர்மையாக யாரும் உரையாடுவதேயில்லை. மனநலக் குறைபாடு தொடர்பாக சமூக விளக்கமே எம்மிடம் உள்ளது. பலவீன மனம் கொண்டவர்கள் தாங்கள் அவ்வாறு இருப்பதை ஒரு குறை யாகக் கருதுகிறார்கள். உணர்வுகளைக் கட் டுப்படுத்த முடியாதவர் மீது வெறுப்பு ஏற்படுகிறது. மற்றவரது விரக்தியை எதிர்கொள்ளும் போது, சுய இயலாமை குறித்தும் சகிப்பின்மை ஏற்படுகிறது.



# நம்முடைய நிஜ எதிரி யார்?

தங்களுடைய உணர்வுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சிலரும்கூட, மற்றவர்களால் தூண்டப்படும்போது சில நேரம் தவறான விடயங்களைச் செய்துவிடுகிறார்கள். மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய நிலையில் உள்ள மனிதர்களைக் கையாளுவது அவ்வளவு எளிதானதல்ல. சிலர் படபடவென்று பொரிந்து தள்ளிவிடுவார் கள். ஆனால், இன்றைய வேலைச் சூழலில் மற்றவர்களுடனான எமது அணுகுமுறை மிகவும் முக்கியமானது. சூழ் நிலை யும், தருணமும் இணக்கமற்று, எதிர்நிலையில் இருக் கும் போதுகூட, சிலர் விடயங்களைச் சிறப்பாகக் கையாண்டு தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள் வார்கள். எமது முதல் எதிரி நமக்குள் தான் இருக்கிறான்.

நமது சிந்தனைகள் செயல்கள் ஒருமைப்பட்ட தாகவும் மற்றவர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தாத வையாக இருக்கும்போது எம்மை வெறோரு எதிரி அணுகிவிட முடியாது. நாம் செய்யும் காரியங்கள் இன்னொருவரை சஞ்சலப்படுத்துவதாகவும், பெரிய தாக்கத்தை ஏற் படுத்துவதாகவும் இருந்தால் அவர் எமக்கு எதிரியாக மாறி விடுகிறார்.

# செய்திகள்

## நாமலின் தொலைக்காட்சி அலைவரிசைக்கு அழுத்தமாம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களது தொலைக்காட்சி சேவை மீது புதிய அரசு கடும் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களான யோசித மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரால் சீ.எஸ்.என் தொலைக்காட்சி சேவை நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான பிரத்தியேக தொலைக்காட்சி அலைவரிசையாக இந்த சேவை இயங்கி வருகின்றது.

இந்த அலைவரிசையின் மீது பாரியளவில் வரிகளை புதிய அரசாங்கம் விதித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. விளையாட்டுத் தொலைக்காட்சி அலை வரிசைகளிடமிருந்து வரி அறவீடு செய்யப்பட உள்ளதாக நிதி அமைச்சர் இடைக்கால வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பின் போது தெரிவித்திருந்தார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு உரிய பங்களிப்பினை வழங்காது அரசாங்க சொத்துக்களை பயன்படுத்தும் நிறுவனங்கள் மீது வரி விதிக்கப்படும் என இன்றைய தினம் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். சீ.எஸ்.என் தொலைக்காட்சி வரிகளையோ மின்சாரக் கட்டணத்தையோ செலுத்தவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிதியாண்டில் 2000 மில்லியன் ரூபாவிற்கு மேல் வருமானம் ஈட்டும் நிறுவனங்களிமிருந்து 25 வீத வருமானம் வரியாக அறவீடு செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பாகவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டி நேரடி ஒளிபரப்பு உரிமை இறுதி நேரத்தில் சீ.எஸ்.என் அலைவரிசையிடமிருந்து பறி போயுள்ளது. உலகக் கிண்ணப் போட்டிகள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் ஒளிபரப்புச் செய்யப்பட உள்ளது. (ற)

## வரவு-செலவு திட்டத்துக்கு ஆதரவு வழுங்கப்படும்

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

புதிய அரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த 29ஆம் திகதி சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்திற்கு அதரவளிக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கப் போவதாக எதிர்க்கட்சியின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்கும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் மக்களின் நலனை கருத்திற் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளதனால் கட்சி வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவை வழங்கும்என அவர் தெரி வித்துள்ளார்.

எனினும் வரவு செலவுத் திட்டத்தின் ஒரு சில விடயங்கள் நடைமுறைச் சாத்தியப்பாடற்றது எனவும் அவை தொடர்பில் விமர்சனங்களை முன்வைக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் பெரிதாக சொல்லும்படி எதுவும் இல்லை எனவும் கடந்த அரசின் வரவு செலவுத் திட்டமே மீளவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத்தெரிவித்துள்ளார்.

கடந்த அரசு ஒதுக்கீடு செய்த சிலவற்றை ரத்து செய்து அதன் ஊடாக வேறும் சில விடயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த வரவு செலவுத்திட்டம் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு இன்றி நிறைவேற்றப்பட முடியாது எனவும், வரவு செலவுத்திட்டத்தின் வெற்றியில் எதிர்க்கட்சிகளுக்கும் பங்கு உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

பிறப்பு: 20.03.1923 இறப்பு: 04.02.2015

### திருமதி அன்னமுத்து கணபதிப்பிள்ளை ஜேம்ஸ்



நெடுந்தீவு கிழக்கு, 15ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.24, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னமுத்து கணபதிப்பிள்ளை ஜேம்ஸ் நேற்று முன்தினம் (04.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற கணபதிப்பிள்ளை ஜேம்ஸ்ஸின் (ஓடலி-தயினாதீவு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜோன் தவரட்ணம்-மேரிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னர்- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பிறிஷிட் அம்மா, தோபேட், பெனடிக்ற், அந்தோனிப்பிள்ளை (முன்னாள் அதிபர்-கண்டாவளை), சவரிமுத்து ஆகியோரின் நேசச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமநாதர், செல்லையா, நாகமுத்து மற்றும் பூவிலிங்கம் (நெடுந்தீவு) ஆகியோரின் மைத்துனியும், அந்தோனிப்பிள்ளை (ஜேர்மனி), யேசுதாசன் (தாசன்-விசுவமடு), மரியசீலன் (சீலன்-றக்கா றோட்), அமலபுஷ்பம், அமலராணி (கனடா), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், தங்கமலர் (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (விசுவமடு), தனலட்சுமி (ஆசிரியை, கொழும்பு இந்துக்கல்லூரி -இரத்மலானை), குலசிங்கம் (ஜேர்மனி), ஜெயசோதி (கனடா) ஆகியோரின் பேரன்பு மாமியும், வாசுகி (ஜேர்மனி), ஸ்ராலின் (ஜேர்மனி), யூலியஸ் (பொறியியலாளர்), ஜனகா (மாணவி, பேராதனை பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற ஜனனி மற்றும் இளங்குமரன் (மாணவன், விசுவமடு மகா வித்தியாலயம்), விகிதா (கனடா), கவிதா (கனடா), றொசானி (கனடா), ரூசோ (கனடா), லீசா (கனடா), அபிஷா (கனடா) ஆகியோரின் நேசப் பேர்த்தியும், டாறியோ (ஜேர்மனி), ஜனன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைக்காக (07.02.2015) சனிக்கிழமை காலை 9 மணிவரை இல. 24, றக்கா வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு தொடர்ந்து நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அன்னாரின் பூதவுடல் நெடுந்தீவு கிழக்கு, சவேரியார் ஆலயத்தில் செப ஆராதனைக்காக வைக்கப் பட்டு, பி.ப 2 மணிவரையில் வைக்கப்பட்டு, பின்னர் நெடுந்தீவு கிழக்கு, கட்டுராமன் சவரிமுத்து சகத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அந்தோனிப்பிள்ளை (மகன் 004971369674128)**
**யேசுதாசன் (மகன் 0770255934)**
**மரியசீலன் (மகன் 0779672457)**
**அமலராணி (மகள் 15147387506)**
**சந்திரகுமார் (மகன் 15146851637)**

(56555) (30)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வனித்தா கெங்காதரன்



சிவன் கோவிலடி மட்டுவில் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனித்தா கெங்காதரன் நேற்று (05.02.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-யோகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-தங்கலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், கெங்காதரனின் (பரிசாரகர் ஆயுள்வேத வைத்தியசாலை-கைதடி) அன்பு மனைவியும், மதுரதன் (தொழில் நுட்பப்பிரிவு A/L 2015, யாழ். இந்துக் கல்லூரி), மதுர்ஷா (தரம் -10, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், மனோன்மணி, காலஞ்சென்ற சுலோசனா மற்றும் விக்னேஸ்வரன் (சுவிஸ்), பாலகிருஷ்ணன், சந்திரகலா, புவனேந்திரன் (மேற்பார்வையாளர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி), விஜித்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐயாத்துரை, சிவராசா, வைத்திலிங்கம், வைரவிப்பிள்ளை, காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவயோகநாதன் (சுவிஸ்), சந்திரகலா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்கோவிலடி,**
**மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.** (56530) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### ஆழ்வைனார் - பாலசுப்பிரமணியம்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், இணுவில்வீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வைனார் பாலசுப்பிரமணியம் நேற்று(05.02.2015)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வைனார்- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புமகனும், காலம்சென்ற கந்தையா-மற்றும் தேவமணி தம்பதிகளின் மருமகனும், திருமதி இரஞ்சிதகுமாரியின் (மானிப்பாய் - மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), பாசமிகு கணவரும், காலஞ்சென்ற திருக்குமாரனின் அன்பு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, அருணாசலம் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்பு சகோதரனும், அஞ்சலாதேவி, காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் அசோகன், காண்டீபன், கருணன், உதயசூரியன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 02.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இணுவில் வீதி, மானிப்பாய்.** (56561) **இரஞ்சிதகுமாரி (மனைவி)**

### தம்பிப்பிள்ளை சிவலிங்கம்



சிவசோதி பவனம், சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிவலிங்கம் நேற்று (05.02.2015) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவானந்தன், திருமதி சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, திருமதி கிருகாம்பாள் ஆகியோரின் மைத்துனரும், திருமதி சுமதி (நிர்வாக உத்தியோகத்தர் (AO) சுகாதாரத் திணைக்களம்), காலஞ்சென்ற சி.புஸ்பா மற்றும் ச.சுபத்திரா (ஜேர்மனி), காலஞ்சென்ற சி.சித்திரா மற்றும் ச.சத்தியபாமா (HNB பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ப.சிவகுமார், நா.சந்திரசேனன் (ஜேர்மனி), ஜெ.சங்கர் (பாரத் ஸ்ருடியோ-உடுப்பிட்டி) மற்றும் காலஞ்சென்ற ப.ஆனந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், சேயோன், வைஸ்ணவன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'சிவசோதி பவனம்'**
**சந்தை வீதி, உடுப்பிட்டி.**
**தொ.பே: 0212055823,**
**077 8545 422** (C18942) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# சீனாவுடன் வலுவான உறவுகள் பேணப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

பீஜிங், பெப்.6
இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுடன் வலுவான உறவுகளை தொடர்ந்தும் பேணுவதாக உறுதியளித்துள்ளார் என 'சின்குவா' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.
சீனாவின் புதுவருடத்தை குறிக்கும் முகமாக விடுத்துள்ள செய்தியிலேயே மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்துள்ளார்.
சீன ஜனாதிபதியின் கடந்த வருட இலங்கைப் பயணத்தின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியுள்ள சிறிசேன, தனது ஆட்சிக்காலத்திலும் உறவுகள் வலுவான நிலையில் தொடரும் என உறுதியளித்துள்ளார். இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவுகள் பல நெருக்கடிகளை கடந்தும் நீடிப்பவை, பரஸ்பர நன்மையை அடிப்படையாகக் கொண்டவை. 2014ஆம் ஆண்டை திரும்பிப்பார்க்கும் போது கடந்த செப்ரெம்பரில் சீன ஜனாதிபதியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் எமது வலுவான உறவை மேலும் பலப்படுத்தவும் இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் பயனளிக்கக் கூடிய விதத்தில்



தந்திரோபாய ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் வழிவகுத்துள்ளமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். – என்றும் இலங்கை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவது விவேகமானதல்ல

## மு. கருணாநிதி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.6
இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பாக திராவிட முன்னேற்ற கழக தலைவர் முத்துவேல் கருணாநிதிக்கும் தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்துக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த தகவலை பிரஸ் ட்ரஸ்ட் ஓப் இந்தியா இணையத்தளம் வெளியிட்டுள்ளது.
இலங்கை தமிழர்களை, மீண்டும் தாயகத்திற்கு தற்போதைய நிலைமையில் அனுப்புவது விவேகமான செயல் அல்லவென கருணாநிதி தெரிவித்துள்ளார்.
1956 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழர் விடயமாக தாம் எத்தனை போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டமை குறித்து பன்னீர் செல்வம் அறிவாரா என அவர் வினவியுள்ளார்.
முத்துவேல் கருணாநிதியின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கையில், முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட போது, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டவர்களை நாடு கடத்த வேண்டும் என அப்போதைய முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் வலியுறுத்தியிருந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த கால கட்டத்தில், அதற்கு ஏன் முத்துவேல் கருணாநிதி ஆதரவை வழங்கவில்லை என ஓ.பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பியதாக பிரஸ் ட்ரஸ்ட் ஓப் இந்தியா இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.(ற)

# ரத்துபஸ்வல சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு விசேட குழு

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, பெப்.6
ரத்துபஸ்வல சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுவொன்று நியமிக்கப்பட உள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.
கம்பஹா ரத்துபஸ்வல பிரதேசத்தில் அமைதியான முறையில் நடைபெற்ற போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
இந்த தாக்குதல் சம்பவத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
'சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதா அல்லது விசேட குழு ஒன்றை நியமிப்பதா என்பது குறித்து நாளைய தினம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக் கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அது குறித்து கிரமமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
(ற)

# 19 நிமிடங்கள் தொடர்ச்சியாக திட்டினார் மஹிந்த ராஜபக்ஷ

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, பெப்.6
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மை 19 நிமிடங்கள் துர்வார்த்தைகளால் திட்டியதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
மஹிந்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தாம், அவரை வாழ்த்துவதற்காக தொலைபேசி அழைப்பு ஒன்றை எடுத்தாகவும் அதன் போது கடுமையான துர்வார்த்தைகளால் 19 நிமிடங்கள் தம்மை திட்டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் ஏற்கனவே சில ஊடங்களில் தகவல் வெளியிட்ட போதிலும் அவை வெளிப்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.
தம்மை தொடர்ச்சியாக திட்டிக் கொண்டே சென்றதாகவும் இறுதியில் தமக்கு தெரிந்த இரகசியம் ஒன்று பற்றி கூறிய போது அப்படியே தொலைபேசி அழைப்பைத் துண்டித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அதன் பின்னர் தொடர்ச்சியாக மஹிந்த தம்மை பழிவாங்கி வந்ததாகத் தெரிவித்துள்ளார்.
உத்தியோகபூர்வமாக வழங்கப்பட வேண்டிய வீட்டை வழங்க விடாது தடுக்க முயற்சித்தார் எனவும், பாதுகாப்பை மீளப் பெற்றுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
பாதுகாப்புதுண்டிக்கப்பட்டமை குறித்து அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட சில நாடுகளுக்கு தாம் முறைப்பாடு செய்ததனைத் தொடர்ந்து வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பில் நான்கில் ஒரு பகுதி மீள வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள் ளார்.
முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசியல் சாசனத்தின் காரணமாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் தமக்குக் கிடைத்ததாகத் தெரிவித்துள்ளார்.
தமக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்ற தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷ சூழ்ச்சித் திட்டம் தீட்டியதாகத் தெரிவித்துள்ளார். முதலில் 23 நாடாளுமன்ற உறுப்பினர்களை திரட்டி வருவதாகத் தெரிவித்த மஹிந்த இறுதியில் ஆறு பேரை மட்டுமே அழைத்து வந்ததாகவும், அதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.
போரின் 75 வீதத்தை தாமே முடித்ததாகவும், இரண்டு அதிவேகப்பாதைகள் மற்றும் தாமரைத் தடாகம் ஆகியனவற்றை தாமே உருவாக்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ற)

**வீடு வாடகைக்கு**
யாழ். அரசடி பிறவுண் வீதிச் சந்திக்கு அருகில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 462 9472

**வீடு வாடகைக்கு உண்டு**
நல்லூர் அரசடி வீதி, பகுதியில் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு.
தொடர்பு: 077 4656305, 077 5768321

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையாக ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434

**வாடகைக்கு**
யாழ்.மாநகரில் சிறாம்பியடி என்ற இடத்தில் தனியறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. அரசாங்க உத்தியோகஸ்தர், வங்கியாளர், பிஸ்னஸ் செய்வோருக்கு உகந்தது.
தொடர்பு: 077 516 0291

**தவறவிடப்பட்டுள்ளது**
NPKC 8771 இலக்கத்தை உடைய கார் வாகனத்தின் இலக்கத்தகடானது பரந்தனுக்கும் மீசாலைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 766 0396

**வேலையாள்கள் தேவை**
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பாலன் மில் இற்கு வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 021 321 2624

# வெலசுதா நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை

## பாதுகாப்புக் காரணங்களுக்காகவாம்

கொழும்பு, பெப்.6
பாதுகாப்பு காரணங்களுக்காக சர்வதேச போதைப் பொருள் வர்த்தகர் வெலே சுதா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.
பெரியளவிலான ஹெரோயின் போதைப் பொருள் கடத்தியதாக வெலே சுதா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதிவான் தேவிகா தென்னக்கோன் முன்னிலையில் வெலே சுதாவிற்கு எதிரான வழக்கு விசா ரணை நடத்தப்பட்டு வருகின்றது. நேற்று வெலே சுதா நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தார்.
எனினும், பாதுகாப்பு காரணங்களுக்காக வெலே சுதா நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை. நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.
அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் எதிர்வரும் 19ம் திகதி வெலே சுதாவை நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிலர் போதைப்பொருள் வர்த்தகத் துடன தொடர்புபட்டிருப்பதாக வெலே சுதா விசாரணைகளின் மூலம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.
பாதுகாப்பு காரணங்களுக்காக வெலே சுதா நீதிமன்றில் முற்படுத்தப்படாத போதிலும் அவரது மனைவி மற்றும் மனைவியின் உறவினர், சகோதரி ஒருவரும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.
(ற)

# நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்வதற்குத் தயார்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு



கொழும்பு, பெப்.6
தனக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தான் எதிர் கொள்வதற்குத் தயார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.
இவ்வாறான சவால்களை எதிர்நோக்குவதற்கு தான் ஒரு போதும் அஞ்சப்போவதில்லை எனவும், எதிர்க்கட்சியினரால் நாடாளுமன்றத்தில் தனக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்க முடிந்த போதிலும் தன்னை வெளியேற்ற முடியாது என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
உண்மையை வெளிக்கம்போட்டு காட்டுவது நியாயமானது தான். அதேநேரம் தான் எந்தவொரு குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை என்பதை வெளிக்கொணர்வதற்கு இது சரியான தருணம் என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.
கடந்த அரசில் அங்கம் வகித்து பெரியளவில் மக்கள் பணத்தை கொள்ளையிட்ட ஊழல் மோசடி மிக்க அரசியல்வாதிகள் கடும் அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
அத்துடன் அவர்கள் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்படக் கூடும் எனும் அச்சம் காரணமாக ஆளும் கட்சியினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களை திசை திருப்ப முயற்சித்து வருகின்றனர் என அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார். (ற)


# பந்துலவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு

## முறைப்பாடு பதிவு செய்தது இலங்கை ஆசிரியர் சங்கம்



கொழும்பு, பெப்.6
முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு எதிராக கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கத்தால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சராக பந்துல குணவர்த்தன கடமையாற்றிய காலத்தில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
மஹிந்தோதய மாதிரி பாடசாலை அமைப்பதற்காக உரிய விலை மனுக் கோரல்கள் பின்பற்றப்படவில்லை எனவும், பெரியளவில் பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
கணனி மென்பொருள் கொள்வனவு செய்வதற்காக 4 ஆயிரம் மில்லியன் ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளது. கற்பனை செய்து பார்க்க முடியாதளவு பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு திட்டங்களில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (ற)





லஞ்சம் மற்றும் ஊழல், மோசடி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் ஜே.டி. பாலபட்டபெந்தியை பதவி விலகுமாறு கோரி நேற்று மதியம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. ஊழல் எதிர்ப்பு முன்னணி இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. லஞ்சம் பெற்றமை உள்ளிட்ட சில ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் ஆணைக்குழுவின் தலைவரை நீக்கி விட்டு, திறமையான அதிகாரியை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (ற)

# சபை அமர்வில் கலந்துகொள்ள திஸ்ஸவுக்கு அனுமதி

கொழும்பு, பெப்.6
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறும்போது அவற்றில் கலந்துகொள்ள அனுமதி வழங்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று, சிறைச்சாலைக்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.
சபை அமர்வுகளில் கலந்துகொள்ள திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸவினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். இருப்பினும் நேற்று திஸ்ஸ அத்தநாயக்கவை பொலிஸார், நீதிமன்றத்தில் முற்படுத்தவில்லை. (ற)

# இலங்கையின் மண்டேலா மைத்திரிபால சிறிசேன

## அசாத் சாலி புகழாரம்

கொழும்பு, பெப்.6
ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலவிற்கு ஆதரவு வழங்கிய கட்சிகளுக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதுவரை நன்றி கூறவில்லை என மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி குற்றம் சாட்டியுள்ளார்.
நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
"எமக்கு ஒரு முன்மாதிரியான தலைவர் கிடைத்துள்ளார். எமது நாட்டில் ஒரு நெல்சன் மண்டேலா இருப்பாரராகவிருந்தால் அது மைத்திரிபால சிறிசேனவாகவே இருக்கும்.
இந்த தலைவரை பார்த்து அமைச்சர்கள் கற்றுக்கொள்ள வேண்டும், பிரதமர் முதல் அனைவரும் மைத்திரிபாலசிறிசேனவை முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
அவரின் வெற்றிக்காக நாம் அனைவரும் பணியாற்றியது ஒரேமாதிரியாக, ஒரே நோக்கத்துக்காக. இந்நிலையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதுவரை மைத்திரி ஆட்சிக்கு ஆதரவு வழங்கிய கட்சிகளுக்கு நன்றி கூறவில்லை.
ஆதரவு வழங்கிய கட்சிகளுடன் பிரதமர் கலந்துரையாட வேண்டும். அவர்களது எதிர்பார்ப்புகள் என்ன? அவர்களது பிரச்சினைகள்? அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை இதுவரை பிரதமர் கேட்கவில்லை.
அவருக்கு கடமைப்பாடு ஒன்று உள்ளது. நாம் இதனை கோபத்துடன் தெரிவிக்கவில்லை, எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து நாம் பொது எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்கினோம். இந்த உத்வேகத்தை தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டுசெல்ல வேண்டும்.
இன்னும் மூன்று மாதங்களில் ஒரு பொதுத் தேர்தல் வரவிருப்பதை அனைவரும் நினைவில் கொள்வது நல்லது"– என்று தெரிவித்துள்ளார். (ற)

கண்ணீர் அஞ்சலி



நேற்று (05.02.2015) வியாழக்கிழமை இயற்கையெய்திய எமது வைத்தியசாலையில் பரிசாரகராகப் பணியாற்றும் சி.கெங்காதரன் அவர்களின் அன்பு மனைவி திருமதி கெ.வனித்தா அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
பணியாளர் நலன்புரிசங்கம், கைதடி.
(98540)(4.3.7)

கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி சிவகுமார் சுமதி அவர்களின் அன்புத் தந்தையாரான

தம்பிப்பிளை சிவலிங்கம்

இறைபதமடைந்ததையிட்டு அவரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.

06 FEB 2015



# ஹக்கீமின் முடிவால் மு.காவுக்குள் பிளவு

## பதவியை விட்டு விலகினார் ஜெமீல்

## சமரசப் பேச்சுகளில் உயர்பீட உறுப்பினர்கள்

கொழும்பு, பெப்.6

கிழக்கு மாகாண முதலமைச்சர் விவகாரத்தால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விட்டுக்கொ டுக்க முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டை மு.கா. தலைமை எடுத்துள்ளபோதும், முதல்வர் விவகாரம் தொடர்பான தலைமையின் முடிவு மு.கா. உறுப்பினர்கள் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு வழங்க கட்சித் தலைவர் ஹக்கீம் தீர்மானித்ததையடுத்தே இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு முதலமைச்சுப் பதவியை வழங்க கட்சியின் தலைமை தீர்மானித்ததையடுத்து, மு.காவின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், குழுக்களின் தலைவருமான எம்.ஏ.ஜெமீல் தனது மாகாண சபை உறுப்பினர் பதவியை விட்டு விலகத் தீர்மானித்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை மு.கா. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கையளிக்க முயன்ற போதிலும் அவர் அதை நிராகரித்ததையடுத்து, இராஜாங்க அமைச்சரும், கட்சியின் செயலாளருமான ஹசன் அலியிடம் கையளித்துள்ளார். இதையடுத்து, ஜெமீல் உள்ளிட்ட அதிருப்திடைந்துள்ள தரப்பினரை சமரசப்படுத்தும் முயற்சியில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

"அம்பாறை மாவட்டத்தில் 75 சதவீத மக்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வாக்களித்து வருகின்றனர். இருப்பினும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அம்பாறை மாவட்டத்தைத் தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றது. முதலமைச்சுப் பதவியை அம்பாறை மாவட்டத்துக்குக் கொடுத்தால் தனது தலைமைப் பதவி பறிபோகும் நிலைமை ஏற்படும் என்பதனாலே மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அதை மு.கா. தல்லவர் ஹக்கீம் வழங்கியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் கடந்த காலங்களில் தலைமைக்கு எதிராக செயற்பட்டு வந்தார். அதனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவை எதிர்த்து வாக்களிக்க அவர் செல்லவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூதை கட்சியிலிருந்து ஓரங்கட்டுவ தற்காகவே முதலமைச்சர் பதவியை ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது" - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ற-சி)

# மஹிந்த ஆட்சியில் பொருளாதாரத் தரவுகள் மறைக்கப்பட்டதால் பயங்கரமான நிலையில் நாடு

கொழும்பு, பெப்.6

"மஹிந்த ஆட்சியின்போது பொருளாதாரம் குறித்த தரவுகள் மூடி மறைக்கப்பட்டன. அவற்றை படிப்படியாக ஆராய்ந்து வருகின்றோம். அந்த வகையில் நாட்டில் பொருளாதாரம் பயங்கரமான கட்டத்தில் இருக்கின்றது. அதை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்."

- இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்டத்தில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரை யாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய அரசின் இடைக்கால வரவு - செலவுத் திட்டமானது 99 சதவீதமான மக்களுக்கு நன்மையளிக்கும் வகை யில் உள்ளது. வரவு - செலவுத்திட்ட பற்றாக்குறையைக் குறைத்துள் ளோம். மொத்த தேசிய உற்பத்தியில் 4.4 வீதமாக அதைக் கட்டுப்படுத்தியுள்ளோம். அத்துடன், கடந்த காலங்களில் மொத்த வருமானமும் அதிகரிக்கப்பட்டிருந்தது. அது குறைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பொருளாதாரத் தரவுகள் மூடி மறைக்கப்பட்டன . சர்வதேச முதலீடுகள் குறைந்தன. இவை தொடர்பாக சர்வதேசத்துடன் இணைந்து சுமுக உறவை ஏற்படுத்தி நிலைமையை மாற்றவேண்டும். அத்துடன், பட்ஜட் தொடர்பில் 7ஆம் திகதி மேலதிக வாக்குகள் வழங்கப்படும்" - என்றார். (ற-சி)

# சீனாவின் 'போர்ட் சிட்டி'யை தொடர்ந்து முன்னெடுக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப்.6

சீனாவால் கொழும்பில் முன்னெடுக்கப்படும் போர்ட் சிட்டி எனப்படும் துறைமுக நகர நிர்மாணப் பணிகளை தொடர ஜனாதிபதி மைத்திரிபால தலை மையிலான புதிய அரசு தீர்மானித்துள்ளது.

நேற்றுக் கூடிய அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தில் முன்னர் ஆட்சியில் இருந்த மஹிந்த அரசு பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத் தப்பட்டிருந்தது. இந்தநிலையில், அது இடை நிறுத்தப்படும் என்று முன்னர் கருதப்பட்டது.எனினும், இதனைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் சீனா செல்லும் போது பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-சி)

# வடக்கு மாணவருக்குத் தகரத்தில் அடைத்த மீன்

கொழும்பு, பெப். 6

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் வகைகளை, இலங்கைக்கான ஜப்பான் தூது வர், நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்காவிடம் அண்மையில் வழங்கினார். உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்த நன்கொடை வழங்கப்பட்டது. (அ)

### தேசியக்

நல்லூரில் பிரதேச சபைக்கான தலைமையகக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"நேற்று முன்தினம் ஏன் தேசியக் கொடி ஏற்றவில்லை என்று தொலைபேசியில் கேட்டனர். சபைத் தீர்மானத்துக்கு அமையவே ஏற்றவில்லை என்று கூறினேன். அது தொடர்பில் விசாரணைக்கு கொழும்புக்கு அழைத்தால் 10 ஆம் மாடிக்கு வருமாறு கூறினர். அப்பொழுதுதான் நினைத்தேன் இங்கு கெடுபிடிகள் இன்னும் நீங்கவில்லை என்று"- இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (ற-5)

### அரசியல்

முன்னிலை சோஷலிஸக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பலர் இதில் பங்கேற்றனர்.

கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த வெள்ளை நிற பதாகையில், 'அரசியல் கைதிகளை விடுதலை செய்!', 'காணாமாக்கல்களை - கடத்தல்களை வெளிப்படுத்து!', 'குமார் குணரட்னத்தின் அரசியல் உரிமையை பறிக்காதே!' என வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

நேந்று வியாழக்கிழமை ஆரம்பமான இந்தக் கையெழுத்து வேட்டை நாடுமுழுவதும் கொண்டு செல்லப்படவுள்ளது. இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை களுத்துறையிலும், நாளை சனிக்கிழமை காலியிலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரத்திலும், 9 ஆம் திகதி திங்கட் கிழமை கேகாலையிலும், 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பதுளையிலும், 11ஆம் திகதி புதன்கிழமை கண்டியிலும் இடம் பெறவுள்ளன. (ற-சி)

### வடக்கில்

"இராணுவத் தேவைக்கு புறம்பாகவும் வடக்கில் இராணுவத்தினரால் காணிகள் சுவீ கரிக்கப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் முழுமையாகத் திரட்டப்பட்டு வருகின்றன. அந்தக் காணிகள் தொடர்பில் விரைவில் முடிவு எடுக்கப்படும்"- என்றும் அவர் கூறினார். (ற-5)

### ஓமந்தை

விலக்கப் பட்டிருந்தது.

மக்கள் சோதனையின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்பட் டிருந்தனர். கனரக வாகனங் கள், குறிப்பாக இரும்பு உள் ளிட்ட பொருள்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மாத்திரமே சோதனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் திடீரென, ஏ-9 பிரதான வீதியில் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தடைகள் ஏற்படுத் தப்பட்டது. அத்துடன் சோதனை நடவடிக்கைகளும் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கே.ஜே. ஜெயவீரவிடம் கேட்ட போது,

"ஓமந்தை சோதனைச் சாவடியிலிருந்து ஒரு போதும் சோதனை நடவடிக்கைகள் அகற்றப்படவில்லை. எனது பெயரைப் பயன்படுத்தி, சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால் அவ்வாறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஓமந்தை சோதனைச் சாவடியின் நடைமுறைகளை இலகுபடுத்தியுள்ளோம். குறிப்பாக மரக்கறிகளுடன் செல்லும் வாகனங்களை இலகுவில் செல்வதற்கு அனுமதித்துள்ளோம். இவ்வாறான நடவடிக்கைகள்தான் முன்னெடுக்கப்பட்டுள்ளனவே தவிர, சோதனை நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவில்லை" - என்று கூறினார். (ற-5)

### பாதுகாப்பு

பின்னர், இந்தப் பகுதிகளின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்'' என்று தெரிவித்தார். (ற-5)

### ரவிகரனின்

சிவில் உடையிலிருந்த குறித்த நபர் வீட்டினுள் வந்து, உங்கள் வீட்டில் இராணுவத் தளபாடங்கள் இருக்கின்றது சோதனை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நீங்கள் யார் என்று மாகாண சபை உறுப்பினர் கேட்டதற்கு, வட்டுவாகல் கடற்படை முகாமிலிருந்து வருகின்றேன். ரவி பெர்னாண்டோ என்று தன்னை அறிமுகம் செய்து விட்டு, வீட்டை சோதனையிட முயன்ற போது ரவிகரன் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வாகனத்திலிருந்து வீட்டுக்குள் எடுத்துச் சென்ற பொருள்களை வீட்டு முற்றத்தில் வைத்துள்ளார் ரவிகரன். அத்துடன் பொலிஸ் அனுமதியிருந்தால் மாத்திரமே வீட்டைச் சோதனையிட முடியும் என்று அவர் தெரிவிக்க ஆட்டோவில் வந்த நபர் திரும்பிச் சென்றுள்ளார். (ற-5)

### நஸீர்

முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கும் இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் இறுதி இரண்டரை வருடங்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படவேண்டும். இதற்கமைய கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

அதையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஹபீஸ் நஸீர் அஹமட்டினை நியமிக்க கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தீர்மானித்துள்ளார். இந்தத் தீர்மானத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ முன்னிலையில் கிழக்கு மாகாண முதலமைச்சராக ஹபீஸ் நஸீர் அஹமட் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் தெரிவித்துள்ளது. (ற-10)



## ஆழியவளை சி.சி.த.க.வி.இல் சரஸ்வதி சிலை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தில் பழைய மாணவர்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள சரஸ்வதி சிலை கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் மு.சிற்றம்பலம் சிலைக்கு மாலை அணிவித்து சிலையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் ச.திரவியராசாவும், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற தபால் அதிபர் வி.இராஜேந்திரமும் கலந்து கொண்டனர். (வ)

## மறவன்புலவில் 90 பானைகள் வைத்து நடைபெற்ற பொங்கல்

சாவகச்சேரி, பெப். 6

மறவன்புலவு வள்ளக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வாரம் தைப்பொங்கல் விழா மறவன்புலவு க.சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

ஆலய வளாகத்தில் 90 பானைகள் வைத்து பொங்கல் செய்து விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உட்பட பல கல்வியியலாளர்கள், கிராமப் பெரியார்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றன.



நிகழ்வில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை உரை நிகழ்த்துகையில்: "தென்மராட்சி பிரதேசம் 60 கிராம அலுவலர்களைக் கொண்ட பெரும் பிரதேசம். அதில் தென் மராட்சியின் தெற்குப் பிரதேசம் நல்ல வளமான பூமி. சிறப்பான விவசாய நிலப் பரப்பைக் கொண்டது. இங்கு வாழ்கின்ற மக்கள் சுறுசுறுப்புள்ள விவசாயிகள். தங்கள் விளை நிலங்களில் நெல்லைப் பயிரிட்டு நல்ல பயன் பெற்று வாழ்ந்தார்கள்.

விவசாயத்துடன் தமது பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை ஊட்டினார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஆறு பிள்ளைகளைக் கொண்டவர்களாக அன்றைய குடும்பங்கள் சிறப்பாக இருந்தன. தற்போது அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

குடும்பங்களில் இரண்டோ ஒன்றோ பிள்ளைகளே இருக்கின்றனர். குடும்பத்தை திட்டமிட்டு வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழ் மக்களது எண்ணிக்கை விகிதாசாரம் குறைந்து கொண்டு செல்கிறது. இந்த நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும். எனவே, தமிழ் மக்கள் தமது குடும்பங்களில் குறைந்தது 4 பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனை நாம் என்றும் மறந்து விடலாகாது என்றும் குறிப்பிட்டார். (வ-131)

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டில் குருநகர் மாடிக் குடியிருப்பு



கொழும்புத்துறை, பெப். 6

குருநகர் தொடர்மாடிக் குடியிருப்புத் திட்டத்தில் உள்ள தண்ணீர்த்தாங்கியுடனான குடிதண்ணீர் விநியோகம் கடந்த பல வருடங்களாக தடைப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் குடியிருக்கும் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தொடர்ந்து குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி வருகின்றன.

கடந்த வருடம் இந்தத் தொடர்மாடிக் குடியிருப்பு கடந்த அரசால் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டபோது குறித்த தண்ணீர் தாங்கியும் புனரமைப்புச் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டு அழகாகக் காட்சி தருகின்ற போதிலும், இதுவரை அதனூடான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது யாழ். மாநகர சபையின் பிரதான தண்ணீர்த் தாங்கியிலிருந்து செல்லும் குடிதண்ணீர் ஒரு சில நீர்க் கம்பங்கள் வழியாக குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கு வழங்கப்படுவதால் அனைத்துக் குடும்பங்களும் நீரைப்பெற முடியாதுள்ளது. அதேவேளை சூழலில் உள்ள மக்களும் இதே நீர்க் கம்பங்களிலேயே நீரைப் பெற்று வருவதால் நெருக்கடி நிலை காணப்படுகின்றது. எனவே பிரதான நீர்த்தாங்கியிலிருந்து குழாய்மூலம் அந்தக் குடியிருப்பு நீர்த்தாங்கிக்கு நீரை நிரப்பி பின்னர் நீர்க்கம்பங்கள் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கும் மு[illegible]னைய நடைமுறையை[illegible] செயற்படுத்தி குடிதண்ணீ[illegible] தட்டுப்பாடின் றிப் பெ[illegible] நடவடிக்கை எடுக்கு மா[illegible] மக்கள் கோரிக்கை விடு[illegible]கின்றனர். (வ-135

## சுதுமலை வடக்கு நாமகள் முன்பள்ளி கால்கோள் விழா

சுதுமலை வடக்கு நாமகள் முன்பள்ளியின் 2015ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் கால் கோள் விழா நேற்று முன் தினம் நடைபெற்றது.

நாமகள் சனசமூக நிலைய கட்டடத்தில் தலைவர் செந்தில்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக வலி. தென் மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி. மகேந்திரன் மற்றும் உதயரட்ணம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



விருந்தினர்களும், மாணவர்களும் சுதுமலை அம்மன் கோவில் முன்றிலில் இருந்து மேளதாளங்களுடன் ஊர்வலமாக முன்பள்ளிக்கு அழைத்து வரப்பட்டனர். இதன்போது அந்தக் கிராம மக்கள் தமது வீடுகளுக்கு முன் பாக மாணவர்களுக்கு மலர் தூவி, இனிப்புப் பண்டங்கள் மற்றும் பரிசுப் பொதிகளும் வழங்கினர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கியதுடன், குறித்த முன்பள்ளி ஆசிரியரிடம் கற்றல் உபகரணங்களையும் கையளித்தார். (வ)



## இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயன்றோர் கைது



கொழும்பு, பெப்.6

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் தங்கம் கொண்டு செல்ல முயன்ற இந்தியர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இந்தியாவின் சென்னை நோக்கிச் செல்லவிருந்த தம்பதியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது பயணப் பையில் இருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான 6 தங்க கம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து சு[illegible]கப் பிரிவினர் விசார[illegible]ணை மேற்கொண்டு வருகின்றனர்.(வ)

## புவேந்தன் பாலர் பகல் பராமரிப்புநிலையச் சிறாரின் உழவர் வி[illegible]

தென்மராட்சி, பெப்.6

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் உழவர்தின விழா தைப்பூச தினத்தன்று இடம் பெற்றது.

நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.தயாகுமாரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் சிறார்களால் வயல் உழவு, நெல்விதைப்பு, களை பிடுங்கல், அரிவி வெட்டல், புதிர் எடுத்தல், நெல் குத்துதல், பொங்கலிடல், உறவினர்களுடன் உண்டு மகிழ்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடித்துக் காண்பிக்கப்பட்டன. (வ-9)





# சுகாதாரக் கேட்டுடன் கல்வி நிலையங்கள்

## உரிமையாளர்களுக்கு எதிராக இனிமேல் வழக்கு

யாழ்ப்பாணம்,பெப்.6
யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங் களில் டெங்கு பரவும் சூழல் காணப்படுவதோடு சுகாதாரம் பேணப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளதோடு அடுத்த தவணையின் போது நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் உத்தியோகத்தர்களும் பொலிஸா ரும் இணைந்து அண்மை யில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

அவ்வேளையில் நகர்ப் பகுதியில் உள்ள, காலை தொடக்கம் பிற்பகல் வரை வகுப்புக்கள் இடம்பெறும் தனியார் கல்வி நிறுவனங் களில் டெங்கு பரவும் சூழ் நிலை காணப்பட்டுள்ளது. அதனால் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன் அங்கு மலசல கூட வசதி உள்ளிட்ட சுகா தார வசதிகள் காணப்படவில்லை. அவ்வாறு சுகாதாரம் பேணாத நிலையில் உள்ள கல்வி நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும் தற்போது அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.அடுத்த தவணை வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் கூறப் பட்டுள்ளது.

**சுகாதாரம் பேணாத நிலையில் உள்ள கல்வி நிலையங்க ளின் உரிமையாளர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.**

வாராந்தம் ஆயிரத்துக் கும் மேற்பட்ட மாணவர் கள் கல்வி கற்கும் இந்த தனியார் நிறுவனங்கள் டெங்குநுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் காணப் பட்டதால் பரிசோதனை யில் ஈடுபட்ட சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார பரிசோத கர்கள் கல்வி நிறுவனங் களை நடத்தியோரை எச் சரிக்கை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சில தனியார் கல்வி நிறுவனங் களில் வகுப்பறைகளுக்கு வெளியே பெருமளவு மதுபான வெற்றுப்போத் தல்கள் காணப்பட்டதாகவும், இவற்றை அப்புறப் படுத்துமாறு கூறியபோது நிறுவனத்துக்கு முன்பாக வீதியோரத்தில் காணப் பட்ட வெற்றுப் போத் தல்களை மாணவர்கள் எடுத்துவந்து குவித்துள் ளதாக பதிலளிக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப் பட்டது. (த-4-9)

## வாழைப்பழம் அதிகம் உற்பத்தி

வடமாகாணத்தில் பழ உற்பத்தியில் கடந்த வருடம் வாழைப் பழமே அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 37 வீதமான. உற்பத்தி மேற் கொள்ளப்பட்டுள்ள தாக வடமாகாண விவ சாயத் திணைக்களத் தின் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் பழ உற்பத்திகளில் வாழைப்பழம், மாம்பழம், பப்பாசிப் பழம், அன்னாசி, திராட்சைப்பழம், பொசன் ஆகியன பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றில் கடந்த வருடம் வாழைப்பழம் 37 வீதத்திலும், மாம் பழம் 35 வீதத்திலும், பப்பாசிப்பழம் 8 வீதத் திலும், திராட்சைப் பழம் 2 வீதத்திலும், அன்னாசி 3 வீதத்திலும், பொசன் ஒரு வீதத்திலும், ஏனைய பழங்கள் 14 வீதத்திலும் உற்பத்தி செய்யப்பட் டுள்ளன.

இவற்றில் அதிகமாக 2 ஆயிரத்து 158 ஹெக்ரேயரில் 37 வீதமான வாழைப் பழ உற்பத்தி மேற்கொள் ளப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் உரும்பிராய், புத் தூர் ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் பம்பைமடு, கனகராயன் குளம், செட்டிக்குளம், பாவற் குளம், ஓமந்தை ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாறு, முழங்காவில், புன்னை நீராவி, கிளிநொச்சி மேற்கு ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் மடு, மாந்தைமேற்கு, நானாட் டன் ஆகிய இடங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத் தில் விசுவமடு, இரணைப் பாலை, முத்தையன்கட்டு, பாண்டியன் குளம் ஆகிய இடங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதே வேளை, கடந்த வருடம் 4 ஆயிரத்து 886 ஹெக் ரேயரில் மொத்த பழ உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு 1 இலட்சத்து 10 ஆயிரத்து 322 மெற்றிக்தொன் உற்பத்தியும் பெறப்பட்டுள்ளது.

(த-14)

## தொண்டி வள்ளங்களாலும் உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6
வாரத்தில் மூன்று தினங் கள் எமது கடல் பகுதியில் அத்துமீறிப் பிரவேசிக் கும் இந்திய இழுவைப் படகுகளைத் தவிர ஏனைய நாள்களில் இரவு வேளை களில் அதிவேகத்துடன் வரும் இந்திய தொண்டி வள்ளங்களாலும் தாங் கள் பாதிக்கப்படுவதாக நயினாதீவு கடற்றொழி லாளர் சங்கத்தினர் தெரி வித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக் கையில்,

நயினாதீவுக் கரையோ ரப் பகுதிகளை அண்டி இந் தப் படகுகளில் சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு வலைக்களைப் போடும் இந்திய மீனவர்கள், நாங்கள் போடும் வலைகளையும் சேர்த்து எடுத்துச் சென்று விடுகின்றார்கள். எமது பகுதியின் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் கூட நாங்கள் தொழில் செய்ய முடியாதிருக்கின்றது.

இரவு வேளைகளில் வேகமாக வரும் இந்தப் படகு களின் தொல்லைகளால் எமது படகுகளைக் கூடச் சரியாக ஓட்ட முடியாதுள் ளது. மூன்று, நான்கு கிலோ மீற்றர் தூரம் வரை இந்திய மீனவர்கள் வலைகளைப் போடுவதால் நாங்கள் தொழில் செய்ய முடியாது கஷ்டப்படுகிறோம். மீனவர்



இலங்கையின் 67ஆவது சுதந்திர தினமான நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தேசியக் கொடி ஏற்றப்பட்டுப் பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதை இடம்பெற்றது. (த-21)

## மீன்களின் விலைகள் வீழ்ச்சி

எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து நயினாதீவில் மீன்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக நயினாதீவு வட- தெற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. ஒரு கிலோ ரூபா 300க்கு விற்பனை செய்தஉயர்ரக மீன்கள் ரூபா 260ஆகவும், ரூபா 250க்கு விற்பனையானநடுத்தரவகை மீன்கள் ரூபா 150 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. (த-7)

# நிலத்தடி நீர் வளம் பேண நடவடிக்கை

## மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு





கரவெட்டி, பெப்.6
வடக்கு மாகாணத்தின் நிலத்தடி நீர் வளத்தைப் பேண வடக்கு அரசு என்ற ரீதியில் எமது மாகாண சபை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண் டுள்ளது. இனியும் மேற் கொள்ளும். அதற்கு அனைவரின் ஒத்துழைப்பை யும் எதிர்பார்க்கிறோம் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடமராட்சி கரணவாய் முதலைக்குழி பகுதியில் வடமாகாண முதலமைச்சரினால் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு ஒதுக் கப்பட்ட நிதியில் இருந்து கரவெட்டி பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை நாடா வெட்டித் திறந்து வைத்த பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித் தவை வருமாறு:-

எமது மாகாணத்தின் நன்னீரைப் பாதுகாப்பதில் பல்வேறு சவால்கள் ஏற்பட் டுள்ளன. குறிப்பாகத் தொண்டமானாறு பகுதியில் தடுப்பணை அமைக்கப்பட்டிருந்தாலும் அதில் உள்ள சில குறைபாடுகள் காரண மாக கடல் நீர் நன்னீருடன் கலக்கும் அபாயம் இருக் கிறது. ஆனால் அதை தடுக் கத் தடுப்பணையை வலுவாக அமைக்க அதிகளவான நிதி தேவைப்பட் டது. இப்போது அதற்கு உலக வங்கி நிதி ஒதுக்குவதாகத் தெரிவித்திருக்கிறது.

ஆனாலும் யாழ்ப்பாணத் தைப் பொறுத்தவரை நீர்ப் பிரச்சினை ஏனைய மாவட் டங்களோடு ஒப்பிடும்போது வித்தியாசமாக் இருக்கிறது. ஏனென்றால் யாழ்ப்பா ணம் நிலத்தடி நீரையே நம்பியிருக்கிறது. இந்த நிலையில் நீர் முகாமைத் துவத்தைச் சரியான வகையில் நாம் முன்னெடுக்க நிர்ப் பந்தித்து இருக்கிறோம். இதை விடுத்து நன்னீரை விரயமாக்கினால் இப்பகுதிகளில் நீர் இல்லாமல் இடம் பெயர வேண்டிய நிலைக் குத் தள்ளப்படுவோம்.

அடுத்ததாக வலிகாமம் கழிவு ஓயில் நிலத்தடி நீரில் கலப்பது தொர்டர்பில் நாம் அதிக அக்கறை எடுத்திருக்கிறோம். அது தொடர்பில் ஆராய மிகவும் திறமை வாய்ந்த நிபுணர்களை உள்ளடக் கிய குழு ஒன்றை அமைத்து இருக்கிறோம். ஆனாலும் இதற்கு அடுத்தபடியாகப் பொதுமக்கள் சாதரண மாக கிணறுகளில் காணப் படுகின்ற தூசுப்படிவுகளை வைத்து அதனைக் கழிவு ஓயிலாகப் பயப்படுகின்ற நிலையும் சில பிரதேசங் களில் உணரப்படுகிறது.

எனவே எமது நிபுணர் குழு வினரும் அது தொடர் பில் ஆராய்வுகளை நடத்தி அதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துவர்-என் றார்.

சுமார் 350 குடும்பங்கள் பயன்பெறக் கூடிய வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நீர்த்திட்ட ஆரம்ப நிகழ் வில் வடக்கு மாகாண மீன்பிடி நீரியல் வள அமைச் சின் செயலாளர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன், சிவயோகன், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் வியாகேசு உட்பட பிரமுகர்களும் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர். இதன் பின்னர் மண்டானில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டடத்தையும் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் நாடா வெட்டி திறந்து வைத்தார். (த-109)

# கழிவு ஒயில் பிரச்சினைக்கு தீர்வு வேண்டி ஆர்ப்பாட்டம்

## சுன்னாகத்தில் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம், பெப். 6
சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ள பிரச்சினைக்குத் தற்காலி கத் தீர்வு, நிரந்தரத் தீர்வு என்பன உடனடியாக ஏற் படுத்தவேண்டும் என்று வலியுறுத்திச் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலுக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் 50 இற்கும் மேற்பட்டடோர் கலந்து கொண்டனர்.

பாடசாலைக் கிணறுகளி லும் ஒயில் கலந்துள்ள மையால் மாணவர்களுக்குத் தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. 'மாணவருக்குத் தூய நீரை வழங்கு, கண்மூடி மௌனியாக இருக்காதே, தமிழினத்தை அழிக்காதே, மாகாண அரசே நட வடிக்கை எடு, தூயநீரை நஞ்சாக்காதே, நிரந்தரத்தீர்வைப்பெற்றுத்தா, மக்களை முட்டாள்களாக நினைக்காதே, மக்கள் உயிர்கள் மீது அரசி யல் நடத்தாதே, மக்களை ஏமாற்றாதே, மாகாண அரச மௌனம் எதற்கு, இடர்ப் பிரதேசமா கப் பிரகடனம் செய், இலவச பரிசோதனைக்கு ஏற்பாடு செய், எண்ணெய்ப் படையை விரைவாக அகற்று' ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அங்கு உரையாற்றிய சங் கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின்,

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் 39 பாடசாலைக ளில் குடிதண்ணீர் சம்பந்த மான பிரச்சினை ஏற்பட் டுள்ளது. மக்கள் தண்ணீர்ப் பிரச்சினைகளை எதிர்கொண் டுள்ளனர். நொதேர்ண் பவர் நிறுவனத்தை மூடுமாறு நீதி மன்று உத்தரவிட்டாலும் தண்ணீர்ப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை. கிணற்று நீரைப் பரிசோதிக்க ஒரு கிணற்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அறவிடுகிறார்கள். இந் தப் பிரச்சினைக்கு மாகாண, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலைகளுக்கு மாத்திரம் குடி தண்ணீர் வழங்குவது தீர்வாகாது. இதுவரை 3 பாடசாலைக் கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளது. அரசு மௌனமாக உள்ளது. இங்கு இந்தச் செயற்பாட்டுக்கு அனுமதியளித்தது அரசு தான். இதற்குத் தற்காலிகத் தீர் வும் வேண்டும். நிரந்தரத் தீர்வும் வேண்டும்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு நிறைய அழுத்தம் ஏற்படுத்தப்படுகிறது. அதற்கு என்ன காரணம்?

இந்தப் பகுதியை இடர்ப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும். சில மாகாண அதிகாரிகளும், அரச அதிகா ரிகளும் இதனை மறைக்க முற்படுகிறார்கள்.எனவே இதற்கு உரிய நடவடிக்கை வேண்டும். சகல மக்களும் தமது கிணற்று நீரை இல வச மாகப் பரிசோதிக்க நட வடிக்கை எடுக்கவேண்டும்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நொதேர்ண் பவர் மின் நிலையத்துக்குச் சொந் தக்காரராக உள்ளார். இந்த நிறுவனத்திலி ருந்து 4 லட்சம் லீற்றருக்கும் மேற்பட்ட அளவு கழிவு ஒயில் வெளியேற்றப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் கடந்த வரு டம் 160 கோடி ரூபா இலாப மீட்டியுள்ளது. இவ்வளவு லாபம் எடுத் தும் மக்களுக் குப் பிரச்சினை ஏற்படுத்தக் கூடாது. சுகவீனமுற்ற மாண வர்களுக்குக் கல்வி புகட்ட முடியாது. எனவே உரிய நட வடிக்கை எடுக்க வேண் டும். இது தொடர்பில் சுகா தார அமைச்சு உட்பட 11 அரச நிறுவனங்களுக்கு மனு கொடுத்துள்ளோம் –என்றார். (த–4–86)





# ரோந்து சென்ற பொலிஸார் மீது வவுனியாவில் அதிகாலை சூடு

## ஒருவர் காயமுற்று வைத்தியசாலையில்

வவுனியா, பெப் 6
வவுனியா உளுக்குளம் காட் டுப் பகுதியில் ரோந்து நடவ டிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோ கத்தில் பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவர் காய மடைந் துள்ளார்.

வவுனியா சூடுவெந்தபுலவு பெரிய உளுக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.பிரி யந்த என்ற கான்ஸ்டபிளே காயமடைந்து வவுனியா ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது;–

காட்டுப் பகுதியில் சட்ட விரோத வேட்டையாடல்கள், மரக் கடத்தல்கள் இடம் பெற்று வருகின்றமையால் அங்கு பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவது வழக்கம்.

அவ்வாறு பொலிஸார் ரோந்து சென்ற வேளையே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளாக வும், இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்காக இடியன் வகை கட்டுத் துப்பாக்கி பயன்படுத் தப்பட்டிருக்கலாம் என வும், இந்தச் சம்பவம் பற்றிய விசாரணைகள் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இடம்பெற உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண தெரிவித்தார். (த–21)

# 191 அதிபர்கள் இடமாற்றத்தை உடன் மீள் பரிசீலனை செய்க

## கோருகிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 6
வடக்கில் இடம்பெற்ற 191 அதிபர்களினதும் இடமாற்றங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே மாவட்ட ரீதியாக இட மாற்றச் சபைகள் கூட்டப்பட்டு அதன் மூலம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். வன்னியிலுள்ள 410 ஆசிரியர்களினதும் இடமாற்றத்தை காலக் கிரமத்தில் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாண அதிபர்களுக்கான கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகச் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர்கள் இடமாற்றம் இட மாற்ற சபை ஊடாக மேற்கொள்ளப்படவில்லை. அதனால் பல பக்கச் சார்புகள் இடம்பெற்றுள்ளதாக அதிபர் கள் குற்றம் சுமத்தியுள்ளனர். எனவே இடமாற்றங்கள் முறையாக மேற்கொள்ளப் பட வேண்டும். வடக்கு ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர் இவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்னி ஆசிரியர்கள் 410 பேர் இடமாற்றத்தால் வன்னிக்குச் சென்று அவர்கள் 6 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளனர். அவர்களையும் உரிய முறைப்படி யாழ்ப்பாணத்துக்கு மீள அழைக்கவேண்டும். வடக்குக் கல்வி அதி காரிகளிடம் இடமாற்றம் தொடர்பான முறையான செயற்திட்டம் இல்லை. எனவே அதனைச் செய்ய வேண்டும்.

இடமாற்றம் பெற்று வன்னிக்குச் சென்ற பலர் அரசியல் பின்னணியால் உரிய காலத்தை நிறைவுசெய்யாது திரும்பி விட்டனர். இது பக்கச் சார்பாக செயற்படுவதனைக் காட்டுகிறது. இந்த நடைமுறைகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும்.

யாழ்.வலயத்தில் முறையான இடமாற்றம் வேண்டும். தவறின் இவை குறித்து நாம் போராட்டம் நடத்துவோம். எந்த அதிகாரியாக இருந்தாலும் சட்ட நடவடிக்கையும் எடுப் போம். பின் நிற்கமாட் டோம் – என்றார். (த–4)

# வாழ்வு எழுச்சிப் பணிப்பாளர் நேற்று முதல் பதவி இறக்கம்

வாழ்வின் எழுச்சித் திணைக்கள யாழ்.மாவட்ட பிரதிப் பணிப்பாளர் பதவிக் குறைப்புச் செய்யப்பட்டு வாழ்வின் எழுச்சித் திணைக்கள முகாமையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகை யில் இந்தப் பதவிக் குறைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

வாழ்வின் எழுச்சித் திணைக்கள(சமுர்த்தி) மாவட்ட இணைப்பாளராக நியமிக்கப் பட்ட ஆ.ரகுநாதன், பின்னர் மாவட்ட உத்தியோகத் தராக நியமிக் கப்பட்டார். அதன் பின்னர் மாவட்டப் பிரதிப் பணிப்பாளராக நிய மிக்கப்பட்டிருந்தார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, இவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் அர சியல் கூட்டத்தில் பங்கேற்றி ருந்ததுடன், தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

இந்த நிலையில், புதிய அரசின் வாழ்வின் எழுச்சித் திணைக் களப் பணிப்பாளர் நாயகத்தினால் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு நேற்றுக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில், மாவட்ட பிரதிப் பணிப்பாளராக நிய மிக்கப்பட்டிருந்த ரகுநாதன் பதவிக் குறைப்பு செய்யப் பட்டு வாழ்வின் எழுச்சித் திணைக்கள முகாமையா ளராக நியமிக்கப் பட்டுள்ளார். (த–5)

# முறையற்ற விதத்தில் மீண்டும் மணல் அகழ்வு

## சரவணபவன் எம்.பி குற்றச்சாட்டு

முறையற்ற விதத்தில் இப்போதும் மணல் அகழப்படுகின்றது. பிரதேச செயலர் மணல் அகழ்வதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். நல்லூர் பிரதேச சபையின் புதிய கட்டடத் திறப்பு விழா பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடை பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் தெரிவித்த தாவது:–

நாகர்கோவில் பகுதியில் மணல் அள்ளப்படுகின்றது. மகேஸ்வரி நிதியம் முறையின்றி இதனைச் செய்கிறது. நான் கனிய வள அமைச்சில் இதனை உறுதிப்படுத்தியிருந்தேன். எனி னும் இப்போதும் அங்கு மணல் அள்ளப் படுவதாகத் தெரிகின்றது. நல்லூரில் ஒரு அழகான கட்டடம் திறக்கப்படுகின்றது. முன்னாள் செய லாளர் இதற்காக முழுமையான கடமைகளைச் செய்துள்ளார். பிரதேச சபைத் தவிசாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்பு டன் செயற்பட்டுள்ளனர். இன் னமும் சில கட்டடாங் கள் திறக் கப்படாமல் உள்ளன. வட மராட் சி யில் ஒரு கட்ட டம் திறக்கப்பட் டாமல் உள் ளது– என்றார். (த–7)

06 FEB 2015

# இறுதி நேரப் போராட்டம் கைகொடுக்க கிண்ணம் வென்றது மூளாய் வளர்மதி

யாழ்ப்பாணம்,பெப்.6
அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்தில் மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.
கடந்த புதன்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி அணி மோதிக்கொண்டது.
பலம் பொருந்திய இரண்டு அணிகள் மோதிக் கொண்டதால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்கவில்லை. எதிரணியின் பாதுகாப்பு அரண்களை தகர்ப்பதிலேயே இரு அணிகளும் மும்முரமாக இருந்தன.
ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் தனேஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்திக் கோலாக மாற்ற ஆட்டம் யங்ஹென்றிஸ் பக்கம் சாய்ந்தது. பதிலுக்கு மூளாய் வளர்மதி அணி வீரன் சுதா ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் பழி தீர்க்க ஆட்டம் மீண்டும் இரு அணிகளுக்கும் சாதகமாக மாறியது.
ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றுச் சம நிலையில் இருந்தன.
விறுவிறுப்புக்கள் இரட்டிப்பாக ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆரம்பமானது. இரண்டாவது பாதியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்குக் கோல்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அமைந்த போதிலும் அவை நழுவ விடப்பட்டன. ஆனால் மூளாய் வளர்மதி வீரன் நிசாந்தன் தனக்குக் கிடைத்த வாய்ப்பைக் கோலாக மாற்ற ஆட்டத்தின் இறுதியில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர் நாயகனாக இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக வீரன் சுரேந்திரன் தெரிவானார். சிறந்த வீரனாக மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக வீரன் சுதாவும், சிறந்த கோல் காப்பாளராக சதீஸும் தெரிவானார்கள்.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அராலி பாரதி விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.
(த-23-ரி)

# மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.6
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான தகுதி காண் பரீட்சையில் சிந்தியடைந்தர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. தகுதி காண் பரீட்சையில் சிந்தியடைந்தவர்களைத் தவறாது எழுத்துப் பரீட்சைக்கு வருகை தருமாறு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அஜித்குமார் கேட்டுள்ளார்.
(த-23-ரி)


colombo -Madurai
மதுரை 15700 LKR
செல்லும் பயணிகளுக்கு
Nation Popular Travels & Tours
Colombo – France 48200 LKR
BUY TICKET GET PHONE FREE
0773083820
0114378117, 0214920920, 0244930830
colombo, jaffna, vavuniya


# பல்கலைக்கழக விளையாட்டுச் சங்க தலைவராக மருத்துவர் கண்ணதாசன்

யாழ்ப்பாணம்,பெப்.6
இலங்கைப் பல்கலைக் கழக விளையாட்டுச் சங்கத்தின் நடப்பு வருடத்துக்கான தலைவராக யாழ்.மருத்துவ பீடத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும், யாழ். பல்கலைக்கழகத்தின் விளையாட்டு ஆலோசனை சபைத் தலைவருமான வைத்தியர் எஸ். கண்ணதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
கடந்த ஜனவரி மாதம் வயம்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 14 அரச பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைப் பல்கல்லக்கழக விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அடுத்த வருடம் நடைபெறவுள்ள இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 12ஆவது விளையாட்டு விழாவை யாழ். பல்கலைக்கழகம் நடத்தவுள்ள நிலையில் முதன்முறையாக யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(த-23-ரி)


## கண்ணீர் அஞ்சலி



யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்விகற்கும் எமது நண்பன் மதுரதனின் அன்புத் தாயார்
கெங்காதரன் வனித்தா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது நண்பனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
2016 A/L உயர்தர மாணவர்கள்,
யாழ். இந்துக் கல்லூரி.


# அடுத்த தலைவருக்குப் போட்டி

சர்வதேசத் தடகள சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கான மோதல் வலுத்து வருவது போலத் தெரிகிறது.
உலகளவில் விளையாட்டுத்துறையில் மிகவும் மதிப்பும் மரியாதையும் கொண்ட இந்த அமைப்பின் தலைவராக தற்போது செனகல் நாட்டைச் சேர்ந்த லெமீன் டியாக் இருக்கிறார்.
அவரது பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முடிவடையவுள்ள நிலையில், ஒலிம்பிக் பிரபலங்களான பிரிட்டனின் செபாஸ்டின் கோவும், உக்ரைனின் செர்ஜேய் புப்காவும் சர்வதேசத் தடகள சம்மேளனத் தலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
இருவரும் அந்த சம்மேளனத்தின் துணைத் தலைவர்களாக இருக்கின்றனர்.
செபாஸ்டின் கோ ஆடவருக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் இரு முறை ஒலிம்பிக் பட்டத்தை வென்றவர்.
சாதனையாளர்
அவரை எதிர்த்து போட்டியிடவுள்ள செர் கெய் புப்கா தடியூன்றிப் பாய்தலில் உலகளவில் தனக்கென்று ஒரு இடத்தை பிடித்தவர்.
புப்கா 35 முறைக்கு மேல் தடியூன்றிப் பாய்தலில் உலகச் சாதனை படைத்தவர். அவர் 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர்.
தற்போது உக்ரைன் நாட்டு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக இருக்கும் செஜெய் புப்கா, லெமீன் டியாக் வகுத்த பாதையை மேலும் கட்டியெழுப்ப விரும்புவதாகக் கூறுகிறார்.
இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள சர்வதேசத் தடகள சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிட விரும்புகிறவர்கள் முறைப்படி எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் அதற்கான பதிவைச் செய்ய வேண்டும்.
பின்னர் பீஜிங்கில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள அந்தச் சம்மேளனத்தின் பொதுக்குழு கூட்டத்தில் தேர்தல் நடைபெறும்.
லெமீன் டியாக் சுமார் 25 வருடகாலம் சர்வதேச தடகள சம்மேளனத்தின் தலைவராக இருக்கிறார்.
ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் மிக மிகக் குறைவான அளவிலேயே சர்வதேச அளவில் விளையாட்டுத்துறையின் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
(த)


## வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் கீழ் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| Plumber | - 2350+OT |
| Civil Techni/Painter/Mason | - 2020+OT |
| Heavy Duty Driver (Valid License) | - 2407+OT |
| Machanical Technician / Pump&Mortors | - 2720+OT |
| Supervisor (Cleaning) | - 3100+OT |
| Driver Light vehicle | - 1200 |
| Electrician Helper | - 900+OT |
| Painter Helper | - 900+OT |
| A/C Technician Helper | - 900+OT |

அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். எதிர்வரும் 7ஆம் திகதி நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடைபெறும்.
உடன் தொடர்புகொள்ள:
Lanka Voice 077-7929475
E.mail:lankavoicenafees@gmail.com
Capital Recruitment International (Pvt) Ltd.
No:130,3/1, 3rd Floor Grandpass, Colombo - 14.
L.L No:-2248



Study in CHINA
SICHUAN UNIVERSITY
MBBS
Approved by Sri Lankan Medical
GMC- UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO
* Asia's No 1 Medical / Dental University & 3rd largest in the world
* 33 hospitals in the campus including Asia's biggest hospital building with more than 5,000 beds
ENGINEERING
Civil / Software
100% Guaranteed Employment in USA, Canada UK, Australia & Europe After Study !!!
→ No IELTS / No Interview
→ No Bank Balance
→ 35% Scholarships Available
→ 100% Visa Success
→ Part time Job Allowed
Free Seminar/ Counseling Mon to sat 9AM-3PM
iCS Study Overseas
107 B 1/1 ,Galle Road, Colombo - 06
97, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 4926222 , 076 7013060



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் உத்தியோகத்தர்கள், வெளிநாடுசெல்வோர் தொழில்தேடுவோர், வீட்டுப்பெண்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
சனி/ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 07.02.2015
அடிப்படை ஆங்கிலம்
SAMSON 279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313



கணக்கீடு
A/L 2015 Day ஆரம்பம் சனி
Paper
பிரிவு I 6 a.m - 7 a.m
பிரிவு II 3 p.m - 4 p.m
A/L 2016 ஆரம்பம் சனி
பிரிவு I 8 a.m பிரிவு II 5 p.m
A/L 2017
சனி, ஞாயிறு 9 a.மீ
A/L Day(2000 M.C.Q)
S.தவா Universal,கந்தர்மடம்.


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.